விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபது

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 மாசி 19 வியாழக்கிழமை (03.03.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 074

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# விமானப்படையின் தாக்குதல்களில் மக்கள் எவரும் உயிரிழக்கவில்லை



## ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் இடம்பெற்ற யுத்த முன்னகர்வுகளின் போது, விமானப்படையினர் மேற்கொண்ட தாக்குதல்களில் அப்பாவி பொதுமக்கள் எவரும் உயிரிழக்கவில்லை. அவ்வாறு இடம்பெற்றிருந்தால் நாட்டின் வரலாறு வேறுவிதமாக எழுதப்பட்டிருக்கும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். விமானப்படையின் 60ஆவது ஆண்டு நிறைவு விழாவை நேற்று ஆரம்பித்து உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## 24 மணி நேரத்துக்குள் குடும்பப்பதிவு வல்வெட்டித்துறையில் காலக்கெடு திண்டாடினர் அப்பகுதி மக்கள்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறையில் வசிக்கின்ற மக்களை நேற்று காலை 10 மணிக்கு முன்னதாகக் குடும்பப் புகைப்படங்களுடன் தம்மிடம் பதிவு செய்து கொள்ளவேண்டும் என படைத்தரப்பினர் விடுத்த அறிவிப்பு அப்பகுதி மக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் பொதுமக்களைப் பதிவு செய்வதற்காக படைத்தரப்பினர் மேற் கொள்ளும் நடவடிக்கைக்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்

(20ஆம் பக்கம் பார்க்க)

## அரசுடனான சந்திப்பு இன்று நடைபெறாது



### மாவை எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் தமிழ்க் கூட்டமைப்பிற்கும் இடையில் இன்று முக்கிய சந்திப்பொன்று இடம்பெறவுள்ளதாக வெளியான செய்திகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மறுத்துள்ளது.

இவ்விரு தரப்பினருக்கும் இடையில் இன்று இடம்பெறவிருந்த பேச்சுவார்த்தையில் அதிகாரப்பகிர்வு தொடர்பாக ஆராயப்படவிருந்ததாக சில ஊடகங்கள்

(20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை மீனவர் 45பேர் நாளை விடுதலையாவர்

(சென்னை)


இந்தியாவில் கைது செய்யப்பட்ட இலங்கை மீனவர்களுள் 45 பேர் நாளை விடுதலை செய்யப்படவுள்ளதாக இந்திய பாதுகாப்பு படை தெரிவித்துள்ளது. இவர்கள் விடுதலை செய்யப்படும் அதேவேளை கைப்பற்றப்பட்ட 8 மீன்பிடிப் படகுகளும் விடுவிக்கப்படவுள்ளன.

இவர்களை உறுதியளித்தபடி இந்திய அரசு விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்காது விட்டால் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்திய துணைத் தூதரகத்தின் முன் போராட்டம் நடத்தப் போவதாக யாழ்.மீனவர்கள் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை 21 படகுகளுடன் 100 மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மீன்பிடி

(20ஆம் பக்கம் பார்க்க)

## லிபியாவில் அமைதியை ஏற்படுத்த அமெரிக்க போர்க்கப்பல் விரைவு



(வாஷிங்டன்)

லிபியாவில் நிலைமை மோசமாகி வருவதால், அதிபர் கடாபியை ஆட்சியிலிருந்து அகற்றிவிட்டு அமைதியை ஏற்படுத்துவதற்காக அமெரிக்க போர்க் கப்பல்கள் அங்கு விரைகின்றன.

லிபியாவில் மனித உரிமைக்கு எதிராக தாக்குதல் நடத்திவரும் அதிபர் முவாம்மர் கடாபி உடனடியாக பதவி விலக வேண்டும் என அமெரிக்க அதிபர் ஒபாமா பலமுறை வலியுறுத்தினார்.

இதுபோல பிரான்ஸ்,பிரிட்டன், ஜேர்மனி உள்ளிட்ட உலக நாடுகளும் வலியுறுத்தி வருகின்றன. பல நாடுகள் லிபியா மீது பொருளாதாரத் தடை

(20ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் மீண்டும் மழை வெள்ள அச்சத்தில் மக்கள்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் நேற்று முன்தினம் முதல் தொடர்ச்சியாக பெய்ய ஆரம்பித்துள்ள அடைமழையினால் மீண்டும் வெள்ள ஆபத்து ஏற்படலாம் என அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் வெள்ள ஆபத்து ஏற்படலாம் என்று கருதப்படுகிறது.

அத்துடன் கந்தளாய் குளத்தின் நீர்மட்டம் உயர்ந்து காணப்பட்டதால் நேற்று முன்தினம் மழை தொடங்கிய சில மணி நேரங்களிலேயே அதன்

(20ஆம் பக்கம் பார்க்க)

## மூன்று பெண் போராளிகள் உட்பட 106 பேர் விடுதலையாகினர்

(கொழும்பு)

புனர்வாழ்வு நிலையங்களில் புனர்வாழ்வு அளிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிப் போராளிகளில் 106 பேர் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இப் போராளிகளில் மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு அவர்களின் உறவினர்களுடன் இணைக்கப்படவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இவ்வாறு விடுதலை செய்யப்பட்டவர்களுள் பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவி ஒருவர் உட்பட மூன்று பெண்களும் விடுதலை செய்யப்படவுள்ளதாக

(20ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Study & Work in UK and Canada**

Hurry......for Jan-2011
Intake Get Register Now
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation

என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான விஸா பெறுவதற்கான Sponsorship பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)

# முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு முன்பள்ளி ஆசிரியர் பயிற்சிகள்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் உள்ள புனர்வாழ்வு முகாம்களில் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு வரும் முன்னாள் புலிகள் இயக்க உறுப்பினர்களில் ஒரு தொகையினருக்கு முன்பள்ளி ஆசிரியர் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

இப்பயிற்சிகளை பூர்த்தி செய்த 26 பேருக்கு நேற்று சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இவர்கள் அம்மாவட்டத்தில் உள்ள முன்பள்ளிகளில் ஆசிரியர்களாக பணியாற்றுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

**வர்த்தகப் பெருமக்களே....**

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு:-0729994777

(C-2290)

# மரண அறிவித்தல்

## திருமதி வைத்திலிங்கக்குருக்கள் சிவகாமி



திருமதி வைத்திலிங்கக் குருக்கள் சிவகாமி 01. 03. 2011 நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் மந்திகை கண்ணகை அம்மன் கோவில் பிரதமகுரு கு.வைத்திலிங்கக் குருக்களின் அன்பு மனைவியும், சுந்தரேஸ்வரக் குருக்கள் (மந்திகை), ரங்கேஸ்வரன் ஐயர் (பொலிகண்டி), திருமதி சரோஜினிதேவி சற்குணராசா (இருபாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 02.03.2011 நேற்று புதன் கிழமை நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கந்தசாமி கோவிலடி, பொலிகண்டி,
வல்வெட்டித்துறை.

தகவல்
வை.ரங்கேஸ்வரன் ஐயர் (மகன்)

(சி-2578)

# விசா மோசடி குறித்து கனடா எச்சரிக்கை!

(கொழும்பு)

கனடாவுக்கு விசா பெற்றுத் தருவதாகக் கூறுகின்ற போலி விளம்பரங்களை வெளியிடும் நேர்மையில்லாத நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் தொடர்பில் எச்சரிக்கையாக இருக்குமாறு கொழும்பிலுள்ள கனேடிய உயர்ஸ்தானிகராலயம் நேற்று புதன் கிழமை எச்சரித்துள்ளது.

ஏமாற்றுப் பேர்வழிகளிடம் பெருந்தொகை பணத்தை இலங்கையர்கள் பலர் கொடுத்துள்ளனர். மக்கள் இவ்வாறு ஏமாறுவதையிட்டு நாம் கவலைப்படுகின்றோம் என இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் புரூஸ் லெவி தெரிவித்தார்.

விசா வழங்குவதற்கென கனேடிய உயர்ஸ்தானிகராலயத்தால் நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தர்கள் மட்டும் தான் வழங்க முடியும். ஒரு முகவருக்கு பணம் கொடுப்பது, கனடாவில் ஒரு வேலை கிடைத்துள்ளதாக கூறுவது ஒரு தொழில் பயிற்சியைப் பெற்றிருப்பது எல்லாம் கனேடிய விசாவைப் பெற்றுத் தரப்போவதில்லை.

விசா பெற்றுத் தருவதாகக் கூறி மக்களிடமிருந்து பணம் அறவிடுபவர்களால் கனடாவின் நற்பெயருக்கு பங்கம் ஏற்படுகிறது. இதைத் தடுக்க எம்மாலான சகலதையும் செய்வோம் என இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் குறிப்பிட்டார்.

விசாவுக்கான விண்ணப்பங்களை இடைத்தரகர்களிடம் ஒப்படைக்கத் தேவையில்லை. கொழும்பு 7, இல.51, ஏ தர்மபால மாவத்தையில் அமைந்துள்ள கனேடிய உயர்ஸ்தானிகராலயத்தில் அவற்றை ஒப்படைக்கலாம். மேலதிக விபரங்களுக்கு பார்வையிடலாம் என அவர் கூறினார். (ச-5)

# கண்டாவளை ம.வி.க்கு உபகரணம் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

கண்டாவளை மகாவித்தியாலயத்திற்கு ஒரு லட்சத்து நாற்பத்திரண்டாயிரம் ரூபா பெறுமதியான போட்டோ கொப்பி இயந்திரமும் ஒருலட்சம் ரூபா பெறுமதியான ஒலிபெருக்கி சாதனமும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி உபகரணங்களை கண்டாவளை மகாவித்தியாலய அதிபரிடம் நேற்று அமைச்சர் கையளித்தார்.

அமைச்சரின் யாழ் அலுவலகத்தில் நடைபெற்ற இந் நிகழ்வில் கண்டாவளை அபிவிருத்திக்குழு மற்றும் கண்டாவளை மகாவித்தியாலய முன்னாள் அதிபரும் நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளருமான எஸ்.மாணிக்கராஜா ஆகியோரும் கலந்து கொண்டனர். (ரு)

# அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளின் 2010 ஆம் ஆண்டுக்கான விளையாட்டு விழா தொடர்பான கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை இடம்பெறவிருப்பதனால் வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளின் விளையாட்டுப் பொறுப்பாசிரியர்கள் அனைவரையும் இராமநாதன் கல்லூரியின் விசேட கல்வி அலகிற்கு பிற்பகல் 12.30க்கு சமுகம் தருமாறு வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (சி)

# வளங்கள் அழிக்கப்படுவதற்கு எதிராகவே இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டனர்

## யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி கடல் வளங்களை முற்றாக அழிக்கும் வகையில் மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்களையே எமது மீனவர்கள் கைது செய்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர் என யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று இடம் பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

20 வருடங்களுக்கு மேலாக எமது மீனவர்கள் கடற்றொழிலை மேற்கொள்வதில் பாரிய இடர்பாடுகளை எதிர்கொண்டு வந்தனர்.

அவர்களின் இயல்பு நிலை தற்போது தான் வழமைக்கு திரும்பியது. ஆனால் மீண்டும் அவர்களின் தொழில் பாதிக்கும் வகையில் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் அமைகின்றது.

தடைசெய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்கள் மூலம் எல்லை மீறி மீன்பிடியில் ஈடுபடுவதில் எமது கடற்பரப்பில் உள்ள வளங்கள் முற்றாக அழியும்நிலைதோன்றியுள்ளது.

10 மீனவர்கள் தொழில் புரியும் பகுதியில் 100 இந்திய டோலர்கள் மீன்பிடியில் ஈடுபடுகின்றன. இதனால் எமது மீனவர்கள் தொழில் வாய்பை இழந்து அல்லற்படுகின்றார்கள்.

இந்திய மீனவர்களை இலங்கை மீனவர்கள் கைது செய்தமை தவறான விடயம் என குற்றம் சாட்டுகின்றனர். அதனால் அவர்கள் தமது வளங்கள் அழிக்கப்படுவதை பொறுத்துக் கொள்ள முடியாமலே அவர்களை கைது செய்தனர் என்பதை ஏற்றுக்கொள்கின்றனர் இல்லை.

அத்தோடு எதிர்காலத்தில் தம்மால் தொழில் செய்யமுடியாத நிலை ஏற்படும் எனவும் வருங்கால சந்ததியினருக்கு வளங்கள் இல்லாது போய்விடும் எனக்கருதியே அவர்கள் இவ்வாறு செயற்பட்டனர்.

எமது வளங்கள் அழிக்கப்படுவதையும் தொழில் பாதிக்கப்படுவதையும் பொறுத்துக் கொள்ள முடியாது. உணர்ச்சிவசப்பட்டு செய்த இந்தச் செயலுக்கு பலரும் என்மீது தமது கேள்விக்கணைகளைத் தொடுத்திருந்தனர் என அவர் மேலும் தெரிவித்தார். (ச-6)

# கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பொங்கல் விழாவின்போது வாணிபம் மேற்கொள்ளும் வணிகர்களுக்கான அறிவித்தல்

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பங்குனி உத்தரப் பொங்கல் எதிர்வரும் 19.03.2011 சனிக்கிழமை வழமைபோல நடைபெறவுள்ளது. இதனை முன்னிட்டு வியாபாரம் மேற்கொள்ளும் வணிகர்களுக்கான வியாபார நிலைய ஏல விற்பனை 06.03.2011 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

இவ்வண்ணம்
ஆலய பரிபாலன சபை

(சி-2575)

Quick Learning Course

**Spoken English with Grammar**

Duration 1 Month
Rs. 3000.00

உரையாடல் பயிற்சிகள், பேச்சுப் பயிற்சிகள், உச்சரிப்புப் பயிற்சிகள் யாவும் புதிய தொழில் நுட்பத்தின் கமைய Audio & Video visuals மூலமாக நடாத்தப்படுகிறது

A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும்

திங்கள் முதல் வெள்ளிவரை வகுப்புகள் நடைபெறும் & Full time special

07-03-2011
Batch 12 : 09.00 AM - 01.00 PM
Batch 13 : 01.30 PM - 05.30 PM

BCHS
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
No.15 2/1, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna. ஆரியகுளச் சந்திக்கருகில் கொசி Hotel மேல்
Tel:021 2224550 HotLines: 0777222422/ 0777585913/ 0714299935

அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் முன்கூட்டியே நீங்கள் பதிவுகளை மேற்கொள்வதன் மூலம் ஏற்ற நேர அட்டவணையை தெரிவு செய்து வீண் விரயத்தை தவிர்க்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கிண்ண கிரிக்கெட் திருவிழா 2011

பெப்ரவரி 19 - ஏப்ரல் 02

ICC Cricket World Cup 2011

இன்று 2 லீக் ஆட்டங்கள்

# கத்துக்குட்டி அணிகளைத் தாக்குவதற்கு வரிந்து கட்டுகிறது தென்னாபிரிக்கா, பாகிஸ்தான்



பயிற்சியில் பாகிஸ்தான் அணியினர்...

உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் இன்று 2 லீக் ஆட்டங்கள் நடைபெறுகின்றன.

இதில் காலை 9.30 மணிக்கு சண்டிகரில் நடைபெறும் போட்டியில் பி பிரிவைச் சேர்ந்த தென்னாபிரிக்க அணி நெதர்லாந்து அணியைச் சந்திக்கிறது.

தென்னாபிரிக்க அணிக்கு இது 2 ஆவது ஆட்டமாகும். அந்த அணி முதல் ஆட்டத்தில் மேற்கிந்தியத்தீவுகள் அணியை வீழ்த்தியிருந்தது.

துடுப்பாட்டத்தில் டி வில்லியர்ஸ் நல்ல நிலையில் உள்ளார். அத்துடன் கலிஸ், சிமித், அம்லா, டுமினி என துடுப்பாட்டத்தில் பட்டாளமே உள்ளது.

வேகப்பந்து வீச்சில் ஸ்ரையன், மோர்கல் மிரட்டுவார்கள். போத்தா, இம்ரான் தாகீர் ஆகியோரின் சுழல் எதிரணிக்கு நெருக்கடி கொடுக்கும்.

நெதர்லாந்து அணி தான் மோதிய 2 ஆட்டங்களிலும் தோல்வியை தழுவியது. இன்றைய ஆட்டத்தில் நெதர்லாந்து அணி வெற்றிக்காக போராட வேண்டியிருக்கும்.

இப் போட்டியில் தோல்வியடைந்தால் அடுத்த சுற்றுக்கு முன்னேறும் வாய்ப்பைநெதர்லாந்துஇழக்கநேரிடும்.

**பாகிஸ்தான்-கனடா மோதல்**

கொழும்பில் பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறும் லீக் ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி, கனடாவை எதிர்கொள்கிறது. பாகிஸ்தான் தனது 2 லீக் ஆட்டத்திலும் அபார வெற்றி பெற்று மிரட்டியுள்ளது.

துடுப்பாட்டத்தில்மிஸ்பாஉல்ஹக், யூனிஸ்கான் ஆகியோரின் பொறுப்பானஆட்டம்அணிக்குஆணிவேராக உள்ளது.

அத்துடன் அக்மல் சகோதரர்கள் அதிரடிக் காட்டுகின்றனர். அணித்தலைவர் அப்ரிடியின் ஆக்கிரோச சுழல் எதிரணி துடுப்பாட்ட வீரர்களுக்கு சவாலாக இருக்கிறது. அவர் இதுவரை இரண்டு ஆட்டங்களில் 9 விக்கெட்டுக்களை சாய்த்துள்ளார்.

இன்றைய ஆட்டத்திலும் அப்ரிடி முத்திரை பதிக்கக் கூடும்.

வெற்றி முனைப்பில் பாகிஸ்தான் அணி காலிறுதிவாய்ப்பை பிரகாசப் படுத்திக்கொள்ளத் தயாராகிவிட்டது.

## வெற்றி ஒன்றே குறிக்கோள் வீரர்களுக்கு அப்ரிடி அறிவுரை

(கொழும்பு)

உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் வெற்றிஒன்றே குறிக்கோளாக கொண்டு ஆடவேண்டும் என்று அணிவீரர்களுக்கு பாகிஸ்தான் அணித்தலைவர் அப்ரிடி அறிவுரை கூறியுள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது, உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரின்முதல் 2 லீக்ஆட்டங்களில் சிறப்பாக ஆடி வெற்றி கண்டோம். அதிலும் இலங்கையுடனான ஆட்டம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. அந்த ஆட்டத்தில் சிறப்பாக விளையாடினோம். இதேபோன்ற சீரான ஆட்டத்தை அனைத்து லீக் ஆட்டங்களிலும் வீரர்கள் காட்ட வேண்டும்.

இதேபோல் இன்று கனடாவுடனான ஆட்டமும் பாகிஸ்தானுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது.

இந்த ஆட்டத்திலும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த வேண்டும்.

வெற்றி ஒன்றை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு விளையாட வேண்டும். வேறு எதிர்மறையான எண்ணங்கள் வீரர்களுக்கு வரவே கூடாது. வெற்றி பெறுவதை பழக்கமாக்கிக் கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு லீக் ஆட்டத்திலும் கவனத்துடன் விளையாடி அணிக்கு வெற்றியத்தேடித் தரவேண்டும். அணி வெற்றியை மட்டுமே மனதில் கொண்டு வீரர்கள் அனை வரும் சிறப்பான பங்களிப்பை அளிக்க வேண்டும் என்றார்.

## இறுதிப் போட்டிக்கான ரிக்கெட் விலை அதிகம்

(புதுடில்லி)

உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டிக்காக இந்திய ரூபாயில் 12 ஆயிரத்து 500, ரூ. 18 ஆயிரத்து 750 விலைக்கு மட்டுமே ரிக்கெட் உள்ளது.

இந்தியத் துணைக்கண்டத்தில் நடக்கும் உலகக்கிண்ண தொடருக்கு ரிக்கெட்டுக்கள் வாங்குவது என்பது சாமான்ய மக்களுக்கு எட்டாக்கனியாகிவிட்டது. ஒரு புறம் பொலிஸார் லத்தி சார்ஜ் மறுபுறம் கறுப்புச்சந்தையில் விற்பனை என பல சம்பவங்கள் நடக்கின்றன.

இந் நிலையில் எதிர்வரும் ஏப். 2ஆம் திகதி நடக்கும் இறுதிப்போட்டிக்குரிய ரிக்கெட்டுக்களை விற்கும் கயான்ஜ் இணையத்தளத்தில் ரூபாய் 12ஆயிரத்து 500, ரூபாய் 18 ஆயிரத்து 750 விலையுள்ள ரிக்கெட்டுக்கள் மட்டும் தான் உள்ளதாம். பொதுமக்களுக்காக 3000 ரிக்கெட்டுக்கள் மட்டும் விற்பனைக்கு வருகிறது.

இதில் 1000 ரிக்கெட்டுக்கள் ரசிகர்கள் வேண்டுகோளுக்கு இணங்க குலுக்கல் முறையில் வழங்கப்படவுள்ளது.

கொழும்பு, மொகாலியில் நடக்கும் இரண்டு அரையிறுதி போட்டிகளுக்கான ஒன்லைன் ரிக்கெட் விற்பனை அடுத்த வாரம் ஆரம்பமாகிறது.


கிரிக்கெட் ரசிகர்களுக்கு ஓர் நற்செய்தி!

MCS இன் ஒரு மில்லியன் ரூபா பரிசை வெற்றிகொள்ள உங்களுக்கு அரிய சந்தர்ப்பம்

தினமும் 5 பேருக்கு

50ஆயிரம் ரூபா வீதம் 100 பேருக்கு

ஒரு மில்லியன் வெற்றிகொள்ளும் வாய்ப்பு

வலம்புரியில் கேட்கப்படும்

உலகக்கிண்ண கேள்விகளுக்கு

சரியான பதிலை அனுப்பி உங்கள் உயர்கல்வி வாய்ப்பை

பெற்றுக்கொள்ளுங்கள்

கூப்பனை வெல்பவர் அல்லது அவரால் வழங்கப்படும் ஒருவர் பின்வரும் கற்கை நெறிகளுக்கு இப் பரிசுக் கூப்பனை பயன்படுத்த முடியும்

1. கொழும்பு பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்ப பட்டக் கற்கை நெறி
2. சீமா (லண்டன்) CIMA_UK
3. மைக்கிரோசொப்ற் நிறுவன கணினிப் பொறியியலாளர் கற்கை நெறி
4. அடோப் நிறுவனத்தின் மல்ரிமீடியா கற்கை நெறி

காலிறுதிச் சுற்றுக்கு தெரிவாகும் அணிகள் ?

சரியான விடையை எழுதி கீழுள்ள கூப்பனை பூரணப்படுத்தி 10.03.2011 இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர் ஒருவருக்கு ஒலிம்பியா ஸ்போட்ஸ் வழங்கும் பெறுமதியான பரிசு காத்திருக்கிறது.

1. ..........................
2. ..........................
3. ..........................
4. ..........................
5. ..........................
6. ..........................
7. ..........................
8. ..........................

அனுப்ப வேண்டிய முகவரி

'உலகக் கிண்ணம்'
வலம்புரி
இல.3,2 -ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.

பெயர்: ..........................
முகவரி: ..........................
தொ.பே: ..........................
தே.அ.அ.இல: ..........................

ஒலிம்பியா ஸ்போட்ஸ்
இல06,ஜும்மா பள்ளிவாசல் லேன்
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

உலகக்கிண்ண கிரிக்கெட்—2011

சம்பியனாகும் நாடு?..........................

தொடர் நாயகன் விருது யாருக்கு?..........................

சரியான விடையை எழுதி கீழுள்ள கூப்பனை பூரணப்படுத்தி 20.03.2011 இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும்.

பெயர்..........................

முகவரி..........................

தொலைபேசி..........................

தே.அ.அ.இல..........................

'உலகத்திண்ணம்'
வலம்புரி
இல.3, 2-ம் ஒழுங்கை
பிரவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

Midea Electro Mart
No:1-1, 1-H, STANLEY ROAD, JAFFNA.

ESPN
இ.ச.பே. நாகரத்தினம் சக நிறுவனம்
52,54, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

இன்னும் பல பரிசுகள்

PC SOLUTIONS TECHNOLOGIES (PVT) LTD
305, Kasthuriyar Road, Jaffna.
T.P.021 2221101,021 2229644
email:- pcsjaffna@sltnet.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் ஆரிய - திராவிட பாஷாவிருத்தி சங்க கட்டடத்தை இராணுவம் கையகப்படுத்த முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷா பிவிருத்திச் சங்கக் கட்ட டத்தை இராணுவத்தினர் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விரைவில் நூற்றாண்டு விழா வைக் கொண்டாடவுள்ள பழைமை மிக்க இச் சங்கம் கல்வித் திணைக்களப் பணிப்பாளர் பதவிவழித் தலைவரை தலைவராகக் கொண்டு இயங்கி வருகிறது.

அத்துடன் முன்னைய காலங்களில் மாகாதேசாதிபதி பண்டிதருக்கான கல்வித் தகைமைச் சான்றிதழில் ஒப்பமிட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

இனமதமொழி பேதமின்றியும் எவ்வித கட்டணம் அறவிடாமலும் மாணவர்களுக்கு கல்வி புகட்டி வருகிறது.

இந்நிலையில் இச்சங்கத்தின் வளர்ச்சிக்கு உதவிய பண்டிதமணி க.நாகலிங்கம் அவர்களின் அஞ் சலி நிகழ்வு தொடர்பான ஆலோ சனைக்கூட்டம் நேற்று முன்தினம் இங்கு இடம்பெற்றபோது திடீரென வந்த இராணுவ உயர் அதிகாரி அவர்களின் குழுவினர் தாம் ஆளுநரின் பணிப்பின் பேரில் மேலதிக கல்விப் பணிப்பாளரின் ஒத்துழைப் போடு வந்துள்ளதாகவும் மேற்கொண்டு இந்த சங்கத்தில் அலங்கார செயற்பாடுகளெதுவும் மேற்கொள்ள வேண்டாம் எனவும் இந்த சங்கத்தில் சிங்களமொழி மற்றும் கணனி கற்கை நெறிகள் என்பன நடத்தவுள்ளதாகவும் கட்டடத்தை விரைவில் கையகப்படுத்தவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதற்கு இச்சங்கத்தினர் தம்மிட முள்ள ஆவணங்களை சமர்ப்பித்து 24.08.1999 ஆம் ஆண்டிலிருந்து தாம் இச்சங்கத்திலேயே தமதுபணிகளை மேற்கொண்டு வருவதாக கூறியதோடு சங்கத்தை விட்டுக் கொடுக்க முடியாது எனத் தெரிவித்ததாகவும் சங்கச் செயலாளர் பண்டிதர் ம.கடம்பேசுவரன் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-6)

## பெண்களுக்கான துடுப்பாட்டப் போட்டி

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டு கழகங்களுக்கிடையிலான பெண்கள் துடுப்பாட்டப் போட்டி எதிர் வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் 12 கழகங்கள் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-3-29)

## செயலமர்வுகள்

(அல்வாய்)

வடமராட்சி வலயத்தில் க.பொ.த. உயர் தர வகுப்பில் பொருளியல் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ் .நெல்லியடி மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

புதிய பாடத்திட்ட வினாத்தாள் தயாரிப்பதற்கான ஒழுங்குகளுடன் வருகை தருமாறு வடமராட்சி வலய பிரதிக்கல்விப்பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் அறிவித்துள்ளார்.

(ஸ்ரீ-3-19)

☼ ☼ ☼

(அல்வாய்)

வடமராட்சி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் தரம் 10, 11 இல் விஞ்ஞான பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். புலோலி மெ.மி.த.க. பாடசாலையில் நடைபெறவுள்ளது.

வருகை தரும் ஆசிரியர்கள் பாட நூலையும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியையும் தவறாது எடுத்து வருமாறு வடமராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

(ஸ்ரீ-3-19)

## யுத்தத்தால் பாதிக்கப்பட்டு கரவெட்டியில் வசிக்கும் 500 குடும்பங்களுக்கு வீட்டுத்திட்டம்

வன்னி யுத்தத்தால் பாதிக்கப்பட்டு கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் செந்தக் காணியுள்ள வீடில்லாத மக்களுக்கு இந்திய அரசின் நிதியுதவியுடன் வீட்டுத் திட்டம் வழங்கப்படவுள்ளதாக கரவெட்டி பிரதேசசெயலர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வன்னியுத்தத்தின் போது பாதிக்கப்பட்டு எமது பிரதேசத்தில் வசித்துவரும் சொந்தக் காணியுள்ள வீடில்லாத 500 குடும்பங்களுக்கு முதற்கட்டமாக வீட்டுத்திட்டம் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வீட்டுத்திட்டம் விரைவில் நடைமுறைப் படுத்தப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார் (ஸ்ரீ-3-24)

## விளையாட்டு கழகங்களுக்கு இடையிலான துடுப்பாட்ட போட்டி

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டு கழகங்களுக்கிடையே நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளின் வரிசையில் ஆண்கள் பிரிவு I இற்கான துடுப்பாட்டப் போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழக மைதானத்திலும் பிரிவு II இற்கான போட்டிகள் அதே தினம் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்திலும் நடை பெறவுள்ளது.

பிரிவு I இல் 17 கழகங்களும் பிரிவு II இல் 18 கழகங்களும் மோதவுள்ளன. (ஸ்ரீ-3-29)

## வடமாகாணக்கல்வித் திணைக்களத்தால் சிறுவர்களுக்கான சித்திரப்போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

வட மாகாண கல்வித்திணைக்களத்தினால் சிறுவர்களுக்கான சித்திரப்போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இப்போட்டியில் தரம் 1 மாணவர்கள் கிறுக் கல் சித்திரமும் தரம் 2 மாணவர்கள் அச்சுப் பதித்தல் சித்திரமும் தரம் 3 மாணவர்கள் யானையும் குட்டியும் ,எனது அம்மா ,பூக் களும் பூச்சாடியும் இவற்றில் ஏதாவது ஒன்றை கொலாஜ்சித்திரமாக வரைதல் வேண்டும்.

தரம் 4 மாணவர்கள் தரப்படும் காட்சிகளில் ஒன்றை வரைதல் வேண்டும். இரண்டு சேவல்கள் சண்டையிடும் காட்சி ,குளக்கட்டில் இருந்து மீன் பிடிப்போன்,எனது குடும்பம் இவற்றில் ஏதாவதுஒன்றை மாணவர்கள் விருப்பம் போல் தெரிவு செய்யலாம்.

தரம் 5 மாணவர்களும் தரப்படும் காட்சிகளில் ஒன்றை வரைதல் வேண்டும். நீரில் விளையாடும் சிறுவர்கள் ,நானும் எனது செல்லப்பிராணியும்,பொதுக்கிணற்றடியில் நீர் அள்ளும் பெண்கள் இவற்றில் ஏதாவது ஒன்றை மாணவர்கள் விருப்பம் போல் தெரிவு செய்யலாம்.

பாடசாலை மட்டத்தில் ஒவ்வொரு மாணவனும் பங்கு பற்ற வேண்டும். கோட்ட மட்டத் தெரிவுக்கு பாடசாலையில் இருந்து ஒவ்வொரு பிரிவிலும் முதலாம் இடத்தைப் பெற்ற ஒரு மாணவரை மட்டுமே அனுப்புதல் வேண்டும். கோட்ட மட்டத்தில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் 3 மாணவர்களை வலய மட்டத்தெரிவுக்கு அனுப்ப வேண்டும்.

வலய மட்டத்தில் ஒவ்வொரு பிரிவிலும் முதலாம் இடத்தைப்பெறும் ஒரு மாணவன் மட்டும் மாகாண மட்டத் தெரிவில் பங்குபற்ற அனுமதிக்கப்படுவார்கள்.

இவ்வாண்டிற்கான முன்னோடி வேலைத் திட்டத்தின் குறிப்பிடப்பட்ட நாட்களில் ஒவ்வொரு மட்டத்திற்கான போட்டிகளையும் நிறைவு செய்தல் வேண்டும் என மாகாணக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)




## கலந்துரையாடல்

(அல்வாய்)

வடமராட்சி வலயக்கோட்டமட்ட மெய்வல்லுநர் போட்டி நிகழ்வுகள் தொடர்பான கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு புலோலி மெ.மி.த.க பாடசாலை மண்டபத்தில் வடமராட்சி வலய உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் ச.செல்வக்குமரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் சகல பாடசாலைகளிலும் உள்ள உடற்கல்விப் பொறுப்பாசிரியர்கள் மற்றும் விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

## கணனிப்பயிற்சிப்பட்டறை

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வலயத்தில் இதுவரை கணனிப்பயிற்சி பெறாத ஆசிரியர்களுக்கு கணனி அறிவை மேம்படுத்தும் முகமாக கணனிப் பயிற்சிப்பட்டறையை நடாத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேற்படி பயிற்சிப்பட்டறை எதிர்வரும் 3, 4, 5 ஆம் திகதிகளிலும் 10, 11, 12 ஆம் திகதிகளிலும் 17, 18, 19 ஆம் திகதிகளிலும் 25, 26, 27 ஆம் திகதிகளிலும் பருத்தித்துறையிலுள்ள நைற்றா தனியார் கல்வி நிறுவனத்தில் நடைபெறவுள்ளது என வடமராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் வ.செல்வராச அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

## ஒன்றுகூடல் நிகழ்வு

(கரவெட்டி)

இலங்கை நிர்வாகசேவை சங்கத்தின் யாழ்.மாவட்டக்கிளை உத்தியோகத்தர்களுக்கான ஒன்று கூடல் எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு தியாகி அறக்கொடை மண்டபத்தில் நிர்வாக சபைத்தலைவர் எஸ்.சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

எனவே, நிர்வாகசபை உத்தியோகத்தர்கள், நிர்வாகப்பிரதிநிதிகள் ஆகியோரைகலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது .

(ஸ்ரீ-3-24)



சொண்ட் நிறுவனத்தில் "வேலையற்றோருக்கு உதவுவதில் தொழில் திணைக்களம், தொழில் இல்லம் என்பவற்றின் பங்கு" என்னும்கருப் பொருளில் சிறப்பு ஆய்வரங்கம் அண்மையில் சொண்ட் அலுவலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சொண்ட் நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் ச.செந்தூராசா தலைமை உரையாற்றுவதையும் வடபிராந்திய உதவித் தொழில் ஆணையாளர் ரி.கனகேஸ்வரன் ஆய்வுரையாற்றுவதையும் கலந்து கொண்ட ஆர்வலர்களையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு.

## பயணிகள் படகு விற்பனைக்கான பகிரங்க விண்ணப்பங்கோரல்

மேற்படி ஆலயத்தின் சேவையிலுள்ள மோட்டார் படகுகள்
1. நாகபூஷணி 1
2. நாகபூஷணி 2

ஆகியன பகிரங்க விலை மனுக்கோரல் மூலம் விற்பனை செய்யப்படவுள்ளன. கொள்வனவு செய்யவிரும்புவோர் அதற்கான விலை மனுக்களை எழுத்து மூலம் விண்ணப்பம் செய்ய முடியும்.

நயினாதீவு இறங்கு துறையில் விற்பனைக்கான இருபடகுகளையும் ஆலய அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு பார்வையிட முடியும்.

**நாகபூஷணி 1:**
✦ 3 S.M சிலின்டர் யென்மார் இயந்திரம் 45 குதிரை வலு (இயங்கும் நிலை)

**நாகபூஷணி 2:**
✦ 2 S.M சிலின்டர் யென்மார் இயந்திரம் 30 குதிரை வலு (இயங்கும் நிலை)

படகுகளுக்கான உயிர்காப்பு அங்கிகள் மற்றும் உபகரணங்களுடன் அனுமதிப்பத்திரங்களும் உண்டு.

கொள்வனவு செய்பவர்களால் உடன் சேவையில் ஈடுபடுத்த முடியும். ஒவ்வொரு படகுக்கான விலை மனுக்களும் தனித்தனியான விண்ணப்பங்கள் மூலம் விண்ணப்பிக்கப்பட வேண்டும். கடித உறையின் மேற்புறத்தில் "படகு விற்பனைக்கான பகிரங்க விண்ணப்ப கோரல்" என இடப்பட வேண்டும்.

***விண்ணப்பிக்கும் முறை:***

விண்ணப்பப்படிவங்களை ஆலயத்தில் ரூபா 1000 மீளளிக்கப்படாத வைப்புடன் ரூபா 2000 மீளளிக்கக்கூடிய வைப்புப்பணத்தையும் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

ஆகக்கூடிய கோரல் செய்தோர் வெற்றி பெற்றவராகக் கருதப்படுவார். கேள்வித் தொகையின் முழுத்தொகையினையும் பணமாகச் செலுத்தி அன்றே படகினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**குறிப்பு:**

உரிய கேள்வித்தொகை கோரப்படாத விடத்து படகினை விற்பனை செய்வது அல்லது செய்யாது விடும் அதிகாரம் அறங்காவலர் சபையினருக்கு உண்டு. விளம்பரத்தின் எப்பகுதியையாவது திருத்தம் செய்யும் அதிகாரம் சபையினருக்குண்டு.

விலைமனுக்கோரல் விண்ணப்பத்தினை மூடிய காகித உறையில் இட்டு பதிவுத் தபால் மூலம் 18.03.2011 திகதிக்கு முன் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

மனுக்கள் 25.03.2011 திகதி மு.ப. 11.00 மணிக்கு விண்ணப்பதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். அன்றையதினம் விண்ணப்பதாரர்கள் சமுகமளித்தல் வேண்டும்.

*செயலாளர்,*
*நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்,*
*நயினாதீவு.*

(சி/2577)

# கிபிர் விமானங்களை தரையிலேயே நிறுத்திவைத்திருக்க தீர்மானம்

(கொழும்பு)

இரு கிபிர் விமானங்கள் நேற்று முன்தினம் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானமை தொடர்பான விசாரணைகள் முடியும் வரை இலங்கை விமானப்படையின் கிபிர் விமானங்கள் அனைத்தையும் தரையிலேயே நிறுத்தி வைத்திருக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக விமானப்படை தெரிவித்துள்ளது.

விமானப்படையின் 60 ஆவது ஆண்டு நிறைவு விழா கொண்டாட்டங்களுக்காக நேற்று முன்தினம் ஒத்திகையில் ஈடுபட்டிருந்தபோது கிபிர் விமானங்கள் கம்பஹா வான்பரப்பில் ஒன்றுடன் ஒன்று மோதி நொருங்கின. இதில் ஒரு விமானி பலியானமை குறிப்பிடத்தக்கது.

இந் நிலையில் நேற்று நடைபெற்ற விமானப்படையின் 60 ஆவது ஆண்டு நிறைவு விழா சாகசங்களில் கிபிர் விமானங்கள் பங்குபற்றவில்லை.

இதேவேளை மேற்படி விபத்துக் குறித்து விசாரிப்பதற்காக எயார் வைஸ் மார்ஷல் கபில ஜயம்பதி தலைமையிலான ஐவர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

விபத்தின்போது விமானிகள் விமானங்களிலிருந்து வெளியேற்றப்பட்டபோதிலும் ஒருவர் இறந்ததற்கான காரணம் தெரியவில்லை என விமானப்படை தெரிவித்துள்ளது.

(ஸ்ரீ-2)

# உடல் முழுவதும் அதிக உரோமங்களை உடைய சிறுமி



உடலில் அதிக உரோமங்களை உடைய சிறுமி என்ற கின்னஸ் சாதனையை தாய்லாந்து நாட்டைச்சேர்ந்த சுப்ரா சசுப்பான் என்ற 11 வயது சிறுமி படைத்துள்ளார்.

இவருக்கு முகம், கைகள், கால்கள், காதுகள் என்று உடல் முழுவதும் உரோமங்கள் காணப்படுகின்றன.

இவர் தாய்லாந்து மக்களால் குரங்குப் பெண் என்று அழைக்கப்படுகின்றார். இவரின் உரோமங்களை நிரந்தரமாக அகற்ற வைத்திய நிபுணர்கள் மேற்கொண்டு இருந்த பகீரத முயற்சிகள் தோல்வியில் முடிந்து விட்டன.

இச் சிறுமி கின்னஸ் சாதனையைத் தொடர்ந்து மகிழ்ச்சியில் ஆராவரிக்கின்றார். முன்பு கேலிகள், நக்கல்கள், ஓரம் கட்டுதல்கள் ஆகியவற்றுக்கு ஆளான இவர் இன்று அந்நாட்டின் கதாநாயகி ஆகி விட்டார். சுப்ராவுக்கு ஏற்பட்டுள்ள நோய் உலகில் 50 சிறுமிகளுக்கு உள்ளது என்று மருத்துவ உலகம் கூறுகின்றது.

(ஸ்ரீ-2)

# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு.

## பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| 1.கணக்காளர் | 01 |
| 2.நிறைவேற்று அலுவலர் | 01 |

**தகைமைகள் :**

**கணக்காளர்:**
- B.COM, பட்டதாரி அல்லது உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (HNDA)
- அத்துடன் 5 வருட கணக்கியல் துறையில் வேலை அனுபவம்.

**நிறைவேற்று அலுவலர்:**
- பட்டதாரியாக இருத்தல் அவசியம்.
- முகாமைத்துவ துறையில் 5 வருட வேலை அனுபவம் விரும்பத்தக்கது.
- அனுபவம் இல்லாதவர்களும் விண்ணப்பிக்கலாம். நேர்முகத்தேர்வின் போது பரிசீலிக்கப்படும்.

**பொதுவான தகைமைகள்:**
- இந்து சமயத்தவராக இருத்தல் வேண்டும்.
- ஆலய வளாகத்தில் தங்கியிருந்து சேவையாற்றக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
- சிறந்த தேக ஆரோக்கியம் உடையவராகவும் நன்னடத்தை உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
- இது ஒரு ஆலயப்பணி என்பதினால் சேவை மனப்பாங்குடன் எப்பணியையும் செய்யும் மனப்பாங்கு எதிர்பார்க்கப்படுகின்றது.
- ஆலய வளாகத்தில் தங்குவதற்கான வசதி செய்து தரப்படும்.
- தங்களைப்பற்றிய சுயவிபரங்களை அறியக்கூடிய உறவினர் அல்லாத இருவரின் பெயர் விபரங்களைக் குறிப்பிடவும்.
- வயது 40 க்கு மேல் இருத்தல் வேண்டும்.
- இளைப்பாறிய அரச உத்தியோகத்தர்களும் விண்ணப்பிக்க முடியும்.
- யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு முன் உரிமை வழங்கப்படும்.

**சம்பள விபரம்:**
- திறமையும் தகுதிக்கும் ஏற்றவகையில் சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 15.03.2011 முன்னர்
செயலாளர் ,
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்,
நயினாதீவு.
என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.

### நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு

### பதவி வெற்றிட மாதிரி விண்ணப்பம்

பதவி:- கணக்காளர் /நிறைவேற்று அலுவலர்

முழுப்பெயர் :-................................................
தபால் முகவரி :-................................................
அடையாள அட்டை இல :-................................................
பால் :-................................................
சமயம் :-................................................
பிறந்த திகதி :-................................................
01.03.2011 இல் வயது:- வருடம்................ மாதம்................
பிரதேச செயலர் பிரிவு :-................................................

**கல்வித்தகைமைகள்:**

- க.பொ.த. (சா/த)

| | |
|---|---|
| 1 | 5 |
| 2 | 6 |
| 3 | 7 |
| 4 | 8 |

- க.பொ.த. (உ/த)
  ⊛1.......................... ⊛2..........................
  ⊛3.......................... ⊛4..........................
- பட்டம் ..........................
- பல்கலைக்கழகம்/நிறுவனம்
  ⊛பாடங்கள்
  ●1...................... ●2......................
  ●3...................... ●4......................
- தொழில்சார் தகைமைகள்
  ................................................................
- அனுபவம் -பதவி
  ................................................................
- கடமையாற்றிய அலுவலகம் ,முகவரி
  ⊛ காலம்:- ...................... இருந்து ............ வரை
- வேறு தகைமைகள்:-
  ................................................................
- உறுதிப்படுத்தும் இருவரின் பெயர்:-

| பெயர் | விலாசம் | தொலைபேசி இல |
|---|---|---|
| ⊛1............... | ............... | ........................ |
| ⊛2............... | ............... | ........................ |

இவ் விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்ட விபரங்கள் யாவும் எனது அறிவிற்கெட்டிய வரையில் சரியானவை என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

(சி/2577) விண்ணப்பதாரர் ஒப்பம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## அடுத்தவர் பேச்சைக் கேட்டு நடக்கலாமா?

ஒரு ஊரில் ஒரு ஆள் இருந்தான். அவனுக்கும் அவனுடைய மனைவிக்கும் இடையில் ஒரே சண்டை. இவன் கோபித்துக் கொண்டு வீட்டைவிட்டு வெளியில் வந்துவிட்டான்.

நேராக தன்னுடைய நண்பன் ஒருத்தனைத்தேடிப் போனான். அந்த நண்பன் எதற்கும் அசரமாட்டான். எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருப்பான்.

அவனிடம் போய் இவன் யோசனை கேட்டான். "அது சரி நீ எப்படி எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்கிறாய்? என்னால் அப்படி இருக்க முடியவில்லையே" என்றான்.

"என்ன நடந்தது சொல்" என்றான் இவன்." வீட்டில் எனக்கும் மனைவிக்கும் இடையில் தகராறு. நிம்மதியில்லை. அதுதான் உன்னிடம் யோசனை கேட்கலாமே என்று இங்கு வந்தேன்" என்று விபரத்தை சொன்னான்.

அதைக்கேட்டுவிட்டு இவன் சொன்னான் :

''இதோ பார் இது ஒன்றும் பெரிய விஷயமில்லை. எனக்கு இரண்டு மனைவிகள், இரண்டுவீடு ஒரு வீட்டில் சண்டை வந்து விட்டால் இன்னொரு வீட்டுக்கு வந்து விடுவேன். இங்கே சண்டை வந்து விட்டால் அங்கே போய்விடுவேன். இரண்டு குடும்பம் என்பதால் இப்படி ஒரு வசதி. இது தான் என் மகிழ்ச்சியின் இரகசியம்" என்றான்.

''ஓ... அப்படியா விஷயம். இப்பொழுது புரிந்துகொண்டேன். உன்னுடைய யோசனைக்கு ரொம்ப நன்றி'' என்று சொல்லிவிட்டுத் திரும்பிவந்தான்.

அங்கே இங்கே தேடினான். ஒரு வாரத்துக்குள் இன்னொரு பெண்ணைத் தேடிக் கண்டுபிடித்து கல்யாணம் பண்ணிக் கொண்டான்.

இப்ப இவனுக்கும் இரண்டு வீடு ஆகிவிட்டது.

அதன்பின் என்ன நடந்தது தெரியுமா?

இவன் இரண்டாவது கல்யாணம் பண்ணிக் கொண்டது முதல் மனைவிக்குத் தெரிந்து விட்டது.

"போ வெளியே" என்று பிடித்துத் தள்ளி கதவைச் சாத்திவிட்டார் அந்த அம்மா.

பரவாயில்லை என்று சொல்லிவிட்டு இவன் வெளியில் வந்தான். நேராக இரண்டாவது மனைவியின் வீட்டுக்குப் போனான்.

அந்த வீட்டிலும் தகராறு.

"முதல் மனைவி இருக்கும் போது எதற்காக என்னை கல்யாணம் பண்ணிக் கொண்டாய்?" என்று கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளி கதவை சாத்திவிட்டார்கள். இவன் வீதிக்கு வந்து விட்டான்.

இப்பொழுது அங்கேயும் போக முடியவில்லை. இங்கேயும் போக முடியவில்லை.

"என்ன இது? அவன் சொல்லிக் கொடுத்த யோசனை சரியாக வரவில்லையே" என்று யோசித்துக் கொண்டே நடந்தான்.

வழியில் ஒரு பாழடைந்த மண்டபம்.

"சரி, இன்றிரவு இங்கேயே படுத்துவிடுவோம்"என்று நினைத்துக் கொண்டு ஒரு தூண் ஓரமாக உட்கார்ந்தான்.

எதிர்த்தரப்பில் இன்னொரு தூண் ஓரமாக யாரோ அசைவது போல் தெரிந்தது.

''யாரது?'' என்றான். கிட்டப் போய் முகத்தைப் பார்த்தான். அதன்பின் தான் தெரிந்தது.

அவன் ஏற்கனவே இவனுக்கு யோசனை சொல்லிக் கொடுத்த நண்பன்.

"டேய்.... நீயா.... நீ எப்படி இங்கே வந்தாய்?," என்றான்.

"இரண்டு வீட்டிலும் சண்டை. அதுதான் படுத்துறங்கலாமே என்று இங்கே வந்தேன்'' என்றான். ''இரண்டு வீட்டிலும் இருப்பது சௌகரியம் என்று என்னிடம் சொன்னாயே ?" என்றான் இவன்.

"நான் அப்படி சொன்னதுக்கு ஒரு காரணம் உண்டு" என்றான் அவன்.

"என்ன காரணம்?" என்று கேட்டான் இவன்.

"அது வந்து... வேறொன்றுமில்லை... தினமும் ராத்திரியில் இந்த மண்டபத்தில் தனியாக படுத்து தூங்குவதற்கு பயமாக இருந்தது. துணைக்கு நம்மை மாதிரியே இன்னொருத்தர் கிடைத்தால் சௌகரியமாக இருக்குமே என்று நினைத்தேன். அதுதான் உனக்கு அந்த யோசனையை சொன்னேன். வா இப்படி ... துண்டைக் கீழே விரித்துப்போட்டு.. கையை தலைக்கு வைத்துக் கொண்டு பேசாமல் படுத்துத் தூங்கு" என்றான் அவன்.

நம் வாழ்க்கையை முடிவெடுக்கும் விடயத்தில் இந்த ஆள் மாதிரித்தான் பலபேர் நடந்துகொள்கிறோம் என்றார். உலகப் புகழ்பெற்ற மாமேதை எம் ஸ்காட்லெக் வீட்டுக்குத்தேவையான பொருட்களை வாங்குவதிலிருந்து கல்யாணம் பண்ணுவது – வீடுவாங்குவது வரைக்கும் அடுத்தவர்களின் பேச்சைக்கேட்டு வீணாய்ப்போகிறவர்கள் தான் அதிகம்.

அறிவுரை கேட்பதில் தப்பில்லை. ஆனால் அதன்பின் அதைப் பற்றி சரியாக சிந்திப்பது இல்லை அதுதான் தவறு.

சிலபேர் அறிவுரை சொல்வதில் மிகவும் தெளிவாக இருப்பார்கள். "ஏன் சேர் ... இரண்டு சம்சாரத்தோடு குடும்பம் நடத்துவது கஷ்டமா" என்றுகேட்டார் ஒருத்தர் .

"எனக்கு தெரியாது" என்றார் அவர்.

"ஏன்" என்று கேட்டார் இவர்

""ஏன் எனில் எனக்கு மூன்று சம்சாரம்" என்றார் அவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வறுமைக்கோட்டின் கீழுள்ள மக்களுக்கு இராணுவத்தினரால் வாழ்வாதார உதவி

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள வறுமைக்கோட்டின் கீழ் வசிக்கும் மக்களுக்கு இராணுவத்தினரால் நேற்று வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாண இராணுவ மக்கள் தொடர்பு பணிமனையில் இடம் பெற்ற மேற்படி நிகழ்வில் யாழ். மாவட்ட படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த கத்துருசிங்க,யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் , கால் நடை உற்பத்தி சுகாதார திணைக் கள பிரதிப் பணிப்பாளர் திருமதி வி.அமிர்தலிங்கம், யாழ்.மாநகர சபை மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா,மலிபன் பால் நிறுவன அதிகாரிகள்,யாழ்ப்பாண பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம்,கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் மற்றும் மதத் தலைவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். இதில் வாழ்வாதாரத்தில் பின்தங்கிய 22 குடும்பங்களுக்கு பசு மாடுகள் வழங்கப்பட்ட தோடு 50 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

மேலும் மலிபன் பால் நிறுவனத்தினரால் 6 பசு மாடுகள் வழங்கப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இதேபோன்று இராணுவத்தினரால் அண்மையில் தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மக்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2-6)

# உரியதரத்தினைக் கொண்டதாக அழகுசாதன பொருட்களால் பல்வேறு சருமநோய்கள்

வர்த்தக நிலையங்களில் விற்பனை செய்யப்படும் வாசனைத் திரவியங்கள் மற்றும் அழகு சாதனப் பொருட்களின் பதிவிலக்கம் மற்றும் காலாவதியாகும் திகதி என்பன கட்டாயம் பொறிக்கப்படவேண்டுமென சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.ஔடத அதிகாரசபையின் அதிகாரிகளால் கொழும்பில் நேற்று முன்தினம் நடாத்தப்பட்ட தேடுதலின் போது பல வாசனைத் திரவியங் களில் குறித்ததகவல்கள் உள்ளடக்கப்படாமைஉறுதிசெய்யப்பட்டதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

வர்த்தகநிலையங்களில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருக்கும் பல அழகு சாதனப்பொருட்கள் உரிய தரத்தினைக் கொண்டிருக்கவில்லையெனவும் வாசனைத்திரவியங்கள் மற்றும் அழகுசாதனப் பொருட்களின் விற்பனைக்கு தேசிய ஔடத அதிகாரசபையின் அனுமதி பெற்றுக் கொள்ளப்படல் வேண்டுமெனவும் அமைச்சு தெரிவித்துள்ளது அத்துடன் உரியதரத்தினைக் கொண்டிராத பொருட்களைப் பயன் படுத்துவதன் காரணமாக மக்கள் பல்வேறு சரும நோய்களுக்கு இலக்காவதாகவும் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

(ஸ்ரீ-9)

# கபே அமைப்பின் திருகோணமலை மாவட்ட அலுவலகம் திறந்துவைப்பு

கபே என அழைக்கப்படும் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கத்தின் திருகோணமலை மாவட்டத்திற்கான அலுவலகம் நேற்று முன்தினம் மாலை கிண்ணியா பிரதான வீதியில் திறந்து வைக்கப்பட்டது.

இவ்வமைப்பினால் திருகோணமலை மாவட்டத்திலுள்ள ஒன்பது உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல் நடவடிக்கைகள் கண்காணிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கபேயின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளராக ஆர்.எம். ராபிலும் திருகோணமலை மாவட்ட இணைப்பாளராக எம்.ஏ.எம்.ரஸ்மியும் நியமிக்கப்படவுள்ளனர். (ஸ்ரீ-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 250 | 220 |
| உருளைக்கிழங்கு | 70 | 60 | 50 |
| பச்சைமிளகாய் | 280 | 280 | 250 |
| தக்காளி | 100 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 60 |
| கோவா | 80 | 100 | 100 |
| கரட் | 160 | 200 | 110 |
| பூசணி | 60 | 60 | 60 |
| புடோல் | 70 | 100 | 70 |
| வாழைக்காய் | 50 | 70 | 50 |
| சின்ன வெங்காயம் | 110 | 100 | 100 |
| பெரிய வெங்காயம் | 85 | 70 | 70 |
| பாகற்காய் | 130 | 140 | 100 |
| வெண்டிக்காய் | 110 | 100 | 110 |
| கருணைக் கிழங்கு | - | 70 | 60 |
| பயற்றங்காய் | 200 | 220 | 150 |
| லீக்ஸ் | 140 | 150 | 120 |
| பீற்றூட் | 60 | 100 | 80 |
| கறிமிளகாய் | 140 | 200 | 180 |
| முருங்கைக்காய் | - | 600 | - |
| போஞ்சி | 140 | 160 | 140 |
| கத்தரிதம்புள்ள | 170 | 200 | 180 |
| கீரை - 1 பிடி | 5-10 | 30 | 20 |
| தேசிக்காய் | 50 | 30 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 | 50 |

# இராசி பலன்

*03.03.2011*
*(மாசி 19, வியாழக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.24 மணிக்கு*
*சதுர்த்தசி பின்னிரவு 12.47 மணிவரை*
*அவிட்டம் பின்னிரவு 12.24 மணிவரை*
*இராகுகாலம் 1.57-3.27 மணிவரை*
*சுபநேரம் 7.57-9.27 மணிவரை*

**மேடம்** வருமானம் அதிகரித்து வளம் காணும் நாள், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், பயணம் செல்ல போட்ட திட்டங்கள் வெற்றியளிக்கும்.

**இடபம்** சொன்ன சொல்லை காப்பாற்றி மகிழ்வீர்கள், செல்வாக்கு அதிகரிக்கும் நாள், பொருட் சேர்க்கைக்கு அஸ்திவாரம் இடுவீர்கள், புதிய திருப்பமான நாள்.

**மிதுனம்** மங்கையர்களால் ஏற்படும் மனக்கலக்கம் மாறும், விட்டுப் போன தொடர்புகள் மீண்டும் வந்துசேரும், பயனாளிகளால் பலன் உண்டு.

**கடகம்** தேகாரோக்கியத்தில் கூடிய கவனம் எடுக்க வேண்டியதேவை, கௌரவக்குறைவான சிலசம்பவங்கள் நடைபெறலாம், கட்டுக்கடங்காமல் செலவுகள் ஏற்படலாம்.

**சிங்கம்** வாழ்க்கைத்துணைவழியில் வரவு வந்து சேரும், பயணத்தால் சில ஆதாயம் கிடைக்கலாம், திருமணப்பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம், போசன சகமுண்டு.

**கன்னி** முன்னேற்றம்காண முயற்சி எடுக்கும் நாள், தொலைபேசி வழித்தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணைபுரியும், புத்துணர்ச்சியான நாள்,

**துலாம்** வளர்ச்சிகூடும்நாள், உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கலாம், பொருளாதார முன்னேற்றத்திற்கு பெண்வழி ஒத்துழைப்புக்கிடைக்கும்.

**விருச்சிகம்** சுபகாரியப்பேச்சுக்கள் முடிவாகும், விலைஉயர்ந்த பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், கட்டடப்பணிகள் தொடரும்.

**தனுசு** உடன்பிறப்புக்களின் ஒத்துழைப்பால் பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும், வியாபார விரோதம் விலகும், செய்தொழிலில் முன்னேற்றம் காணப்படும்.

**மகரம்** குடும்பமகிழ்ச்சி அதிகரிக்கும், பணவரவு திருப்தியளிக்கும், வாக்கு மேன்மையால் காரியம் சாதிப்பீர்கள், கௌரவமான நாள்,


**கும்பம்** இறைவழிபட்டால் இனிமை காணவேண்டிய நாள், காரிய தாமதமுண்டு, சான்றோர்களின் சந்திப்பால் சந்தோசமடைவீர்கள்.

**மீனம்** உத்தியோகத்தில் உடன் இருப்பவர்களை அனுசரித்து செல்வது நல்லது, ஆதாயம் இல்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், மாலைநேரம் மகிழ்ச்சிதரும் பயணமொன்றை மேற் கொள்ளலாம்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய இல்ல மெய் வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப் படுவதனையும் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் வெற்றிக்கேடயம் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- என். குமார்)

# தற்காலிக அடையாள அட்டை விண்ணப்ப விநியோகம் நாளை மறுதினத்துடன் நிறைவு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத்தேர்தலுக்கென தற்காலிக அடையாள அட்டை பெறுவதற்கான விண்ணப்ப விநியோக நடவடிக்கைகள் நாளை மறுதினம் சனிக்கிழமை நிறைவடையும் என தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது.

தேசிய அடையாள அட்டை இல்லாத பட்சத்தில் வாக்களிப்பின் போது தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தற்காலிக அடையாள அட்டைகளைப் பயன்படுத்தும் வகையில் இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்காக வாக்காளர்களிடமிருந்து எந்தவொரு கட்டணமும் அறவிடப் படமாட்டாது. தற்காலிக அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக வாக்காளர்கள் தமது பிரிவு கிராம அலுவலர்களிடம் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு தேர்தல்கள் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

(ஸ்ரீ-2)

# வாகனங்கள் எல்லைக்கோட்டை மீறினால் கடும் நடவடிக்கை

## பொலிஸார் எச்சரிக்கை

.(கொழும்பு)

கொழும்பு மாநகர வீதிகளில் பயணிக்கும் வாகனங்கள் அனைத்தும் அவற்றுக்குரிய பாதைக்கோடு எல்லைக்குள் மாத்திரமே பயணிக்க வேண்டும் என்றும் மீறினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸ் வாகன போக்குவரத்துப் பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.

விதிமுறையை மீறும் வாகனச் சாரதிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று வாகன போக்குவரத்துப் பிரிவுக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் அசோக விஜயதிலக தெரிவித்துள்ளார்.

வீதிகளில் ஏற்படும் வாகன நெரிசல்களைக் குறைப்பதற்கும் ஏனைய வாகனங்களுக்கு இடைஞ்சல்கள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கும் ஏதுவாகவே இத்தீர்மானம் எடுக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

இந்த விதிமுறையை மீறி வாகனங்களைச் செலுத்தும் சாரதிகளுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்து முதல் தடவை குற்றம் இழைப்பவர்களுக்கு ஆயிரத்து 500 ரூபாவும் தொடர்ந்தும் அவர்கள் அதே குற்றத்தை இழைக்கும் பட்சத்தில் கடுமையான தண்டனைகள் வழங்கப்படும் என்றும் பிரதிப்பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# ஜே/ 61, ஜே/ 91 கிராம சேவையாளர் பிரிவுகளில் இன்று மீள்குடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட ஜே/61 கிராம சேவையாளர் பிரி வின் கீழுள்ள துண்டி மகேந்திரபுரம் எழிலூர், புனிதபுரம் மற்றும் உதயபுரம் போன்ற பகுதிகளிலும் ஜே/ 91 கிராம சேவையாளர் பிரிவின் கீழுள்ள கிழக்கு அரியாலை, பூம்புகார் பகுதிகளிலும் மக்களை மீள் குடியேற்றும் நடவடிக்கைகள் இன்று வியாழக்கிழமை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா முன்னிலையில் நடைபெறவுள்ளது.

இப்பகுதிகளை சார்ந்த மக்கள் இடம்பெயர்ந்துள்ள நிலையில் தொடர்ந்தும் அமைச்சரிடம் முன்வைத்த கோரிக்கைகளுக்கு இணங்க அவர் மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக இம் மீள்குடியேற்றங்கள் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட மீள் குடியேற்றம் செய்யப்படாதிருந்த ஏனைய அனைத்துப் பகுதிகளிலும் அமைச்சரது நடவடிக்கைகள் காரணமாக ஏற்கனவே மீள் குடியேற்றங்கள் இடம் பெற்றுள்ள நிலையிலேயே இன்று வியாழக்கிழமை மேற்படி மீள்குடியேற்றங்கள் இடம்பெறுகின்றன.

(ஸ்ரீ)

# 2011.03 03 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★1575- 'வின் முகலாயப் பேரரசர் அக்பர் வங்காளப் படைகளைத் தோற்கடித்தார்.

★1833- அகிலத்திரட்டு அம்மானையின்படி, நாராயணனின் அவதாரமாக ஐயா வைகுண்டர் திருச்செந்தூரில் பிறந்தார்.

★1857- பிரான்ஸும் ஐக்கிய இராச்சியமும் சீனா மீது போரை அறிவித்தன.

★1878- ஒட்டோமான் பேரரசின் கீழ் பல்கேரியா விடுதலை அடைந்தது.

★1905- ரஷ்யாவின் இரண்டாம் நிக்கலஸ் மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட சபையை (டூமா)வை ஏற்படுத்த இணங்கினான்.

★1918- முதலாம் உலகப் போரில் ரஷ்யாவின் பங்களிப்பை முடிவுக்குக் கொண்டு வர ஜேர்மனி, ஆஸ்திரியா மற்றும் ரஷ்யா ஆகியன உடன்பாட்டிற்கு வந்தன.

★1923- டைம் இதழின் முதல் பதிப்பு வெளியிடப்பட்டது.

★1933- ஜப்பானில் ஹொன்ஷூ என்ற இடத்தில் நிலநிடுக்கம் மற்றும் ஆழிப் பேரலை காரணமாக 3ஆயிரம் பேர் வரையில் இறந்தனர்.

★1938- சவுதி அரேபியாவில் எண்ணெய் கண்டுபிடிக்கப்பட்டது.

★1939- மும்பையில் மகாத்மாகாந்தி ஆதிக்கவாதிகளுக்கு எதிராக உண்ணா நோன்பை ஆரம்பித்தார்.

★1942- இரண்டாம் உலகப் போர்: மேற்கு அவுஸ்திரேலியாவில் புரூம் என்ற நகரில் ஜப்பானின் பத்து போர் விமானங்கள் குண்டுத் தாக்குதலில் ஈடுபட்டதில் 100 பேருக்கு மேல் கொல்லப்பட்டனர்.

★1943- இரண்டாம் உலகப் போர்: லண்டனில் விமானக் குண்டுத்தாக்குதலின் போது சுரங்கத் தொடரூந்து நிலையத்தில் ஒதுங்கிய 173 பேர் நெரிசலில் சிக்கி இறந்தனர்.

★1945- இரண்டாம் உலகப் போர்: முன்னர் நடுநிலையாக இருந்த பின்லாந்து அச்சு நாடுகளுக்கெதிராக போரை அறிவித்தது.

★1966- பிரித்தானிய போயிங் 707 பயணிகள் விமானம் ஒன்று ஃபியூஜி மலையில் விபத்துக்குள்ளானதில் 124 பேர் கொல்லப்பட்டனர்.

★1969- நாசாவின் அப்பலோ 9 விண்ணில் ஏவப்பட்டது.

★1971- இந்தோ-பாகிஸ்தான் போர் ஆரம்பமானது.

★1974- பாரிஸ் அருகில் துருக்கிய விமானம் ஒன்று வீழ்ந்து மோதியதில் அதில் பயணம் செய்த 346 பேரும் கொல்லப்பட்டனர்.

★1974- ரோமன் கத்தோலிக்கம் மற்றும் லூத்தரன் ஆகிய கிறிஸ்தவ மதப் பிரிவுகள் இரண்டும் இணைந்தன.

★1991- சோவியத் ஒன்றியத்தில் இருந்து பிரிந்து செல்ல ஆதரவாக லாத்வியாவின் 74% மக்களும் எஸ்தோனியாவின் 83% மக்களும் வாக்களித்தனர்.

★2002- சுவிட்சர்லாந்து ஐ.நா.வில் இணைவதற்கு ஆதரவாக சுவிட்சர்லாந்தில் மக்கள் வாக்களித்தனர்.

### பிறப்புக்கள்

★1839- ஜாம்ஷெட்ஜி டாடா, இந்தியத் தொழிலதிபர் (இ.1904)

★1845-கியார்கு கேன்ட்டர், கணிதவியலர் (இ.1918)

★1847-அலெக்ஸாண்டர் கிரஹம் பெல், கண்டுபிடிப்பாளர் (இ. 1922)

★1867- பாண்டித்துரைத் தேவர், தமிழறிஞர் (இ.1911)

★1950- திக்குவல்லை கமால், ஈழத்து எழுத்தாளர்.

★1955-கணபதி கணேசன், தமிழ் இதழியலாளர் (இ.2002)

★1970- இன்சமாம் உல் ஹக், பாகிஸ்தான் துடுப்பாட்டக்காரர்

### இறப்புக்கள்

★1703-ரொபர்ட் ஹூக், ஆங்கிலேய அறிவியலாளர் (பி.1635)

★1707- ஔரங்கசீப் , மொகாலயப் பேரரசர் (பி.1618)

★1996- சி.சிவஞானசுந்தரம் , சிரித்திரன் ஆசிரியர்.

★1999- ஜேராட் ஹேர்ஸ்பேர்க், நோபல் பரிசு பெற்றவர் (பி.1904)




1992 இல் பொஸ்னியா என்ற நாடு உருவாக்கப் பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கிளிசெநாச்சி புன்னை நீராவி அ.த.க. பாடசாலையின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஏஏஏ வென்சேஸ் பிறைவேட் லிமிட்டெட் நிறுவனத் தலைவர் க.செவ்வேள் வெற்றி பெற்ற அணிக்கு வெற்றிக் கேடயம் வழங்குவதையும் வெற்றி பெற்ற மாணவர்களுடன் நிற்பதையும் படங்களில் காணலாம்.

# சுவரொட்டிகளை ஒட்டுவதற்கு மீளவும் தடை விதிப்பு

(கொழும்பு)

சுவரொட்டிகளை ஒட்டுவதற்கு மீளவும் தடை விதிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது. தேர்தல் பிரசாரங்களை அடிப்படையாகக் கொண்டு சட்டவிரோதமான முறையில் சுவரொட்டிகளை ஒட்டக் கூடாது என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சுவரொட்டிகள் மற்றும் பதாகைளை காட்சிப்படுத்துவதற்கு அரசாங்கம் சலுகைக் காலமொன்றை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தங்களது விருப்பு வாக்கு இலக்கங்களையும் தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்ளச் சந்தர்ப்பம் வழங்கும் நோக்கில் தங்காலிகமாக சுவரொட்டித் தடை நீக்கப்பட்டது.

நாட்டின் சகல தேர்தல் பிரசார சுவரொட்டிகளையும் அகற்றுமாறு பொலிஸ் மா அதிபர் பணிப்புரை விடுத்துள்ளார். (ஸ்ரீ-2)

# இணையத்தள ஊடுருவலை தடுக்கும் குழுவின் தலைமைப்பதவி இலங்கைக்கு

(கொழும்பு)

ஆசிய - பசுபிக் வலய கணனி அவசர பிரசார குழுவின் தலைமைத்துவம் இலங்கைக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

பாரிய இணையத்தள ஊடுருவல்களின் போது ஏற்படும் பிரதி கூலங்களை மட்டுப்படுத்திக்கொள்வதற்கான முறைகளை கவனத்தில் கொள்ளுதல் மற்றும் அவ்வாறான நிலைமைகளை தடுத்தல் போன்ற விடயங்களை மேற்கொள்வதே இந்தக் குழுவின் செயற்பாடாகும்.

ஆசிய-பசுபிக் வலயத்தில் அங்கம் வகிக்கும் 15 நாடுகளை பங்களிப்பு செய்யும் வகையில் அவற்றின் குழுக்கள் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன.

இலங்கையின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்ப முகவர் நிறுவனங்கள் அந்த குழுவில் பிரதிநிதித்துவம் வகிக்கின்றன.

முறைகேடான மின்னஞ்சல்கள் மற்றும் குறுஞ்செய்திகள் மூலம் மேற்கொள்ளப்படும் இணையத்தள ஊடுருவல் அச்சுறுத்தல்களுக்கு இந்தக் குழு மாற்று நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்கள இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கு இணைய தாக்குதல்களில் இருந்து பாதுகாப்பு வழங்குவதற்கு அவசியமான நடவடிக்கை மேற்கொள்வதும் இந்த குழுவின் இலக்காக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# குவைத்தில் குழுக்களுக்கிடையிலான மோதலில் இலங்கையர் ஒருவர் பலி

குவைத்தில் ஜலீப் சூயுக் என்னும் இடத்தில் ஆசிய குழுக்களுக்கிடையே ஏற்பட்ட மோதலில் இலங்கையைச் சேர்ந்த 30 வயதான ஒருவர் பலியாகியுள்ளதுடன் மூவர் காயமடைந் துள்ளனர்.

சண்டை இடம்பெற்றதாக அறிந்தும் பொலிஸாரும் மருத்துவ உதவிக் குழுவினரும் சம்பவம் நடந்த இடத்திற்கு விரைந்தபோது பாதிக்கப்பட்டவர்கள் ஏற்கனவே வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு விட்டனர்.

இவர்கள் வைத்தியசாலைக்கு சென்ற போது ஒருவர் உயிரிழந்துவிட்டார். இவரது கழுத்தில் இரண்டு முறை கத்தியால் குத்தப்பட்டிருந்தது.

இச்சம்பவம் தொடர்பில் 8 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர். இதில் கத்தியால் குத்தியதாகக் கூறப்படும் நபரும் அடங்குகின்றார். (ஸ்ரீ-2)

# களனியில் ஆர்ப்பாட்டம் நடத்த முயன்றால் அவர்களின் தலையிருக்காது

## அமைச்சர் மேர்வின் எச்சரிக்கை

(கொழும்பு)

அதிகரித்துச் செல்லும் விலைவாசியைக் காரணம் காட்டி அரசாங்கத்துக்கு எதிராக யாராவது களனியில் ஆர்ப்பாட்டம் நடாத்த முயன்றால் அவர்களின் தலையிருக்காது என்று அமைச்சர் மேர்வின் சில்வா எச்சரித்துள்ளார்.

களனியைப் பொறுத்தமட்டில் பச்சை, சிவப்பு நிறங்களும் சிறிதேனும் இடமளிக்கப் போவதில்லை என்று வலியுறுத்தியுள்ளார். அதன் காரணமாக அந்தக் கட்சிக்காரர்களில் ஒருவரையாவது இம் முறை தேர்தலின் மூலம் தேர்ந்தெடுக்க வேண்டாம் என்றும் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த இரண்டு நாட்களுக்கு முன் களனியில் நடைபெற்ற ஏழைகளுக்கு நிவாரணம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த வெள்ள அனர்த்தத்தின் போது களனி தப்பித்துக்கொண்டது தன் திறமையினால் என்று மார் தட்டிக்கொண்டுள்ள அமைச்சர் தொடர்ந்தும் தன் மீது நம்பிக்கை வைத்துத் தான் கை காட்டுகின்றவர்களுக்கு வாக்களித்து தனது பொறுப்பில் களனியின் உள்ளூராட்சி மன்றங்களைத் தருமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஸ்ரீ-2)

# மெய்வல்லுநர் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

புத்தூர் ஸ்ரீ பஞ்ஞசீக வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் கு.ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம், சிறப்புவிருந்தினர்களாக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் வே. பாலசுப்பிரமணியம் , யாழ். வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் பூ.குகதாசன் , புத்தூர் கிழக்கு கிராம சேவை அலுவலர் பெ. பெ. அன்ரன் அலோசியஸ் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-9)

❖ ❖ ❖

(யாழ்ப்பாணம்)

யா/ கோப்பாய் தெற்கு கந்தவேள் த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் சு.விவேகானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி. அ.வேதநாயம் , சிறப்பு விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் வே. பாலசுப்பிரமணியம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

மேலும் கௌரவ விருந்தினர்களாக நீர்வேலி ப.நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் நா. சுந்தரலிங்கம் , இருபாலை கிழக்கு கிராம சேவகர் பொ. மகேந்திரன் , பாடசாலையின் பழைய மாணவரான க.ஜெயபாலசிங்கம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஸ்ரீ-9)

# பங்குனி உத்தர பொங்கல் விழா

கரைச்சி புளியம் பொக்கனை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பங்குனி உத்தரப் பொங்கல் எதிர்வரும் 19ஆம் திகதி சனிக் கிழமை நடைபெறும்.

இதனை முன்னிட்டு வியாபாரம் மேற்கொள்ளும் வணிகர்களுக்கான வியாபார நிலைய ஏல விற்பனை எதிர்வரும் 6ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெறுமென ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)

# பிறந்தவுடனேயே புதைக்கப்பட்ட சிசு தொடர்பான விசாரணை இன்று

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வடக்கிலுள்ள வீடொன்றின் பின்னால் பிறந்தவுடனேயே புதைக்கப்பட்டிருந்த 28 வார சிசுவின் சடலம் தொடர்பான வழக்கு இன்று வியாழக்கிழமை யாழ். நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

இச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் குழந்தையின் தாய் மற்றும் இருவரை கோப்பாய் பொலிஸார் கைது செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2-6)

# நாடு முழுவதும் 4 இலட்சம் ஏக்கர் பரப்பில் விவசாய நடவடிக்கை

(கொழும்பு)

நாடு முழுவதிலும் சுமார் நான்கு இலட் சம் ஏக்கர் பரப்பில் விவசாயத்தை மேற்கொள்வதற்கு விவசாயத்துறை அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்காக சுமார் 750 மில்லியன் ரூபாய் செலவிடப்படவுள்ளதாக கூறப்படுகிறது.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சுமார் 5 ஆயிரத்து 500 ஏக்கர் காணியில் விவசாய நடவடிக்கையை முன்னெடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சிறுதேவை உற்பத்திக்காக இந்த விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதற்காக 1.6 மில்லியன் டொலர்கள் பெறுமதியான உதவிகளை வழங்க உணவு மற்றும் விவசாய ஒழுங்கமைப்பு இணங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# கொழும்பு துறைமுக எண்ணெய் களஞ்சியம் விஸ்தரிப்பு

(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்தின் எண்ணெய் களஞ்சியசாலையின் கொள்ளளவை விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவுள்ளன.


தற்போது அதன் களஞ்சியப்படுத்தல் கொள்ளளவு 29ஆயிரத்து 500 மில்லியன் மெற்றித் தொன்னாகக் காணப்படுகிறது.

இதனை 95 ஆயிரம் மெற்றிக்தொன் எண்ணெயை களஞ்சியப்படுத்தும் வகையில் விஸ்தரிக்கத் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் முதல் கட்டமாக 5 ஆயிரத்து 200 மெற்றித் தொன் எண்ணெயை களஞ்சியப்படுத்தும் நிலையம் ஒன்றை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக 110 மில்லியன் ரூபாய்கள் செலவிடப்படவுள்ளதாக கூறப்படுகிறது. (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கள்ளிக்காட்டு இதிகாசம் 54



கவிப்பேரரசு வைரமுத்து

"ஒங்களுக்கென்ன. அறுவைக் கேசுக்கு அவசியமில்ல. அதுனால இந்த அழிச்சாட்டியம் பண்றீக."

- அதுக மேல எரிஞ்சு விழுந்தான் மொக்கராசு.

அவன் சோட்டுப் பயலுகளா நாலஞ்சு பயக வந்தாக நேந்து ஊர்வலத்துக்கு உடுத்தியிருந்த அதே சட்டை வேட்டியோட கிழம்பினாரு அய்யா. போற வழியில லேசா ஒருத்தன் காதக்கடிச்சான் மொக்கராசு. "ஏன்டா செம்பட்டை! ரொம்பவலிக்குமா?" "யாருக்குத்தெரியும்.."-செம்பட்டை உதட்டைப் பிதுக்கினான்.

"உனக்கு நடந்திச்சுன்னு சொன்னாக"

"நடக்க விட்டனா? ஊர விட்டே ஓடிப்போயிட்டேனில்ல?"

"ஓ அப்படியும் ஒன்னு இருக்கோ.." மொக்கராசு தீவிரமாய் யோசித்தான்.

ஊருக்கு வடக்கே ஒரு புளிய மரம். புளியமரத்துக்குக்கீழே ஒரு குத்துக்கல்லு. அதுதான் பலபேரைப் பலிகொண்ட பலிகல்லு. கத்தியுடனும்சகல பரிவாரங்களோட தயாரா இருந்தான் நாவிதர் சவட்டையன். கண்ணு ரெண்டையும் இறுக்கிமூடிக்கிட்டு 'யப்பே யாத்தே' ன்னு கத்திப்பாத்தான் மொக்கராசு. "இதுக்கெல்லாம் அப்பன் ஆத்தாளக் கூப்பிட முடியுமா..."-தோள அழுத்திப் பிடிச்சிருந்த ஒருத்தன் அவன் தலையில ஒரு போடு போட்டான்.

"இந்தா...இந்தா..இம்புட்டுத்தான்... பல்லக் கடிச்சுப் பொறுத்துக்கப்பா. முடிஞ்சுபோச்சு."

"அய்யய்யோ... என்னியக் கொல்லப் பாக்கிறாங்கடா!" - மொக்கராசு கத்தினான்.

லாடம் அடிக்கிற மாட்டை அமுக்கிப் புடிக்கிற மாதிரி அழுத்திக் கெடந்த பயக, புடிச்ச புடிய இப்ப லேசா விட்டாக. இப்பக் காயத்துக்குக் கட்டுமருந்து பண்ண ஆரம்பிச்சான் சவட்டையன்.

"அம்புட்டுத்தான் போகலாம். முக்காத் துட்டுப் பெறாத வேலைக்கு இந்த முக்கு முக்குறீகளே..." சவட்டையன் அலுத்துக் கிட்டான். தேங்கா, பழம், அரிசி, துணிமணி வாங்கிக்கிட்டு ஆயுதங்கழுவிட்டு அவன்பாட்ல போயிட்டான். காவிவேட்டியோட கழுத்துல ஒரு துண்டோட கையில கம்பும் புடிச்சு, "பட்டும் படாம" நடக்க ஆரம்பிச்சான் மொக்கராசு. வலி உசுரு போகுது - அடக்கிப் பாத்தாலும் கண்ணுல தண்ணியாக் கொட்டுது.

வேட்டி ஏற்கெனவே ஒரு இடைஞ்சலு. "இது" வேறரெண்டாம் இடைஞ்சலு.

இவன் அங்க புறப்பட இங்க வீட்ல கொத கொதன்னு கொதிச்சுக்கிட்டிருந்துச்சு கோழிக்குழம்பு. இந்த மாதிரி ஆளுக்கு கும்பா நிறைய கோழிக் குழம்பு ஊத்தி வைப்பாக; எலும்பு இல்லாமக் கறியா எடுத்துப் போடுவாக. எதுக்கு...? ஊனப்பட்டு வர்ற ஆளுக்கு ஒரு உபகாரந்தான்.

"எனக்கு மட்டும் இன்னொரு தடவை கோழிக் குழம்பு வச்சுத்தர ஆளு இருந்துச்சு... ரெண்டாம் வெட்டும் வெட்டிக்கிருவேன்ல."

கருவாயன் சொன்ன சொல்லுக்கு மொக்கராசத் தவிர எல்லாரும் சிரிச்சாக.

மொக்கராசு வீட்டுக்குள்ள நுழைஞ்சானோ இல்லையோ கோழிக்குழம்போடசேத்துக் குடும்பமே கொதிச்சுக்கிட்டிருந்துச்சு.

"கொட்டுக்காரன் குலவக்காரனுக்குக் குடுத்தது போக மிச்ச மொய்ப்பணம் எங்கம்மா?"

உடம்புநடுங்கப் பதறிக் கேட்டுக் கொண்டிருந்தார் பேயத்தேவர்.

"நான் என்னப்பா செய்வேன். காசக் குடுக்கிறியா... கழுத்த நெரிச்சுக் கொல்லட்டுமான்னு சின்னு அண்ணன் கேக்குறப்ப நான் உசுரப் பாப்பனா... உண்டியலப் பாப்பனா..." அச்சத்தோடும் அழுகையோடும் விம்மினாள் மின்னலு. வாய் கொப்பளிக்க வச்சிருந்த தண்ணிச் சொம்பத் தரையில போட்டுட்டு கயித்துக் கட்டில்ல பெருமூச்சு விட்டு விழுந்தாரு பேயத்தேவரு.

கெணறு வெட்டத்தான் பூதம் வரும்ன்னு கேள்விப்பட்டிருக்கோம். கெணறு வெட்ட நெனைக்கிறப்பவே பூதம்வந்திருச்சு பேயத்தேவருக்கு.

ரெண்டுவிதமான சாவு இருக்கு மனுசனுக்கு. ரத்தமும் சதையும் எலும்புமா கொசகொசன்னு கெடக்குற இந்த உடம்புக்கு நேருதே - அது ரெண்டாஞ் சாவு - ஒடம்பு சாகுமுன்ன மனசு செத்துப் போகுது பாருங்க - அதான் மொதல் சாவு.

உடம்பு செத்துப் போனா மண்ணுக்குள்ள பொதைக்கிறோம். இல்ல எரிக்கிறோம். மனசு செத்துப்போனா அவன் அவன் அத உடம்புக்குள்ளேயே பொதச்சிர்றான்; இல்ல உள்மூச்சில் எரிச்சிர்றான். உடம்பு சாகாம மனசு செத்துப் போன மனுசங்கள ஊரு தேசத்துல பரவலா அங்கங்க பாக்கலாம். வேட்டி சட்டை கட்ன ஆவியா அலைவாக பாவம்!

"மனுசன் செத்தாலும் சாகலாம் மகனே! மனசு செத்துரக்கூடாது"

பாயில படுக்கவச்சு, தாங்கிப் புடிச்ச தல தொங்குறதுக்கு முன்னால பேயத்தேவருக்கு பெரியதேவர் சொன்ன கடைசி வார்த்தை இதுதான்.

அந்த வார்த்தை ஞாபகத்துக்கு வந்த தும் தொங்கித் துவண்டு கிடந்த பேயத்தேவர் மனசு ஒரே தவ்வாத் தவ்வி ஒரு முடி வோட எந்திரிச்சு உக்காந்துச்சு. செய் முறைக்கு வந்த காசை சின்னு தூக்கிட்டு ஓடிப் போயிட்டான். நாய் வாயில போன தேங்கா வருமா? வந்தாலும் வெளங்குமா? அந்த அவத்தப் பயல நெனைச்சு நான் சவத்தப்பயலாவா உக்காந் திருக்க முடியும். தலைய வெட்டினாலும் கெணறு வெட்டாம விடுவனா? ஆறு ஆளு மூணுமாசம் செய்யற வேலைய ரெண்டாளு ஒம்பது மாசம் செய்யக் கூடாதா? சித்தாளா மொக்கராச வச்சுக் கிட்டு நான் ஒத்தாளாக் கிணறு வெட்டித் தண்ணி உண்டாக்கலேன்னா ஒரு பக்கத்து மீசையச் செரச்சு எறிஞ்சிர்றேன்.

விடலப் பய மாதிரி விசுக்குன்னு எந்திரிச்சாரு பேயத்தேவர். ஒரு கம்புமூடையை அவரா நகத்தி நகத்தித் தாழ்வார விளிம்புக்குக் கொண்டாந்து, கீழ் குனிஞ்சு வளஞ்சு மூடைய முதுகுல அணச்சு பொசுக்குன்னு தூக்கி விசுக்குன்னு நடந்தாரு.

"எழுவது வயசுக் கெழவனுக்கு என்னா தைரியமப்பா! சும்மா உடும்பு மாதிரியில்ல இருக்கு ஒடம்பு" தெருவுல பாத்த விடலைக தெகைச்சு வழிவிட்டாக.

"செமக்கிறவனுக்குத்தான செம தெரியும். பேய்க்கனம் கனக்குதே! தானியத்துக்குத்தான் சத்து கூடிப்போச்சா? இல்ல எனக்குத்தான் சத்து கொறைஞ்சு போச்சா?"

ஊருக்குப் பரம்பரையாக் கிணறு வெட்டுற குடும்பம் முத்துக்காளி நாயக்கர் குடும்பம். கள்ளிக்காட்டுச் சீமையில இருக்கிற எழுபது எம்பது கெணறுகளும் முத்துக்காளி நாயக்கர் வீட்டாளுகளாச் சேந்து வெட்டி முடிச்சது தான் அவுக வீட்டுத் திண்ணையில தொப்புட்டீர்னு போட்டாரு கம்பு மூடைய. அண்ணாந்து ஆச்சரியமாப் பாத்தாரு முத்துக்காளி நாயக்கர்.

"அய்யா! வறட்டுக் காட்ல கிணறு வெட்டப் போறேன். ஒங்களுக்குக் கூலி கொடுத்து கெணறு வெட்ட எனக்கு தாட்டியம் பத்தாது. கூடக்கொறைய நெனக்காதிக. இந்தக்கம்பு மூடையை நாங்கொடுத்த காணிக்கையா நெனைச்சுக்குங்க. கெணறு வெட்ட ஒங்க தளபாடம் மட்டும் கொடுத்து உதவுங்க. ஏழேழு தலமொறக்கும் ஒங்கள மறக்க மாட்டோம். முத்துக்காளி நாயக்கர் குடும்பத்தக் கும்புடுங்கடான்னு மொக்கராசுக்கு பெறக்கும் பிள்ளைக்கும் சொல்லிவிட்டுச் சாவேன். கம்பு மூடைய எடுங்க... கடப்பாரை சாமான் குடுங்க.

இன்னும் விடியல சூரிய ஒளியோட முதல் கம்பி வந்து விழுகல பூமியில. வெளிச்சத்த வியாசிக்குது பூமி - அனுப்பலாமா வேனாமான்னு யோசிக்குது வானம். மம்பெட்டி - கடப்பாரை - சம்மட்டி - கூரை - கூந்தாலம் - ஆப்பு - சம்பர்க்கம்பி எல்லாத்தையும் ஏத்திக்கிட்டு வறட்டுக்காடு வந்து சேர்ந்தது வண்டி. அந்த இடம்தான் காட்டுக்குக் பள்ளக் கால். ஒ(ை)டச் சாராங்கம் "தண்ணிக்கூறு" இருந்தா அங்கதான் இருக்கணும். (வளரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சங்கத்தானை ஸ்ரீமுருகன் முன்பள்ளி கலைவிழா அண்மையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தென்மராட்சியைச் சேர்ந்தநாதஸ்வர வித்துவான் மு.பஞ்சாபிகேசனை தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதனையும் கௌரவிக்கப்பட்ட முதிய சேவையாளர்கள் மற்றும் முன்பள்ளி மாணவர்களுடன் விருந்தினர்களும் நிர்வாகத்தினரும் நிற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- சாவகச்சேரி செய்தியாளர்)

# பண்டாரநாயக்கவின் சிலையை இடமாற்ற சந்திரிகா எதிர்ப்பு

(கொழும்பு)

முன்னாள் பிரதமரும் தனது தந்தையுமான எஸ்.டபிள்யூ .ஆர்.டி. பண்டாரநாயக்காவின் சிலையை காலி முகத்திடலிலிருந்து அகற்றுவதையோ வேறிடத்திற்கு மாற்றுவதையோ தான் முற்றாக எதிர்ப்பதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

சிங்கப்பூர் ஹோட்டல் நிறுவனமான ஷாங்கிரி லாவினால் காலி முகத்திடலில் உல்லாச ஹோட்டலொன்று நிர்மாணிக்கப்படவுள்ளதால் பண்டார நாயக்கவின் சிலை அங்கிருந்து இடம்மாற்றப்படலாம் என ஊகங்கள் நிலவுகின்றன.

இது குறித்து முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் கேட்டபோது இச்சிலையை இடமாற்றுவதற்கு அல்லது அகற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து தனக்கு எதுவும் தெரியாது எனக் கூறினார்.

இச்சிலையை நிர்மாணிப்பதற்கு மேற்படி இடம் தெரிவு செய்யப்பட்டதற்கு கலை ரசனை, கட்டட நிர்மாணக் கலை, சிற்பக்கலை விவகாரம் உட்பட பல காரணங்கள் உள்ளதாக தெரிவித்தார்.

இது பண்டாரநாயக்கவின் பெயரை கட்சியிலிருந்து நீக்குவதற்கான சிந்தனையின் ஒரு பகுதி. இது ஒரு சதியாகும் எனவும் இச்சிலையை இடமாற்றும் திட்டத்திற்கு எதிராக எகிப்து மற்றும் ஏனைய இஸ்லாமிய நாடுகளில் நடைபெறுவதைப் போன்ற ஆர்ப்பாட்டங்களுக்குதான் ஏன் ஏற்பாடு செய்யவில்லை என பலர் தன்னிடம் தொலைபேசி மூலம் கேட்பதாகவும் சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

சிலையொன்றை இடமாற்றுவதற்கு எதிராக இத்தகைய ஆர்ப்பாட்டங்கள் தேவை என நான் கருதவில்லை. அது அவசியமானால் ஊழல், வாழ்க்கைச் செலவு உயர்வு, தவறான பொருளாதார முகாமைத்துவம், இடம் பெயர்ந்த தமிழ் மக்கள் நடத்தப்பட்ட விதம் என்பனவற்றுக்கு எதிராகவே அது நடைபெறவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# இலங்கைப் பணியாளர்கள் சவுதி அரேபியாவில் நிர்க்கதி

(கொழும்பு)

சவுதி அரேபியாவுக்கு தொழிலுக்காகச் சென்று நிர்க்கதியாக்கப்பட்ட 137 இலங்கைப் பணியாளர்கள் ஜித்தாவின் பலாத் நகரில் உள்ள முகாமொன்றில் தங்கியுள்ளனர்.

சுமார் ஒரு மாத காலமாக முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளதாம் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளதாகவும் அன்றாடம் தமக்கு ஒருவேளை உணவே வழங்கப்படுவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

முகாமில் தங்கியுள்ள பலர் பல்வேறு நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை குறித்த பணியாளர்கள் தொடர்பான சட்ட நடவடிக்கைகள் நிறைவு பெற்றவுடன் அவர்களை நாட்டிற்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என ஜித்தாவிலுள்ள இலங்கை தூதரக உயர் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

# லிப்டன் சுற்றுவட்டத்தை மற்றுமொரு தாரீர் சதுக்கமாக மாற்றுவோம்

## ஜே.வி.பி.சூளுரை

(கொழும்பு)

மற்றுமொரு தாரீர் சதுக்கமாக லிப்டன் சுற்று வட்டத்தை மாற்றுவோம் என ஜே.வி.பி. கட்சி சூளுரைத்துள்ளது.

எகிப்தில் தாரீர் சதுக்கத்தில் அரசாங்கத்திற்கு எதிராக நடைபெற்ற போராட்டங்களினால் அந்நாட்டு ஜனாதிபதி பதவி விலகியிருந்தார்.

வாழ்க்கைச் செலவு உயர்விற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் ஜே.வி.பியினர் நேற்று முன்தினம் பாரிய ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியிருந்தனர்.

முதலாளித்துவப் பொருளாதாரக் கட்டமைப்பை தகர்த்தெறியும் நோக்கில் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் என ஜே.வி.பி கட்சியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

நீண்ட போராட்டத்தின் ஆரம்பமாக இன்றைய பேரணியை கருத வேண்டுமெனவும் நாட்டின் சகல பிரதேசங்களைச் சேர்ந்த மக்களும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வடக்கு,கிழக்கு, தெற்கு மற்றும் மேற்கு மக்கள் அனைவருமே இன்று பொருளாதார சுமையினால் துன்புறுகின்றனர். இவ்வாறான ஒரு பின்னணியில் அரசாங்கம் தொடர்ந்தும் மக்களை பொறுமை காக்குமாறு கோரி வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தற்போதைய ஆட்சியாளர்கள் பதவி விலகிச் செல்ல வேண்டிய காலம் உருவாகியுள்ளதென கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

பதவி விலகிச் செல்லாவிட்டால் அவர்களை பலவந்தமாக வீட்டுக்கு அனுப்பி வைக்க நேரிடும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

எகிப்து, லிபியா போன்ற நாடுகளில் இடம்பெற்றதைப் போன்று இலங்கையில் கிளர்ச்சி வெடிக்காது என ஆளும் கட்சியினர் நினைத்தால் அது தவறான எண்ணம் என ரில்வின் சில்வா குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# பிளாஸ்டிக் கொள்கலன்களை கட்டாயமாக்கும் நடவடிக்கை பிற்போடப்பட்டுள்ளது

(கொழும்பு)

மரக்கறி வகைகளை கொண்டு செல்லும் போது பிளாஸ்டிக் கொள்கலன்களை பயன்படுத்துவதைக் கட்டாயமாக்கும் நடவடிக்கைகள் தற்காலிகமாகப் பிற்போடப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கைகளை நேற்று முன்தினம் முதல் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

மரக்கறிகளை சந்தைக்கு கொண்டு செல்லும் போது பிளாஸ்டிக் கொள்கலன்களை பயன்படுத்துவது தொடர்பில் விவசாயிகள் பல்வேறு முறைப்பாடுகளை முன் வைப்பதாக கூட்டுறவு மற்றும் உள் நாட்டு வர்த்தக அமைச்சின் செயலாளர் சுனில் எஸ்.சிறிசேன குறிப்பிட்டுள்ளார்.

பிளாஸ்டிக் கொள்கலன்களைக் கொள்வனவு செய்தல், போக்குவரத்து சிக்கல்கள், விவசாய நிலங்களில் இருந்து போக்குவரத்தில் ஈடுபடுவதில் காணப்படும் சிக்கல்கள் மற்றும் போக்குவரத்து செலவு போன்ற பல்வேறு முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

அதன் பிரகாரம் குறித்த பிரச்சினை களுக்கான தீர்வினைக் காணும் வகையில் ஒத்திகை நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சில விவசாய அமைப்புக்களைத் தெரிவு செய்து அவற்றின் ஒத்துழைப்புடன் பிளாஸ்டிக் கொள்கலன்களின் மூலம் மரக்கறி மற்றும் பழங்களை கொண்டு செல்லும் போது ஏற்படும் பிரச்சினைகளை இனங் காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையால் போக்குவரத்து செலவைக் குறைக்கவும் மரக்கறி மற்றும் பழங்கள் வீண் விரயமாவதைக் கட்டுப்படுத்தவும் முடியும் என கூட்டுறவு மற்றும் உள் நாட்டு வர்த்தக அமைச்சின் செயலாளர் சுனில் எஸ்.சிறிசேன குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஒத்திகை நடவடிக்கைகள் அங் குரன்கெத்த, நுவரெலியா, பண்டாரவளை மற்றும் தம்புள்ளை ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்படவுள்ளன. (ஸ்ரீ-2)

# திருடப்பட்ட துவிச்சக்கரவண்டிகள் பொலிஸாரால் மீட்கப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழில் அண்மையில் திருடப்பட்ட இரண்டு துவிச்சக்கரவண்டிகள் பொலிஸாரால் மீட்கப்பட்டு யாழ். பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 17ஆம் திகதி குருநகர் பகுதியிலுள்ள வீடொன்றில் இருந்தே இந்த இரண்டு துவிச்சக்கரவண்டிகளும் மீட்கப்பட்டுள்ளதாக யாழ். பொலிஸ் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களும் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டவர்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் இவ்விரு துவிச்சக்கரவண்டிகளும் பரமேஸ்வராச்சந்தி, குருநகர் ஆகிய பகுதிகளில் இருந்தே திருடப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

இதில் பரமேஸ்வராச் சந்தியில் இருந்து பெண்களுக்கான துவிச்சக்கரவண்டியும் குருநகர் பகுதியில் இருந்து ஆண்களுக்கான துவிச்சக்கரவண்டியும் மீட்கப்பட்டுள்ளன.

தற்போது இவ்விரு துவிச்சக்கரவண்டிகளும் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளதால் உரியவர் தகுந்த ஆதாரங்களைக்காட்டி பெற்றுக்கொள்ளுமாறு பொலிஸ் நிலைய அதிகாரி தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் மனித உரிமை மீறல்கள் குறித்து ஹவார்ட் பல்கலையில் ஆராய்வு

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஹவார்ட் பல்கலைக் கழகத்தினால் நடத்தப்பட்ட கருத் துப்பட்டறையில் பல கேள்விகளுக்கான விடைகள் ஆராயப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

ஹவார்ட் பல்கலைக்கழகத்தின் மனிதாபிமான கொள்கைகளுக்கும் மோதல்களுக்குமான ஆய்வு மையத்தினால் கடந்த 24 ஆம் திகதி நடைபெற்ற இந்த கருத்துப்பட்டறை தொடர்பான விவாதங்கள் ஐ.நா.வின் மனித உரிமை ஆணைக்குழுவின் அமர்விலும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்த கருத்துப்பட்டறையில் இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் மற்றும் அதனால் ஏற்படும் அரசியல் சவால்கள் குறித்த கேள்விகள் தொடர்பில் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இதில் அமெரிக்காவை தளமாகக் கொண்ட நியூயோர்க் சஞ்சிகையின் ஆசிரியர் ஜோன் லீ அன்டர்சன், அனைத்துலக நெருக்கடிகளுக்கான அமைப்பின் இலங்கைப் பிரதிநிதி அலன் கீனன், இலங்கையின் ஐ.நா.வுக்கான பிரதிநிதி பாலித கோகன, சர்வதேச மன்னிப்புச்சபையின் தலைவர் சாம் சரீபி ஆகியோர் உரையாற்றியிருந்தனர்.

இந்த கருத்தரங்கை சுவிஸ் வெளி விவகார அமைச்சும் அனைத்துலக அபிவிருத்தி நிறுவனமும் இணைந்து மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-2)

# கிபிர் விமான விபத்து தொடர்பான அறிக்கை இருவாரங்களில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

கம்பஹா -யக்கல பிரதேசத்தில் இலங்கை விமானப்படைக்கு உரித்தான இரண்டு கிபிர் ரக விமானங்கள் மோதி விபத்துக்குள்ளான சம்பவம் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு அறிக்கையை சமர்ப்பிக்க இரண்டு வார காலங்கள் செல்லும் என விமானப் படைப்பேச்சாளர் குழுத்தளபதி அன்டி விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

விமானப்படைத் தளபதியினால் அனர்த்தம் இடம்பெற்ற விதம் குறித்து ஆராய 5 பேர் கொண்ட விசாரணை குழுவொன்று நேற்று முன்தினம் நியமிக்கப்பட்டுள்ளது. அந்தக் குழு தற்போது விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் அனர்த்தத்தில் பலியான விமானி லெப்டினன்ட் மொனாத் பெரேராவின் பூதவுடல் தற்சமயம் அவிஸாவளையில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பூதவுடல் காலி கிதுலம்பிட்டியவில் உள்ள அவரின் பிறப்பிடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் இடம்பெறவுள்ளது. (ஸ்ரீ-2)

# தொண்டர் கௌரவிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவை சங்க சண்டிலிப்பாய் பிரிவினர் தமது பிரிவின் தொண்டர்களை கௌரவிக்கும் முகமாக தொண்டர் கௌரவிப்பு விழாவினை இம் மாதம் நடத்துவதற்கு தீர்மானித்துள்ளனர்.

எனவே சண்டிலிப்பாய் பிரிவில் கடந்த 1988 ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ந்து சேவை ஆற்றிய தொண்டர்கள் தமது சேவையினையும் விபரங்களையும் எதிர்வரும் 8 ஆம் திகதிக்கு முன் பிரிவு அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு பிரிவுத் தலைவர் எம். என். இலங்கேஸ்வரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-9)

# போலி ஆவணங்களை சமர்ப்பிக்கும் மாணவர்களுக்கு எதிராக நடவடிக்கை

## பிரித்தானியா அறிவிப்பு

(கொழும்பு)

போலி ஆவணங்களை சமர்ப்பிக்கும் இலங்கை மாணவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பிரித்தானிய அரசாங்கம் அறிவித்துள்ளது.

மாணவர் விசாக்களைப் பெற்றுக்கொள்வதற்காக போலியான ஆவணங்களை சில இலங்கை மாணவர் சமர்ப்பிப்பதாக பிரித்தானிய எல்லை முகவர் நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதத்தில் போலியான முறையில் மாணவர் விசாக்களைப் பெற்றுக் கொள்ள முயன்ற 230 இலங்கையர்களின் விண்ணப்பங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. மாணவர் விசா பெற்றுக் கொள்வதில் மேற்கொள்வதில் மோசடிகள் இடம்பெற்று வருவதனால் தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளப்படுவதாக குறிப்பிடப்படுகிறது.

மோசடிகளில் ஈடுபடுவோர் தொடர்பில் இலங்கை பொலிஸாரிடம் முறைப்பாடு செய்வதற்கு பிரித்தானிய எல்லை முகவர் நிறுவனம் உத்தேசித்துள்ளதாக இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

மாணவர் விசாக்களைப் பெற்றுக்கொள்ளும் பல மாணவர்கள் போலியான ஆவணங்களை சமர்ப்பித்து வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள் தரவாக சோதனை செய்யப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

போலியான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தால் அவர்களது விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் பத்து ஆண்டுகளுக்கு பிரித்தானிய விசா கோரி விண்ணப்பிக்க முடியாத வகையில் தடை விதிக்கப்படவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

கடந்த மாதம் மாணவர் விசா கோரி விண்ணப்பித்த இரண்டு இலங்கையர்கள் தொடர்பில் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஏனைய நபர்களின் ஆலோசனைக்கு அமைய விண்ணப்பதாரிகள் போலியான ஆவணங்களை சமர்ப்பிக்கக்கூடாது என உயர்ஸ்தானிகராலயம் கோரிக்கை விடுத்துள்ளது.

முகவர்களின் ஊடாக அன்றி நேரடியாகவே விண்ணப்பதாரிகள் பிரித்தானியாவிற்கான விசா பெற்றுக்கொள்ள விண்ணப்பிக்க முடியும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# ஆசிரியர்களுக்கான பயிற்சிப்பட்டறை

(அல்வாய்)

யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன் வழிகாட்டல் ஆலோசனை ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 7 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பி.ப. 4 மணிவரை யா/ வேலாயுதம் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஏற்கனவே வழிகாட்டல் ஆலோசனைக்கு தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களையே இச் செயலமர்விற்கு அனுப்பி வைக்குமாறு வடமராட்சி வலய மாணவர் அபிவிருத்தி பிரதிக்கல்வி பணிப்பாளர் திருமதி வி. சுகுமாரன் அறிவித்துள்ளார்.

(ஸ்ரீ-3-19)

# மாற்றுவலுவுடையோர்களுக்கான திறன்வெளிப்பாட்டுப்போட்டி

வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் 21ஆம் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்தப்பட இருக்கும் மாற்றுவலுவுடையோர்களுக்கான திறன் வெளிப்பாட்டுப் போட்டி நாளை மறுதினம் தொடக்கம் 3 நாட்கள் ஆடியாதம் வீதி, திருநெல்வேலியிலுள்ள நிலைய கட்டடத்தில் இச்சங்கத்தின் தலைவர் வைத்திய கலாநிதி ந. சிவராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை பாட்டு, சிறுவர் பழம்பொறுக்குதல், சிறுவர் பந்தெறிதல், சக்கரநாற்காலி ஓட்டம், நடனம், தையல், உயர்நிலை, தையல் அடிப்படை, கதிரை பின்னுதல், தலை அலங்காரம் ,விளக்கு மாறு தயாரித்தல் போன்ற போட்டிகள் நடைபெறவுள்ளன. (ஸ்ரீ-9)

# பொருட்களுக்கான விலை உயர்வினால் பெப்ரவரியில் பணவீக்கம் அதிகரிப்பு

## மத்திய வங்கி அறிவிப்பு

பொருட்களுக்கான விலை உயர்வினால் பெப்ரவரி மாதத்தில் பணவீக்கம் அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

கடந்த ஜனவரி மாதம் 6.8 வீதமாக காணப்பட்ட பணவீக்கம் கடந்த பெப்ரவரி மாதம் 7.8 ஆக உயர்வடைந்துள்ளது.

அண்மையில் நாட்டில் ஏற்பட்ட மோசமான காலநிலையினால் பணவீக்கம் உயர்வடைந்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. உணவுப் பொருட்களுக்கான விலைகள் உயர்வடைந்துள்ளதாகவும் இதனால் தற்காலிகமாக பணவீக்க நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் மத்திய வங்கி அறிவித்துள்ளது.

விவசாய உற்பத்திகள் வழமைக்குத் திரும்பியதும் பொருட்களுக்கான விலைகள் குறைவடையும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறெனினும் எரிபொருட்களுக் கான விலை உயர்வு இலங்கைப் பொருளாதாரத்தை பாதிப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)



தொண்டைமானாறு கெருடாவில் தெற்கு விவேகானந்தா சிக்கன கடன் வழங்கும் சங்கமும் வல்வெட்டித்துறை இலங்கை வங்கியும் இணைந்து வங்கி சங்கம் ஆரம்பித்து பதிவு செய்யும் வைபவம் அண்மையில் இடம்பெற்றது.இந்நிகழ்வில் இலங்கை வங்கி கடன் திட்ட அதிகாரி திருமதி தவச்செல்வன் ராஜலட்சுமி உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட வங்கி வாடிக்கையாளர்களையும் படங்களில் காணலாம். (படங்கள். உடுப்பிட்டிச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகழும் செல்வாக்கும் எப்படி வரும்?



கலைத்துறையைச் சேர்ந்த ஒருவர் என்னைச் சந்தித்தார். ஒரு செல்வந்தனுக்குக் கிடைக்கும் மரியாதையும் மதிப்பும், பிரம்மாவுக்கு இணையான ஒரு படைப்பாளிக்குக் கிடைப்பதில்லையே... ஏன்? என்று வருத்தத்துடன் கேட்டார்.

உண்மையில் யார் படைப்பாளி? படைப்பு ஏற்கனவே கச்சிதமாக



நிகழ்ந்து முடிந்து விட்டது. இருப்பதையெல்லாம் நீங்கள் இப்படியும் அப்படியுமாக மாற்றி அமைத்துக் கொண்டிருக்கிறீர்களே தவிர, புதிதாக எதைப் படைத்தீர்கள்?

ஒரு விஞ்ஞானக்கதை தெரியுமா?

இன்றைக்கு ஐம்பது வருடங்களுக்குப்பிறகு ஒரு தினம்... உலகத்தின் முக்கிய விஞ்ஞானிகள் எல்லோரும் கடவுளின் முன் ஒன்று கூடினர். "மரணத்தைத் தள்ளிப் போடும் மருந்துகளைக் கண்டுபிடித்துவிட்டோம். உயிரை உருவாக்கக் கற்றுவிட்டோம். உணவையும் தண்ணீரையும் தேவையா னளவுக்குத் தயாரித்துவிட்டோம். உலகத்தின் எந்த மூலையில் நடப்பதையும் உடனடியாகக் கவனிக்கும் திறமை பெற்றுவிட்டோம். கடவுளே, உன் எல்லா வேலைகளையும் இப்போது நாங்களே செய்து கொண்டிருக்கிறோம். இனி மேல்நீ எதற்கு? பேசாமல் ரிட்டயர் ஆகிவிடு!" என்றனர்.

கடவுள் சிரித்தார். "ஏதாவது ஒன்றைப் படைத்துக்காட்டுங்கள். நான் ஓய்வெடுக்கப் போய்விடுகிறேன்" என்றார்.

விஞ்ஞானி தன் பக்கத்திலிருந்த களிமண்ணை எடுத்துக்காட்டி, "இதை ஓர் உயிராக்கிக் காட்டட்டுமா?" என்று தலையை நிமிர்த்திக் கேட்டார்.

"அந்தக் களிமண் நான் கொடுத்த தாயிற்றே! முதலில் உங்கள் களிமண்ணை உருவாக்கிக் காட்டுங்கள்" என்றார் கடவுள். விஞ்ஞானிகள் தலை குனிந்தனர்.

இயற்கை கொடுத்ததை ஆதி மனிதன் தனக்குத் தெரிந்தவரை பயன்படுத்தினான். கற்களை ஆயுதங்களாக்கினான். மண்கலங்கள் தயாரிக்கக் கற்றுக்கொண்டான். மரங்களால் வீடுகளை அமைத்தான்.

நீங்கள்?

அதே இயற்கை தந்த வேறு பொருட்களை வைத்து வெடிகுண்டுகளையும் அணுமின் நிலையங்களையும் உருவாக்குகிறீர்கள். றொக்கெற்றுக்களாகவும் விண்வெளிக்கலங்களாகவும் அவற்றை மாற்றிப் பயன்படுத்துகிறீர்கள். நீங்கள் கண்டு பிடிக்காமல் விட்ட உபயோகங்களை அடுத்துவரும் தலைமுறைகள் கண்டுபிடிக்கும். அவ்வளவுதான்!

பூமி உருவான தினத்திலிருந்தே காற்று இருக்கிறது. பல்வேறு அலைவரிசைகளை தனித்தனியே கொண்டு சேர்க்கும் அதிசய குணத்தை அன்றிலிருந்தே அது தனக்குள் வைத்துக் கொண்டுதான் இருக்கிறது. அதைக் கவனித்துத் தனக்கு உபயோகமாக தொலைக்காட்சியையோ, செல்போனையோ தயாரித்துக்கொள்ள மனிதனுக்குத்தான் பல கோடி வருடங்களாயிற்று!

ஏற்கனவே இருப்பதைத்தான் உங்களுக்கு வசதியாக விதம் விதமாகத் திருத்துகிறீர்கள். மாற்றியமைக்கிறீர்கள். பயன்படுத்துகிறீர்கள். மற்றப்படி, நீங்கள் புதிதாக எதைப்படைத்து விட்டதாகப் பெருமை கொள்ளமுடியும்?

நீங்கள் ஓவியராக இருக்கலாம். எழுத்தாளராக இருக்கலாம். பாடகராக இருக்கலாம். எந்தக் கலைத்துறையிலும் இருக்கலாம். நீங்கள் செய்வது முதலில் உங்களுக்கு ஆனந்தம் தர வேண்டும். அப்போதுதான் உங்கள் திறமையை உங்ளுக்கு விருப்பமான விதத்தில் வெளிப்படுத்த முடியும். அப்படி வெளிப்படுத்தும் விதத்தில், மற்றவர்கள் மகிழ்ச்சியோடு இருப்பதற்கு நீங்கள் உபயோகமாக இருக்கிறீர்களா?

பாரமாக அழுத்தும் பிரச்சினைகளை மறந்துவிட்டு, சில மணிநேரமாவது அவர்கள் அமைதியாக இருக்க நீங்கள் பயன்படுகிறீர்களா?

அது போதும். நீங்கள் சிறந்த படைப்பாளி என்று கொண்டாடப்படுவதை விட அது மேன்மையானது! உங்களை விட அடுத்தவர் செல்வாக்கோடு இருந்தால், இருந்து விட்டுப் போகட்டுமே? உங்களைக் குறைத்து மதிப்பிட்டு விட்டுத்தான் போகட்டுமே? நீங்கள் எந்த மதத்திலிருந்து வந்தாலும் உங்கள் கடவுள் எப்படி இருக்கிறார்? அவர் மீது பூச்சொரிந்து பூரிப்பதால், உடனே சலுகைகள் காட்டுவதுமில்லை அவர் மீது காறிஉமிழ்வதால், உடனே தண்டனை கொடுப்பதுமில்லை.

போற்றலையும் தூற்றலையும் பொருட்படுத்தாமல் அவருடைய செயலை நூறு சதவிகித ஈடுபாட்டோடு தொடர்ந்து செய்கிறார். உண்மையான படைப்பாளிக்கு அதுதானே அழகு? கலைத்துறை என்றில்லை, எத்துறையானாலும் உங்களுக்கு மட்டுமல்லாது சுற்றியுள்ளவர்களுக்கும் ஆனந்தமான சூழ்நிலையை உருவாக்கித் தாருங்கள்.

அன்பைக் குழைத்து முழுமையான ஈடுபாட்டுடன் உங்கள் திறமையை வெளிப்படுத்துங்கள். புகழும், செல்வாக்கும் தாமாகவே வந்து சேரும்!

ஆன்மீகம் 33

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# ஆற்றுகையும் ஆற்றுகைக் கலைகளும்

01



ஆற்றுகைக்கும், ஆற்றுகைக் கலைகளுக்கும் இடையே நிகழ்த்தும் முறை, நிகழ்வை உள்வாங்கும் முறை என்பவற்றிற்கிடையே பாரிய வேறுபாடுகள் உள்ளன.

**"கொழும்பில் நடைபெற்ற சர்வ தேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"**

ஆற்றுகை , ஆற்றுகைக் கலைகள், அரங்கக் கதைகள் என்பன சாராம்சத்தில் ஒன்று போல தெரியினும் இவற்றினிடையே பாரியவேறு பாடுகள் உள்ளன. ஆற்றுவோர், பார்ப்போர் என்ற இருதரத்தார், இவற்றிற்குத் தேவையென்பது இவற்றின் பொதுப் பண்பாக இருப்பினும் ஆற்றுகைக்கும், ஆற்றுகைக் கலைகளுக்கும் இடையே நிகழ்த்தும் முறை, நிகழ்வை உள்வாங்கும் முறை என்பவற்றிற்கிடையே பாரிய வேறுபாடுகள் உள்ளன. இவ்வண்ணமே ஆற்றுகைக் கலைகளுக்கும், அரங்கக்கலைகளுக்கும் இடையிலும் வேறுபாடுகள் உண்டு.

ஆற்றுகை என்பது ஒருவர் முன்போ, பலர்முன்போ ஒருவரோ அல்லது பலரோ ஒன்றைச் செய்து காட்டுவதாகும். என்று நாம் பொதுவாக வரையறுக்கலாம்.

ஆற்றுகை மனித குலத்தோடு இரண்டறப் பிணைந்துள்ள ஒரு செயலாகும். ஆற்றுகையின்றி மனித குலம் சமூகமாக இயங்க முடியாது. பிறந்த குழந்தையைத் தாலாட்டிச் சீராட்டுவது தொடக்கம் இறந்த பிணத்தை குளிப்பாட்டி சடங்காசாரங்களுடன் புதைப்பது அல்லது எரிப்பது வரை பல்வேறு ஆற்றுகைகளை மனித சமூகம் தத்தம் பண்பாடுகளுக்கு ஏற்ப நிகழ்திக் கொண்டே இருக்கிறது. பிறப்புத் தொடக்கம் இறப்புவரையான இடைப்பகுதியில் கோயில் சடங்கு, திருவிழாக்கள், கோயிற்கிரியைகள் திருமணச்சடங்கு, பொழுது போக்கு நிகழ்வுகள் விளையாட்டுக்கள், வேடிக்கைகள், கலைவெளிப்பாடுகள் என பல்வேறு விதமான ஆற்றுகைளை மனிதர் தம் வாழ்வில் நிகழ்த்துகின்றனர். இத்தகைய ஆற்றுகைகளுக்கூடாகவே மனிதர் தமக்குள் உறவுகளையும் தொடர்புகளையும் ஏற்படுத்திச் சமூகமாக வாழ்கின்றனர். ஆற்றுகைகள் சமூக உறவை மாத்திமன்றி ஆற்று வோருக்கும் பார்ப்போருக்குமான உள அழுத்தங்களையும் உளச்சிக்கல்களையும் தீர்க்கும் நோய்தீர் மருந்தாகவும் செயற்படுகின்றன.

ஆற்றுகையை நாம் இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்:-

ஒன்று புதிய ஆற்றுகை இன்னொன்று மரபுரீதியான ஆற்றுகை. மரபு ரீதியான ஆற்றுகையில் இரண்டு பிரதான பண்புகள் உட்பொதிந்துள்ளன.

1) மீளச்செய்தல்
2) தொடர்புகொள்ளல்

முன்பு செய்யப்பட்ட ஒன்றை அல்லது நமது முன்னோர் பாரம்பரியமாகச் செய்த ஒன்றை அல்லது யாரோ ஒருவர் அல்லது குழு எங்கோ செய்த ஒன்றை மீளவும் செய்து காட்டுதல் மீளச்செய்தல் ஆகும். மீளச்செய்தல் மூலமாகவே அடுத்த பண்பான தொடர்புகொள்ளல் ஏற்படுகின்றது. மீளச் செய்தலும், தொடர்பு கொள்ளலும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்தது. இவ்விரு பண்புகளின் ஊடாகவே சமூகம் பண்பாட்டைப் பேணியபடி தொடர்ச்சியுடன் இயங்கி வருகிறது. மீளச்செய்யும் போது முன்பு செய்தவற்றிலிருந்து சிற்சில மாறுபாடுகளும் மேற்கொள்ளப்படும் அம்மாறுபாடுகளை காலம், இடம், களம், சூழல் என்பன நிர்ணயிக்கும்.

மீளச்செய்திலில் ஆற்றுவோரின் உடல்மொழி, குரல், அசைவுகள் ஆடையணிகள், காண்பியங்கள் ஆற்றுகைக்குத் துணைபுரியும் ஏனைய பொருட்கள் என்பன தொடர்பு கொள்ளும் ஊடகங்களாகச் செயற்படும்.

உதாரணமாக கோயில்களில் தீமிதித்தலை நாம் ஓர் ஆற்றுகையெனக் கொண்டால் தீ மிதிக்கச் செல்லும் தெய்வம் ஏறியாடுபவரின் உடலசைவுகள், அபிநயங்கள், அவர் அணிந்திருக்கும் உடை, அவர்மேல் பூசப்பட்டுள்ள குங்குமம், மஞ்சள், அவர் அணிந்திருக்கும் சிலம்பு, கையில் பிடித்திருக்கும் வேப்பமிலைக் கொத்து, அவரின் வாயிலிருந்து வரும் 'ஹா' என்ற உச்சாடனம், இவைகளுடன் தீக்குழி, அதனைச் சுற்றி அதனை வளர்க்கும் பணியாட்கள், அதற்கு முன்னால் வைக்கப்பட்டிருக்கும் மடை, அதிலுள்ள வாழைப்பழம்...போன்ற ஒவ்வொரு பொருட்களும் ஆற்றுகைக்கான தொடர்புசாதனங்கள்தான்.

ஆற்றுகையல் மனிதர் மாதிரமன்றி அவனோடு அல்லது அவளோடு சேர்ந்த அனைத்துமே தொடர்பு ஊடகங்களாக செயற்படும். புதிய ஆற்றுகையில் மீளச்செயதல் பண்பு அதிகம் இராது. ஏனெனில் அவற்றில் எங்கோ முனபு செய்த ஒன்றின் தாக்கம் இருந்து கொண்டிருக்கும். ஊர்வலங்கள், கூட்டங்கள் என்பவற்றை இதற்கு உதாரணங்களாக கொள்ளலாம்.

**பேராசிரியர்.சி.மௌனகுரு**

ஆற்றுகையும் அதன்மூலம் கொள்ளும் தொடர்புகளும் மிக முக்கியமானவை. ஆற்றுகையன்றி சமூக அசைவியக்கம் இல்லை. ஆற்றுகைகள் அதிகமுள்ள சமூகம் விசைவேகம் (dynamic) கொண்ட சமூகமாக இருக்கும் ஒரு குழுமத்தினது அல்லது ஒரு சமூகத்தினது அல்லது ஒரு குழுவினது ஆற்றுகை அக்குழுமத்தின், சமூகத்தின் குழுவின் பண்பாட்டையும், உளவியலையும் அறியும் திறவுகோலாகும். தனி மனித ஆற்றுகைக்கும் இது பொருந்தும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராட்டக்காரர்கள் மீது குண்டுபொழியும் லிபிய விமானங்கள் சுட்டு வீழ்த்தப்படும்

## இங்கிலாந்து பிரதமர் அறிவிப்பு

(லண்டன்)

லிபிய ஜனாதிபதி கடாபிக்கு எதிராக போராடும் மக்கள் மீது குண்டு வீசும் இராணுவ விமானங்களை சுட்டு வீழ்த்துவோம் என்று இங்கிலாந்து பிரதமர் கமரூன் அறிவித்துள்



ளார். அத்தோடு அமெரிக்க போர்க் கப்பல் களும் இராணுவ விமானங்களும் லிபியாவை நோக்கி விரைகின்றன.

### உள்நாட்டு போர்.

லிபியா நாட்டில் சர்வாதிகாரியான கடாபிக்கு எதிராக மக்கள் போராட்டம் நடத்தி வருகிறார் கள். கடாபிக்கு விசுவாசமான இராணுவமும் அவரது ஆதரவாளர்களும் போராட்டம் நடத்




தும் மக்கள் மீது தாக்குதல் நடத்தி வருகிறார் கள். போராட்டக்காரர்கள் மீது இராணுவ விமா னங்கள் குண்டுகளை வீசி வருகின்றன. அந்த நாட்டில் அரசு தரப்புக்கும் போராட்டம் நடத்தும் மக்களுக்கும் இடையே உள்நாட்டுப் போர் ஏற்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

உள்நாட்டுப்போர் ஏற்பட்டால் லிபிய மக்க ளுக்கு ஆதரவாக அமெரிக்க இராணுவமும் இங்கிலாந்து இராணுவமும் இருக்கும் என்று தெரிகிறது.

### பாராளுமன்றத்தில் கமரூன் பேச்சு

இது தொடர்பாக இங்கிலாந்து பிரதமர் கமரூன் பாராளுமன்றத்தில் கூறியதாவது,

லிபியாவில் போராட்டம் நடத்தும் மக்கள் மீது இராணுவம் குண்டுகளை வீசி தாக்கி வருகிறது. தன் சொந்த நாட்டு மக்கள் மீது இர சாயன ஆயுதத்தை கடாபி பயன்படுத்தலாம் என்ற அச்சம் நிலவுகிறது. இந்த நிலையில் தான் லிபியா மீது எடுக்கப்பட்டவேண்டிய இராணுவ நடவடிக்கைகள் குறித்து இங்கிலாந் தும் அதன் நட்பு நாடுகளும் பரிசீலித்து வரு கின்றன.

### சுட்டு வீழ்த்துவோம்

மக்கள் மீது விமானத்தில் இருந்து குண்டு வீசுவதை தடுப்பதற்காக விமானம் பறக்கக் கூடாத பகுதியாக லிபியா அறிவிக்கப் பட இருக்கிறது. இது குறித்து இங்கிலாந்தும் அதன் நட்பு நாடுகளும் பரிசீலித்து வருகின் றன. போராட்டக்காரர்கள் மீது குண்டுவீசும் விமாணங்களை சுட்டு வீழ்த்தவும் பரிசீலணை நடத்தப்பட்டு வருகிறது.

### ஆயுத உதவி

லிபியாவில் கடாபியை எதிர்த்து போராடி வரும் மக்களுக்கு ஆயுதங்களை கொடுத்து உதவுவது தொடர்பாகவும் அமெரிக்காவுடன் ஆலோசனை நடத்தி வருகிறோம். கடாபி மீது இராணுவ நடவடிக்கை எடுக்கப்படும் என கமரூன் தெரிவித்துள்ளார்.

### அமெரிக்க போர்க்கப்பல்கள் விரைகின்றன

லிபியா மீது இராணுவ நடவடிக்கை எடுப் பது தொடர்பாக திட்டங்களை வகுக்கும் படி இங்கிலாந்து முப்படைத் தளபதி ஜெனரல் சர்டேவிட் ரிச்சர்ட்ஸ் கேட்டுக்கொள் ளப்பட்டு இருக்கிறார். இதற்கிடையில் அமெரி க்கா போர் விமானங்களையும் இராணுவ கப்பல் களையும் லிபியாவை நோக்கி அனுப்பியுள் ளது. போர்க்கப்பல்களில் 700 க்கும் மேற் பட்ட அமெரிக்க இராணுவ வீரர்கள் அனுப் பப்பட்டுள்ளனர்.

### கடாபி பேட்டி

இதற்கிடையில் லிபிய ஜனாதிபதி கடாபி பி.பி.சிக்கும் அமெரிக்காவின் ஏ.பி.சி. தொலைக்காட்சிக்கும் பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறுகையில்,

தன் நாட்டு மக்கள் அனைவரும் என்னை நேசிக்கிறார்கள் என்றும் என்னை காப்பாற்றுவதற்காக உயிரையும் கொடுப் பார்கள். எனக்கு எதிராக லிபிய நாட்டு தெருக் களில் போராட்டம் எதுவும் நடக்கவில்லை. மேற்கத்திய நாடுகள்தான் லிபியாவை கைவிட்டு விட்டன. அவை லிபியாவை ஆக்கிரமிக்க முயற்சி செய்கின்றன.நான் பதவி விலகமாட்டேன். ஏனெனில் நான் எந்த பதவியிலும் இல்லை. நான் ஜனாதிப தியோ அல்லது மன்னரோ இல்லை. நான் வகிக்கும் பதவி கௌரப்பதவி தான். அதி காரத்தை செலுத்த என்னிடம் எந்த அதி காரமும் கிடையாது. இங்கிலாந்தில் அதிகா ரம் யாரிடம் இருக்கிறது? ராணி எலிசபெத் திடமா? கமரூனிடமா? வெளிநாட்டுக்காரர் களுக்கு லிபியாவின் அரசியல் நடை முறைபுரியவில்லை. லிபியாவில் அதிகாரம் ஏற்கனவே மக்களிடம்தான் இருக்கின்றன. இவ்வாறு கடாபி கூறினார். (ஸ்ரீ-2)

# நோபல் பரிசு பட்டியலில் விக்கிலீக்ஸ் அசேஞ்ச் பெயர்

(ஒஸ்லோ)



2011 ஆம் ஆண்டுக் கான நோபல் பரிசுப்பட்டி யலில் காட்டிக்கொடுக் கும் இணையத்தளமா னதுவிக்கிலீக்ஸ்இணையத் தளம் இடம் பெற்றுள்ளது. நோர்வே நாட் டினை தலைமையிடமாக கொண்டு செயற் படும் நோபல் பரிசு குழுக் கூட்டம் இடம்பெற்றது.

இதில் இவ்வாண்டிற்கான நோபல் பரிசு க்கு மொத்தம் 241 நிறுவனங்கள் பரிந்து ரைக்கப்பட்டுள்ளன. அத்துடன் அரசியல், பொருளாதாரம், அறிவியல், அமைதி, இலக் கியம் உள்ளிட்ட துறைகளில் சிறந்த பிரமுகர்க ளின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன.

இதில் உலகளவில் கவனத்தினை ஈர்த்த சர்ச்சைக்குரிய இணையத்தளமான வீக் லீக்ஸ் இணையத்தளத்தின் நிறுவுனர் ஜூலி யன் அசேஞ்ச் பெயரும் இடம் பெற்றுள்ள தாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இருப்பி னும் ஜூலியன் அசேஞ்ச் இதனை மறுத்துள் ளார். (ஸ்ரீ-2)



ஏமனில் அரசுக்கெதிராகவும் ஜனாதிபதி அலி அப்துல்லா சலே பதவி விலகக்கோரியும் சனாநகரில் பொதுமக்கள் தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

# லிபிய நிலவரம் தொடர்பாக ஒபாமா -பான் கீ மூன் ஆலோசனை



லிபியாவில் சர்வாதிகாரி முவ ம்பர் கடாபிக்கு எதிராக வெடித் துள்ள கிளர்ச்சியால் அங்கு உருவா கியுள்ள அசாதரண சுழல் குறித்து ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூனும் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவுக்கும் கடந்த திங்கட்கி ழமை ஆலோசனை நடத்தினர்.

வோஷிங்டனில்உள்ளவெள்ளை மாளிகையில் இருவரும் சந்தித் துப் பேசினர். இந்தச் சந்திப்பின் போது லிபியா மட்டுமல்லாது துனி சியா, எகிப்து, பஹ்ரைன் உள்ளிட்ட நாடுகளில் அரசுக்கு எதிராக வெடி த்துள்ள கிளர்ச்சியால் ஏற்பட்டு ள்ள சூழல் குறித்தும் ஆலோ சனை நடத்தினர்.


லிபியாவில் தனக்கு எதிராக வெகுண்டு எழுந்துள்ள மக்களை ஆயுதத்தால் கடாபி ஒடுக்க முயன்று அதில் ஏராளமானோர் பலியாகி வருவதற்கு இரு தலைவர்களும் கவலை தெரிவித்தனர். கடாபியின் இத்த கைய கடும் நடவடிக்கையில் இருந்து அந் நாட்டு மக்களை எப்படி பாதுகாப்பது என்பது குறித்தும் இருவரும் ஆலோசித்தனர்.

லிபியாவில் ஐ.நா. சார்பில் மேற்கொள் ளப்பட்டு வரும் மனிதாபிமான அரசியல் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க அங்கு உயர் நிலைக்குழு ஒன்றை அனுப்பி வைத் துள்ளதாக பான் கீ மூன் தெரிவித்தார். இதைக்கேட்ட ஒபாமா சர்வதேச அளவில் அமைதி நிலவ ஐ.நா. தொடர்ந்து பாடுபட்டு வருவது பாராட்டுக்குரியது என்றார்.

லிபியாவில் ஜனநாயகம் அவசியம் என் பதே மக்களின் எண்ணம். இதை உறுதி செய் யவே அவர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ள னர்.

இந்த லிபிய மக்களின் கிளர்ச்சிக்கு ஆதரவு தெரிவிப்பது தவிர்க்க முடியாதது என்றும் இருவரும் ஒப்புக்கொண்டனர்.

லிபியாவில் மக்கள் கிளர்ச்சி வலுவடைந் துள்ள நிலையில் கடாபி ஜனாதிபதி பதவியைவிட்டு இறங்க இதுவே சரியான தருணம் என்று உலக நாடுகள் வலியுறுத்தி வருகின்றன. கடாபியின் போக்கை அமெ ரிக்கா ஏற்கனவே கடுமையாகக் கண்டித் துள்ளதுடன் அந்நாட்டின் மீது பொருளா தாரத்தடையை விதித்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (ஸ்ரீ)



உலகின் மிக உயரமான கோபுரம் என்ற பெருமையினை ஜப்பானின் தலைநகர் டோக்கியோவில் உள்ள கேன்டான் ஒளிபரப்பு கோபுரம் பெற் றுள்ளது. இதன் உயரம் 2 ஆயிரத்து 80 அடி உயரம் என கணக்கிடப்பட்டுள் ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிபிய அதிபரின் குடும்ப ஆட்சி ஆதிக்கத்திற்கு எதிரான பொதுமக்கள் புரட்சி உச்சமடைகிறது


கடாபி

## நேட்டோ தலையீட்டை நாம் கண்டிக்கவேண்டும், லிபிய மக்களும் கடாபியும் தமக்குள் இணக்கம் காணவேண்டும், தமக்கான பொறுப்புக்களை கடாபி தட்டிக்கழித்துவிட முடியாது என வலியுறுத்துகிறார் பிடல்கஸ்ரோ.


பெர்லுஸ்கானி

கடாபி தனது மக்கள் மீதான தம் தாக்குதலை நிறுத்துவார் என்பதற்கான சூழல் இல்லாதபோது, ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபை ஆதரவுடன் ஈராக்கில் செய்தது போல முதலில் விமான சஞ்சாரமற்ற வான் வெளியை அமெரிக்காவும் மேற்கத்திய நாட்டுத் தலைவர்களும் லிபியாவின் மீது உருவாக்குவார்கள் - பிற்பாடு நேட்டோ படைகள் அங்கு நிலைகொள்வதற்கான சாத்தியம் இருக்கிறது. மறுபடியும் ஒரு ஈராக்காக லிபியா ஆவதற்கான சாத்தியங்களும் உண்டு. இதனைத் தான் பிடல் காஸ்ட்ரோ எதிர்வு கூறியிருக்கிறார்.

இத்தகைய நேட்டோ தலையீட்டை நாம் கண்டிக்க வேண்டும் என்று கூறும் காஸ்ட்ரோ, லிபிய மக்களும் கடாபியும் தமக்குள் இணக்கம் காணவேண்டும் என வலியுறுத்தியிருக்கிறார். தமக்கான பொறுப்புக்களை கடாபி தட்டிக் கழித்துவிட முடியாது எனவும் காஸ்ட்ரோ தெரிவித்திருக்கிறார்.

இந்த நெருக்கடியான சூழலில், பிரித்தானிய அரசு படுகேவலமாகத் தனது காய்களை நகர்த்தியிருக்கிறது. பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹேக் கடாபி வெனிசுலாவுக்கு ஓடிவிட்டதான ஒரு பரப்புரையை கட்டவிழ்த்துவிட்டார். கடாபி இதனை மறுத்தது ஒரு புறமிருக்க, வதந்தியை மறுத்திருக்கும் வெனிசுலா வெளியுறவுத்


கஸ்ரோ

துறையமைச்சர் லிபிய மக்கள் இந்தப் பிரச்சினையில் இறுதித் தீர்ப்பு வழங்குபவர்களாக இருப்பார்கள் எனத் தெரிவித்திருக்கிறார். காஸ்ட்ரோவும் சரி, வெனிசுல அரசும் சரி, கடாபியை ஆதரிப்பது எனும் நிலைபாட்டுக்கு அவர்கள் செல்லவில்லை. கடாபி மக்களது குரலுக்கு செவிசாய்க்க வேண்டும் என்றே அவர்கள் சொல்கிறார்கள். கடாபி இதனைச் செவிமடுப்பார் எனத் தோன்றவில்லை. விளைவாக, இந்தியா, இலங்கை உள்பட உலக நாடுகள் அனைத்தும் தமது பிரஜைகளை லிபியாவிலிருந்து தொடர்ந்து வெளியேற்றிக் கொண்டிருக்கின்றன. கடாபி தனது மக்களின் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறார்.

தமிழ் மக்கள் இனக் கொலை விஷயத்தில் இலங்கையை வெளிப்படையாக ஆதரித்த கடாபியினை மகிந்த ராஜபக்சேவின் அரசு ஆதரிப்பதாகச் செய்திகள் வருகின்றன என்றாலும், மத்திய கிழக்கில் - வட ஆபிரிக்காவில் மறுபடியொரு ஈராக் அமைவதற்கான நோக்கில் தான் கடாபியின் 25 பெப்ரவரி மாலை வரையிலும் 2000 பொதுமக்களைப் படுகொலை செய்திருக்கின்றன கடாபியின் படைகளின் நடவடிக்கைகள், சென்று கொண்டிருக்கின்றன என்பதுதான் வரலாற்றின் துயராக இருக்கப் போகிறது.


முபாரக்

(முற்றும்)






"வாழ்க்கைத் திறனொன்றாக ஆங்கில மொழி" என்ற நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அண்மையில் யாழ்வலய ஆங்கில ஆசிரியர்களுக்கான 10 நாள் செயலமர்வு யாழ் ஆசிரிய நிலையத்தில் நடைபெற்றது. செயலமர்வின் இறுதி நாள் நிகழ்வில் யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி.அ.வேதநாயகம் கலந்து கொண்டு உரையாற்றினார். அருகில் ஆங்கில ஆசிரிய அலோசகர் செ.தயாகரன், இணைப்பாளர் வே.சிறீதரன், ஆசிரிய நிலைய முகாமையாளர் ஞா.இரட்ணசிங்கம் ஆகியோர் இருப்பதையும். கல்விப்பணிப்பாளர் ஆசிரியர் ஒருவருக்கு சான்றிதழ் வழங்குவதை இரண்டாவது படத்திலும். பயிற்சியில் கலந்து கொண்ட ஆசிரியர்களின் ஒரு தொகுதியினரை மூன்றாவது படத்திலும் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்புத் துறையை பலப்படுத்தும் இந்தியா; சீனாவின் மூலோபாய நடவடிக்கையே காரணம்



இந்தியாவின் நிதி மசோதாவில் பாதுகாப்புச் செலவீனங்களுக்கு அதிக நிதி ஒதுக்கப்பட் டுள்ளமைக்கு சீனாவின் மூலோபாய நடவடிக்கைகளே காரணமாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் நாடாளுமன்றத்தில் கடந்த 27ஆம் திகதி அந் நாட்டின் நிதி மசோதா தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இம் மசோதாவில் இவ்வாண்டுக்கான பாதுகாப்புச் செலவீனங்களுக்கு 11.6 சதவீதம் அதிகப்படியான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அயல் நாடான சீனாவின் இராணுவ நடவடிக்கைகளை கண்காணித்த பின்னர் பாதுகாப்பை மேம்படுத் தவே இந்த முடிவை இந்தியா எடுத்துள்ளதாக நிபுணர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு சர்வதேச ஊடக மான ரொய்ட்டர்ஸில் பத்தி எழுத்தாளரான சஞ்சீவ் மிக்லானி தெரிவித்துள்ளார்.

அவர் தனது செய்திக் கட்டுரையில் மேலும் தெரிவித்துள்ள தாவது,

ஏற்கனவே திட்டமிட்டபடி 10.5 பில்லியன் மதிப்புள்ள போர் விமானங்கள் உள்ளிட்ட சில அதி முக்கிய செலவுகளுக்காகவே மிக அதிகமான நிதியை பாதுகாப்புத் துறைக்கு இந்திய அரசு ஒதுக்கியுள்ளமை தெரிய வந்துள்ளது. தற்போது பாதுகாப்புத் துறைக்கு கொள் வனவு செய்யப்படவுள்ள ஜெட் விமானம் உலக நாடுகள் பல பயன்படுத்துவதை விட அதி நவீனமானதாகும்.

சீனாவின் பொருளாதார மற்றும் இராணுவ பலத்தை நன்கு அறிந்து வைத்திருக்கும் நாடுகளில் ஒன்று இந்தியா என்பதால்,எப்போதும் சீனாவை கண்காணிக் தவறுவதில்லை.

இதனடிப்படையில் புலனாய்வு உலங்கு வானூர்திகள், விமானங்கள் மற்றும் இந்தியப் பெருங்கடலில் இருக்கும் ஆழ்கடல் கருவிகள் அனைத்தும் தயார் நிலையிலேயே வைக்கப்பட்டுள்ளன.

2011-2012ஆம் ஆண்டிற்கான நிதி மசோதாவை இந்திய நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்த நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி 1.64 ட்ரில்லியன் ரூபா இராணுவத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். கடந்த வருடம் இது 1.47 ட்ரில்லியன் ரூபாவாக இருந்தது.

சீனாவுடனான இந்திய எல்லைப் பிரச்சினை மிகவும் சவாலான ஒன்று என்றும் பாதுகாப்புத் துறையைப் பொறுத்த வரையில் இதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதும் பாதுகாப்பை பலப்படுத்துவதும் எப்போதும் கருத்தில் கொள்ளப்படும் விடயமே என ஓய்வு பெற்ற முன்னாள் படைத் தளபதி குர்மீத் கன்வால் கூறியுள்ளார்.

ஆனால் அமெரிக்க இராணுவத்தை முக்கிய விரோதியாகக் கருதும் சீனா கடந்த வருடம் 78 பில்லியன் டொலர்களை பாதுகாப்புக்காக செலவிட்டுள்ளது.

சீனாவின் 2011 ஆம் ஆண்டிற்கான பாதுகாப்பு செலவீனங்கள் குறித்த திட்ட அறிக்கை இந்த வார இறுதியில் அந்நாட்டின் நாடாளுமன்றத்தில் வெளியிடப்படலாம் எனத் தெரிகிறது.

2010ஆம் ஆண்டில் மட்டும் போர் தவிர்த்த பிற பாதுகாப்பு தேவைகளுக்காக மட்டும் 530 பில்லியன் டொலர்களை அமெரிக்கா செலவிட்டுள்ளது.

2011ஆம் ஆண்டிற்கான பாதுகாப்பு செலவீனங்களில் 40 வீதம் புதிய பாதுகாப்பு சாதனங்களை கொள்வனவு செய்வதற்கான முதலீடாகவும் எஞ்சிய தொகை உலகின் மிகப் பெரிய இராணுவ அமைப்புக்களில் ஒன்றான இந்திய இராணுவத்தின் பராமரிப்பு பணிகளுக்காகவும் செலவிடப்படும் என்ற தகவலையும் பிரணாப் முகர்ஜி நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இராணுவத்திற்கான எதிர்பார்ப்பை விட குறைந்த அளவிலேயே எப்போதும் செலவுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இனி நாட்டின் பாதுகாப்பு அம்சங்கள் கருத்தில் கொள்ளப்பட்டு அதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் என பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார்.

இதற்காக அவர் வெளியிட்டுள்ள திட்டங்கள் இந்தியாவின் அண்டை நாடுகளான சீனா, பாகிஸ்தான் ஆகியவற்றிடமிருந்து ஏற்படும் தாக்குதல்களை முறியடிக்கவே என்பது தெளிவாகிறது.

இந்த நிதியாண்டிற்குள் இந்திய இராணுவத்திற்கு தேவைப்படும் எதிரிகளை தாக்கி அழிக்கக்கூடிய 126 விமானங்களை கொள்வனவு செய்வதற்கான பேச்சுவார்த்தைகளை இந்திய அதிகாரிகள் முடித்துள்ளனர்.

அதி நவீன போர் விமானங்கள் பலவற்றை கொண்ட நாடு சீனா என்பதோடு மட்டுமல்லாமல் தென்னிலங்கையின் அம்பாந்தோட்டை துறைமுகத்திலும் பாகிஸ்தானின் கவ்தர் துறைமுகத்திலும் சீனா தற்போது திடமானதொரு வலைப்பின்னல்களை உருவாக்கி வருவதை கருத்தில் கொண்டே இராணுவத்திற்கு தேவைப்படும் அதி நவீன விமானங்களை கொள்வனவு செய்வதில் மிகுந்த முனைப்புடன் அதிகாரிகள் செயலாற்றி வருகின்றனர்.

இருப்பினும் இனி இந்தியா எதிர்கொள்ளவிருக்கும் சவால்கள் மிகப்பெரியது என்றும் அவை அனைத்தையும் முறியடிக்க வேண்டுமானால் பாதுகாப்புத்துறைக்கு மேலும் அதிகமான நிதி ஒதுக்கீடு தேவை என்பதையே நிபுணர்கள் பலர் கூறுகின்றனர் என இச் செய்திக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-2)




# ஸ்பெக்ரம் ஒதுக்கீடு தொடர்பான முக்கிய ஆவணங்கள் மாயம்

## மத்திய புலனாய்வுத்துறை தெரிவிப்பு

ஸ்பெக்ரம் ஒதுக்கீடு தொடர்பான முக்கிய ஆவணங்கள் மாயமாகிவிட்டதாகவும் அவற்றை இதுவரை கண்டுபிடிக்க முடியவில்லை எனவும் புதுடில்லி நீதிமன்றத்தில் மத்திய புலனாய்வுத் துறை தெரிவித்துள்ளது.

ஸ்பெக்ரம் ஊழல் விவகாரத்தில் கைதான மத்திய தொலைத்தொடர்புத் துறை முன்னாள் செயலாளர் சித்தார்த் பெகுரா தாக்கல் செய்த பிணை மனு மீதான விசாரணை கடந்த 28ஆம் திகதி மத்திய புலனாய்வுத் துறையின் நீதிமன்றத்தில் இடம்பெற்றது.

இதன்போது அவருக்கு பிணை வழங்கக் கூடாது என மத்திய புலனாய்வுத் துறையின் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து மத்திய புலனாய்வுத் துறையின் தரப்பில் கருத்துத்தெரிவிக்கையில்,

ஸ்பெக்ட்ரம் உரிமம் பெற்ற குறிப்பிட்ட ஒரு நிறுவனத்தின் ஆவணங்கள் மட்டும் திடீரெனக் காணாமல் போய்விட்டன. அந் நிறுவனம் தொலைத்தொடர்புத் துறையில் தாக்கல் செய்த முக்கிய ஆவணங்களை இதுவரை கண்டுபிடிக்க முடியவில்லை. மேலும் சில முக்கிய ஆவணங்களும் மாயமாகியுள்ளன.

ஸ்வான் தொலைத்தொடர்பு நிறுவனத்துக்கு ஸ்பெக்ரம் ஒதுக்கீடு உரிமம் வழங்கப்பட்டதில் விதி மீறல்கள் இடம்பெற்றுள்ளன.

இந்த விவகாரத்தில் ஆ.ராசாவும் பெகுரியாவும் தமது அதிகாரங்களை துஷ் பிரயோகம் செய்துள்ளனர்.

இந்நிலையில் சித்தார்த் பெகுரியாவை பிணையில் விடுதலை செய்தால் அவர் சாட்




சியங்களையும் ஆவணங்களையும் அழித்து விடுவார் எனக் கூறப்பட்டது.

இந்த மனுவை விசாரணை செய்த நீதிபதி ஓ.பி.சைனி இவ் விசாரணையை எதிர்வரும் 9ஆம் திகதி ஒத்திவைத்துள்ளார்.

இந் நிலையில் ஸ்பெக்ரம் ஊழல் வழக்கில் 10 தொலைத்தொடர்பு நிறுவனங்களின் தலைமை நிர்வாக அதிகாரிகள் உட்பட 63 பேரை கண்காணித்து வருவதாக உச்ச நீதிமன்றத்தில் மத்திய புலனாய்வுத்துறை தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-2)



மகாசிவராத்திரியை முன்னிட்டு குஜராத் மாநிலம் ஆமதாபாத் நகரில் உள்ள சக்கோடியா மகாதேவ் எனும் புகழ்பெற்ற சிவன் கோயிலில் இடம்பெற்ற திருவிழாவில் கோயில் அர்ச்சகர் ஒருவர் சங்கு ஊதி விழாவை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

# தூத்துக்குடி வந்த பயணிகள் கப்பல் லிபியாவுக்கு அனுப்பி வைப்பு

தூத்துக்குடி – கொழும்பு இடையே போக்குவரத்தை ஆரம்பிக்க வந்த பயணிகள் கப்பல், இந்தியர்களை மீட்க லிபியாவுக்கு அனுப்பப்பட்டதாக மத்திய கப்பல் துறை செயலர் மோகன்தாஸ் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

தூத்துக்குடி-கொழும்பு இடையே பயணிகள் கப்பலை இயக்குவதற்கு , தூத்துக்குடி துறைமுகம் தயார் நிலையில் உள்ளது. ஆனால் இப்போக்குவரத்திற்காக அங்கு வந்த கப்பல் , லிபியாவுக்கு அனுப்பப்பட்டது. தற்போது , இக்கப்பல் அங்கு உள்நாட்டு கலவரத்தால் பாதிக்கப்பட்ட இந்தியர்களை ஏற்றிக் கொண்டு நம் நாட்டிற்கு திரும்பி வந்து கொண்டிருக்கிறது.

இக்கப்பல் , தொடர்ச்சியாக இந்த மீட்புப் பணியில் ஈடுபடுத்தப்படும். ஏனெனில் இது நாட்டின் தேசிய ஒருமைப்பாடு சம்பந்தப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாகும். இந்தப் பணி முழுமையாக முடிந்த பின்னர் பயணிகள் கப்பல் போக்குவரத்து ஆரம்பிக்கப்படும்.

லிபியாவில் இருந்து இங்கு கப்பலில் இந்தியர்களை அழைத்து வரும் பணியை வெளியுறவுத் துறை அமைச்சகம் , தூதரம் ஆகியன இணைந்து மேற்கொண்டுள்ளன என்றார்.

(ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிபியாவிலிருந்து 200 இலங்கையர்கள் இன்று விமான மூலம் வந்தடைவர்

(கொழும்பு)

லிபியாவின் பேர்த் நகரில் தொழிற்சாலையொன்றில் வெளியேற முடியாமல் சிக்கியிருந்த 29 இலங்கையர்கள் பாதுகாப்பாக சைப்பிரஸிலுள்ள நர்மாட்டா நகருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

அங்கிருந்து பாதுகாப்பாக இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் என லிபியாவின் டிரிபோலி நகரிலுள்ள இலங்கை தூதர் சுதந்த கனேகம ஆராச்சி தெரிவித்துள்ளார்.

டிரிபோலியிலுள்ள இலங்கைத் தூதுவருடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு இலங்கையர்களின் நிலை தொடர்பாகவும், டிரிபோலி நகரின் தற்போதைய நிலை எவ்வாறு என்பது பற்றியும் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

டிரிபோலி நகர் நேற்று முன்தினம் மிக அமைதியாக காணப் பட்டது என்று குறிப்பிட்ட இலங்கைத் தூதர் டிரிபோலிக்கு வெளியே ஆங்காங்கே சிலசில அசம்பாவி தங்கள் நடைபெற்றுக் கொண்டிருந் தாலும் இலங்கையர் டிரிபோலி நகரில் பாதுகாப்பாகவே அவர்கள் தங்கியுள்ள இடங்களிலேயே உள்ளனர்.

டிரிபோலி நகரில் சுமார் 300 க்கும் மேற்பட்ட இலங்கையர்கள் உள்ளனர். இவர்களில் சுமார் 200 பேரை இன்று வியாழக்கிழமை விமானம் மூலம் அனுப்புவதற்கான ஏற்பாடுகளை செய்து வருகின்றோம்.

மிஹின் லங்கா விமானம் ஒன்றை டிரிபோலி விமான நிலையத்தில் தரையிறக்க அனுமதி பெற முடியுமா என்பது பற்றியும் ஆலோசித்து வருகிறோம். அவ்வாறு இல்லையானால் வேறு விமானம் மூலமாவது முதற்கட்டமாக 200 பேரை அனுப்புவது பற்றியும் தகுதி வாய்ந்த அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி வருவதாகவும் கூறினார்.

இதேவேளை டிரிபோலியில் பேர்த் நகரில் தொழிற்சாலையொன்றில் சுமார் 29 இலங்கையர்கள் சிக்கியுள்ளதாகவும் அவர்கள் பல இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருவதாகவும் அறியக் கிடைத்ததையடுத்து அவர்களை அங்கிருந்து பாதுகாப்பாக அப்புறப்படுத்துமாறு தொழிற்சாலை அதிகாரிகளுடன் தொடர்ந்தும் தொடர்பு கொண்டதையடுத்து 29 பேரும் சைப்பிரஸிலுள்ள நர்மாட்டா நகருக்கு கொண்டு செல்லப் பட்டுள்ளனர்.

நர்மாட்டாவிலுள்ள கொன்சியூலர் அலுவலர் இலங்கையர்களை பொறுப்பேற்பதுடன் பாதுகாப்பாக இலங்கைக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்வார் என்றும் சுதந்த கனேகம ஆராய்ச்சி தெரிவித்தார். (ஸ்ரீ-2)


# கண்ணீர் அஞ்சலி



அங்கஜன் ராமநாதனின் இளைஞர் அணி உறுப்பினரும் எமது அன்பு நண்பருமான க.ஜெசீதன் அவர்களின் அன்புத் தாயார்

## கந்தையா செல்லம்மா

அவர்கள் 2011.02.28 அன்று காலமானதையிட்டு துயரமடைவதுடன் அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

யாழ்ப்பாணம்.

அங்கஜன் ராமநாதனின் இளைஞர் அணி நண்பர்கள்.

(சி-2576)



# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



*02.02.2011 அன்று இறைபதம் அடைந்த*

## திருமதி சரஸ்வதி கதிரவேலு

*அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் இரங்கல் செய்திகள் அனுப்பிவைத்தவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் 04.03.2011 அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

க.வசந்தராசா
அல்வாய் கிழக்கு, அல்வாய்.
021-2264414

கதிரவேலு குடும்பத்தினர்.

(சி-2572)


# சந்தேகத்தின் பேரில் இருவர் கைது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கு புத்துயிர் கொடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்ற சந்தேகத்தில் கொழும்பில் கைது செய்யப்பட்ட இருவரை எதிர்வரும் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க வேண்டும் என்று கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

கொழும்பு பிரதான நீதவான் ரஷ்மி வெங்கப் புலி சந்தேக நபர்களான முஹமட் இம்ரான், ஏக்கநாயக்க ஆராச்சிலாகே சுமுது தேசான் ஆகிய இருவரையும் விளக்கமறியலில் வைக்கின்றமைக்கான உத்தரவைப் பிறப்பித்தார்.

கொழும்பில் வாகனங்களை திருடி விற்கின்றமை மூலம் பணம் சம்பாதித்து புலிகள் இயக்கத்துக்கு புத்துயிர் கொடுக்கும் நடவடிக்கைகளுக்காக செலவு செய்து வந்திருக்கின்றனர் என்று இவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-2)


# மரண அறிவித்தல்கள்

## அருளப்பா தியாகராஜா



காரைநகர் சிவன்கோயிலடியைப் பிறப்பிடமாகவும், டென்மார்க்கை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த அருளப்பா தியாகராஜா 27.02.2011 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருளப்பா (உமாரொனிக்)- பத்மாவதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் பூமலர் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மருமகனும் ஆனைக்கோட்டை உயரப்புலத்தைப் பிறப்பிடமாகவும், தற்போது டென்மார்க்கை வசிப்பிடமாகவும் கொண்ட பாலகௌரி (மொழிபெயர்ப்பாளர்) அவர்களின் ஆருயிர்க்கணவரும், அபராஜிதா (மருத்துவபீடம், ஒருஸ் பல்கலைக்கழகம்) அவர்களின் பாசமிகு தந்தையும் உமாதேவி, காலஞ்சென்ற கிருஷ்ணமூர்த்தி மற்றும் சுந்தரமூர்த்தி (டென்மார்க்), சிவராஜா (சங்கீதா ரெக்ஸ், யாழ்ப்பாணம்), தவராஜா (டென்மார்க்), உத்தரை (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கனகேந்திரம் (மருந்தாளர்), சொரூபராணி (டென்மார்க்), சத்தியதேவி, மனோரஞ்சினி (டென்மார்க்), ரவிச்சந்திரன் (கனடா), பிரபாவதி (நெதர்லாந்து), இந்துமதி (ஜேர்மனி), காலஞ்சென்ற தளபதி மற்றும் வளர்மதி (நெதர்லாந்து), ஹேமாவதி (இங்கிலாந்து) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ராஜ்குமார் (நெதர்லாந்து), உதயகுமார் (ஜேர்மனி), ரகுசந்தர் (நெதர்லாந்து), ரவீந்திரகுமார் (இங்கிலாந்து) ஆகியோரின் அன்புச் சகலனும், சர்மிளா, காலஞ்சென்ற தனேந்திரன் மற்றும் கீர்த்தனா, கீர்த்திகா ஆகியோரின் மாமனாரும் சுரேந்திரன், கண்ணதாசன் (பொறியியலாளர், டென்மார்க்) பத்மராணி, பிரதீபன், சிந்துஜா (யாழ். பல்கலைக்கழகம்), நிலானி, பிரியங்கா ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் பிரசன்னா, பிரசாந், அருள்வர்மா, அருள்வாணி, கிரிசிகேசன், ரூபவாணன், சாய்கீதன் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (05.03.2011) சனிக்கிழமை நண்பகல் Vestre Store Kapel, Vestre Kirkegard, Viborgvej 47a, Arhusv Denmarkஇல் நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிவன்கோயிலடி,
காரைநகர்.
தவராஜா: 004597856903
கௌரி : 004597251953

தகவல்:-
அருளப்பா சிவராஜா
(சகோதரன்)
0217902702

(சி-1099)

## திருமதி செல்வநாதன் செல்வநந்தினி (நந்தினி)



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் திருகோணமலை, கோணேசபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வநாதன் செல்வநந்தினி நேற்று முன்தினம் (01.03.2011) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் சுந்தரமூர்த்தி-காலஞ்சென்ற அருந்தவராணி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், செல்வநாதனின் அன்பு மனைவியும், சங்கவியின் பாசமிகு தாயாரும், செல்வரஞ்சினி (கனடா), செல்வபிரிந்தினி ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்வராசா, செல்வமலர், செல்லத்துரை (சுவிஸ்), செல்வநாயகம் (சுவிஸ்), செல்வராணி, செல்வரஞ்சினி, கபிதரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் சரண்யா, தினேஸ், சர்மிளி (கனடா) ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (02.03.2011) புதன்கிழமை பி.ப. 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருகோணமலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

04, கோணேசபுரம்,
உவர்மலை, திருகோணமலை.
026 3262148

தகவல்:-
குடும்பத்தினர்.

(சி-1100)


# கட்சி வெற்றியை தடுப்பதற்கு ஆளும் கட்சியின் சில குழுக்கள் முயற்சி

## ஜனாதிபதி தெரிவிப்பு

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வெற்றியை தடுப்பதற்கு ஆளும் கட்சியைச் சேர்ந்த சில குழுக்களே முயற்சித்து வருவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆதரவாளர்கள் வெற்றிலைச் சின்னத்திற்கு மட்டுமே வாக்களிக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். அநுராதபுரம் சல்காது மைதானத்தில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தேர்தலில் போட்டியிடுவதற்காக 10 ஆயிரம் பேர் விண்ணப்பம் செய்திருந்ததாகவும் உண்மையில் 4 ஆயிரம் பேருக்கு மட்டுமே சந்தர்ப்பம் அளிக்கக்கூடிய சாத்தியம் காணப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

போட்டியிடுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படாத காரணத்தினால் அதிருப்தியடைந்தவர்கள் இவ்வாறு வேறு கட்சிகளுக்கு ஆதரவளித்து வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஏனைய கட்சி வேட்பாளர்களுக்கும் பிரசாரம் செய்யும் உரிமை காணப்படுவதாகவும் இதனால் வேறு கட்சி உறுப்பினர்களை தாக்க வேண்டாம எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

காலநிலை மாற்றத்தினால் பொருட்கள் சேவைகளுக்கான விலை உயர்வடைந்துள்ளதாகவும் இதற்கான பொறுப்பினை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாதிகளுக்கு நாட்டை தாரை வார்க்க முயற்சி மேற்கொண்டவர்கள் தற்போது அரசாங்க சொத்துக்களை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்பனை செய்வதாக குற்றம் சுமத்தி வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெட்டவர்கள் தங்கள் தவறுகளுக்கு சமாதானம்தேடுவார்கள். நல்லவர்கள் தங்கள் தவறுகளை விட்டுப் பிரிவார்கள். *- பென் ஜான்சன்*

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# அமெரிக்கா... ஏதோ செய்யப் போகிறது

சர்வதேச நியமங்களுக்கு அமைவாக போர்க்குற்ற விசாரணைகள் இலங்கையில் மேற்கொள்ளப்படவேண்டும் என அமெரிக்கா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பில் இலங்கை அரசுகளும் விடுதலைப் புலிகளும் பேச்சுக்கள் நடத்தியபோது– யுத்தம் புரிந்தபோதெல்லாம் அதிகம் அலட்டிக்கொள்ளாத அமெரிக்கா, இப்போது இலங்கை மீது அதிக கரிசனை காட்டிவருவது இங்கு நோக்குதற்குரியது.

வன்னி யுத்தம் நடைபெற்றபோது இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இலங்கை அரசு 'கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு' ஒன்றை நியமித்து விசாரணைகளை மேற்கொண்டது.

உலக நாடுகளையும் ஐ.நா.சபையையும் சமாளிக்கும் வகையில் அந்த விசாரணைகள் இடம்பெற்றாலும் அதனை சர்வதேசம் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை இலங்கைக்கான அமெரிக்காவின் மீள்அறிவுறுத்தல் நிரூபித்துள்ளது.

அதேவேளை சர்வதேச அரங்கில் நாடுகள் சிலவற்றின் ஆட்சித் தலைமைகள் சந்திக்கும் பிரச்சினைகளிலும், அந்த ஆட்சி அதிகாரத்தை அகற்றுவதிலும் அமெரிக்காவின் பங்கு காத்திரமாக இருப்பதை மறுப்பதற்கில்லை.

இதன்காரணமாக மக்களின் எதிர்ப்பை சந்தித்துள்ள வெளிநாடுகளின் அரசியல் களநிலைமைகளை இலங்கையுடன் ஒப்பிட்டு நோக்கும் அளவிற்கு உலக அரசியல் திசைதிரும்பியுள்ளது.

நிலைமை இதுவாக இருக்கும்போது இலங்கையின் போர்க்குற்ற விசாரணைகளை சர்வதேச நியமங்களுக்கு அமைவாக மேற் கொள்ள வேண்டும் என அமெரிக்கா கூறியிருப்பது சாதாரண விடயமன்று.

விடுதலைப் புலிகளுடனான யுத்த வெற்றிக்குப் பின்னர் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பில் இலங்கை அரசு அசமந்தமான அணுகுமுறையையே பின்பற்றி வந்துள்ளது.

விடுதலைப் புலிகளை தோற்கடித்த பின்னர் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணப்படும் என்றே யுத்தத்திற்கு முன்னரும் யுத்தம் நடந்து கொண்டிருந்தபோதும் இலங்கை அரசு கூறி வந்தது.

ஆனால் யுத்தம் வெற்றியில் முடிபடைந்த பின்னர் அரசின்போக்கு மாற்றமடைந்தது. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்ற சர்வதேச நம்பிக்கை பலவீனப்பட்டபோது போர்க்குற்ற விசாரணைக்கான அழுத்தம் வலுப் பெற்றுள்ளது.

இதன் அடுத்த கட்டம் அமெரிக்காவின் தலையீடாக இருக்கும். அதற்கான பூர்வாங்கக் கிரிகைகளே அமெரிக்கா விடுக்கின்ற எச்சரிக்கை ஆகும்.

# திருக்கேதீச்சரம் தமிழர் வாழ்வின் மூலக்கருவூலம்

"சிவமாம்" தெய்வத்தின் மேற்தெய்வமில்லெனும் நான்மறைச் செம்பொருள் வாய்மை வைத்த சீர்த்திருத்தேவாரமும், திருவாசகமும் திருக்கேதீச்சரப் பெருமானையும்–பாலாவித் திருத்தீர்த்தத்தையும் மாதோட்டத்தையும் சுட்டும் பாங்கை முதலில் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற வகையில் காணலாம்.

தென்னாடுடைய சிவனை எந்நாட்டவர்க்கும் இறைவனாக தேனினிய செந்தமிழால் ஆற்றுப்படுத்துவது நமது சைவத் திருமுறைகள். இதற்கு மாற்றுமொழி இருக்க முடியாது.

வேதங்கள் 'ஐயா' என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனாக மெய்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடராய் ஆக்குவானும், காப்பானும், அழிப்பானும், அருள்வானுமாக அப்பால் சக்திநிபாதித்தில் உயிர்களை ஆன்ம கோடிகளை வேட்டுக் கொள்பவனாகவும்–உலகை ஆட்டுக்கொள்பவனாகவும், உலக முழுமுதற் கடவுள் சிவன் விளங்குதல் வேத, புராண, இதிகாச சாத்திர, தோத்திரங்களால் விளக்கப்பெறும் பாங்கு ஆறறிவின் மிக்க அனைவராலும் அறியப் பெறும்.

திருக்கேதீச்சரம் தமிழர் வாழ்வின் மூலக் கருநிதியம் என்பது அதன் பண்டை வரலாற்றால் பெரிதும் அறியப்படும். திருக்கேதீச்சரம் வழிபாடு உயர்ந்த போது ஈழத்தமிழர்வாழ்வு உயர்வடைந்த வரலாறும், திருக்கேதீச்சர வழிபாடு தாழ்வு மற்றும் தடங்கல் அடைந்த போது தமிழர் வாழ்வும், தாழ்வும், தடங்கலும் இருளும் நிறைந்ததை கடந்தகால வரலாறுகள் தெளிவில் சுட்டி நிற்றல் காணலாம்.

எனவே நமது வரலாற்றின் உயர்வை உன்னதத்தை வளத்தைத்தரும் வள்ளலாக திருக்கேதீச்சரப்பெருமானும் அம்மை கௌரியும் தம்பால் கொண்டிருத்தல் நம்பால் அணுகி உளங்கௌ வேண்டும். இவ்வகையில் திருக்கேதீச்சரப் பெருமான் மீது திருமுறைப்பதியங்களை பாடியவர்களாக திருஞானசம்பந்தப் பெருமானும் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் கொள்ளப்படுவர்.

மற்றும் திருநாவுக்கரசு சுவாமிகள் திருத்தாண்டகத்திலும் மணிவாசகர் திருவாசகத்திலும் சேக்கிழார் திருப்புராணத்திலும் இத்தல சிறப்பு கூறப்படுதலைக் காணலாம். இவ்வகையில் முதற் கூறிய இரு நாயன்மார்களும் பாடிய பதிகங்கள் பற்றிய ஓர் முக்கிய குறிப்பை இங்கு சுட்டிக்காட்ட வேண்டியது மிகமிக அவசியமும் இன்றைய தேவையுமாகிறது. அவையாவன,

சம்பந்தர்–சுந்தரர் பாடிய இரு பதிகங்களும் பாவநாசப் பதிகங்களாகும். திருக்கேதீச்சரப் பதிகங்களை மாத்திரம் பாவநாசப் பதிகங்களாக இவ்வுணர்வரிய மெஞ்ஞானிகள் ஏன் பாடினர் என்பது வினவற்பாலது.

1500 வருடங்களைக் கடந்து நிற்கும் இம் மெய்ஞானிகளது பாடல்கள் ஈழத்தமிழர் தொடர்ந்து அநுபவித்து வரும் துன்பங்களுக்கு அரிய ஔடதம் என்பது சிந்திப்பார் தம் சிந்தனைக் குணர்வாகி உயிர், உடல், ஊட்டம் பெறுதல் காண்போம்.

அவையாவன முறையே–வரும் திருமுறை பண்ணமர் பாடலடியாக "மாதோட்டம் கருத நின்ற கேதீச்சரங் கை தொழக் கடுவினை அடையாவே...." எனத் தொடங்கும் இவ்வாறான பல்வேறு திருமுறைப் பாடல்களிலும் திருக்கேதீச்சர மகிமை பாடப்பட்டுள்ளது.

## திருக்கேதீச்சரம் பற்றிய விரிவான ஆய்வும் தேடலும் இன்றைய தேவை

அத்துடன் ஆளுடைய நம்பிகள் பாடிய தேவாரத்திருவடிகளும் ஈழத்து திருக்கேதீச்சர பெருமான் பேரில் எழுந்த திருப்பதிகங்களில் காணப்படும் பாவ, சோக, ரோக, வினாசகம் சுட்டும் பகுதிகளாகும்.

சம்பந்தர், அப்பர் சுந்தரர் பாடிய திருப்பதிகங்களுள் பாவநாசப்பதிகம் தவிர்ந்த எத்தலத்துக்கும் இவ்வாறான கருத்துடைப் பதிகங்கள் எழவில்லை. குறிப்பாக ஈழத்தைச் சார்ந்து நிற்கும் (மணிநாகேச்சரம்) நான்கு பதிகங்களில், குறித்த இரு நாயன்மார்கள் பாடிய ஒரே தலம் 70 வீத பாவநாசப் பதிகங்களாக காணப்படுவது இங்கு சிந்திக்கற்பாலது.

நீண்ட காலமாக குறிப்பாக கடந்த மூன்று தசாப்தங்களாக நாம்பட்ட துன்பங்களின் விடிவை வேண்டியவையாக இப்பதிகங்கள் அமைந்து நிற்பதை பாடப்படவேண்டிய முக்கிய தேவையை போற்றப்பட வேண்டிய பொறுப்புணர்வை ஈழத்தமிழர் மாட்டு இப்பதிகங்கள் செப்பிநிற்பதை காணலாம்.

மூர்த்தி, தலம், தீர்த்தத்தால் முதன்மையுற்று விளங்கும் ஈழத்து சிவாலயங்களின் முதன்மை பெறுதலமாக திருக்கேதீச்சரம் விளங்காநிற்பதையும் இத்தலத்தை கூறவந்த அருளாளர்கள் தீர்த்தத்தையும், மாதோட்ட நன்னகரையும் வியந்து கூறும் பாங்கு போற்றுதற்கரியது. ஞானசம்பந்தப்பெருமான் மாதோட்டத்தையும் கேதீச்சர நாதரையும் வியந்து, புகழ்ந்து போற்றுதலும் இறுதிப்பாடலில் பாலாவியை சுட்டி நிற்றலும் ஒருபடி மேலாக சுந்தரர் சுவாமிகள்–மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றையும் தனது அனைத்துப்பாடல்களிலும் போற்றுதல் போற்றுதற்குரியது.

இந்த வகையில் சம்பந்தப்பெருமான்,

'எந்நாளும் கருதுகின்றவூர் கனை கடற்கடிகமழ் பொழிலணி மாதோட்டம்' எனவும் இதேபோன்ற பல்வேறு பாடல் அடிகள் ஊடாகவும் சுட்டி மூர்த்தியையும், தலத்தையும், தீர்த்த மகிமையையும் சுட்டி முன்மொழிந்த இசைஞான மரபை தெள்ளிய ஞானத்தால் உணர்ந்த தம்பிரான் தோழர் வழிமொழிமாறு காண்கிறோம்.

தமது இறுதிப்பாடலில் பாலாவியை சுட்டாமல் மாதோட்டத்தையும் கேதீச்சரத்தானையும் மூர்த்தியையும், தலத்தையும் சுட்டுவதற்காக,

'கறையார்கடல்சூழ்ந்தகழி மாதோட்ட நன்னகருள்....' எனத் தொடங்கும் பாடலால் சுட்டிக்காட்டப்படுகிறது.

கேதீச்சரப்பெருமானை பற்றிய வரலாற்றுச்செய்திகள் நான்கு யுகம்களிலும் மிகச் சிறப்பாக பேசப்படுகின்றன. குறிப்பாக மயநாகனுக்கு தன் திருநடனத்தைக் காட்டியமையால் அவன் சமைத்த ஸ்ரீ நடராஜ தோற்றமே உலகெங்கும் ஓவியமாகவும், விக்கிரமாகவும் பேரருள் சமைத்து நிற்றல் காணலாம். இந் நிகழ்வு நடந்த இடமே மாதோட்டம் திருக்கேதீச்சரம் என்ற ஆழமான கருத்துக்களும் உண்டு.

கி.மு. 5ஆம் நூற்றாண்டில் குறிப்பாக முதற்சங்க காலத்தை அண்டி விஜயன் இலங்கைக்கு காலடி எடுத்து வைத்த காலத்தில் இக் கோயில் பழுதடைந்து இருப்பது கண்டு மனம் வருந்தி இக் கோயிலை சிறப்பாக நிர்மாணித்ததாக வரலாற்றில் காணக்கிடைக்கின்றது. இத் திருத்தலத்தின் இன்றைய வளர்ச்சிக்கு வித்திட்ட பெருந்தகைகள் பலர் என்பது குறிப்பிடத்தக்கது.

சுயம்புவாகவும் தேவர்க்கும் மானுடர்க்கும் விரும்பும் வரங்களை ஈந்து மாதோட்ட நன்னகரை இடமாய் உறைகின்ற திருக்கேதீஸ்வர மகாலிங்கப்புரவையும் அவர் உடனுறையும் அன்னை கௌரியையும் திருமுறை சுட்டும் மேழிசைத்தமிழ் வடிவங்களால் போற்றி உய்தி பெறுவோமாக.

சங்கீதகலாநிதி
டாக்டர் நா.வி.மு.நவரெத்தினம்
தலைவர் இசைத்துறை வளாகம்
யாழ்.பல்கலைக்கழகம்

# காலத்தை கடந்தவர் பகவான் பாபா

இப்பிரபஞ்சப் படைப்பின் காலம் முழுவதும் பகவான் பாபாவின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. இதனாலேயே பகவானை காலத்தின் வடிவம். காலத்தை ஒழுங்கு படுத்துபவர்; காலத்தை அழிப்பவர்; காலமாக உள்ளவர் என்று வர்ணிக்கப்படுகின்றார். பகவானே அருளுகின்ற. புல் நுனி அசைவது கூட எனது சங்கல்ப்பமே என்று லால் பகதூர் சாஸ்திரி இந்தியாவின் பிரதம மந்திரியாக இருந்த வேளை அவருக்கு தியாகராஜ் என்பவர் செயலாளராக இருந்தார். இவருக்கும் மோசமான புற்றுநோய் ஏற்பட்டது. பெங்களூரில் உள்ள மருத்துவமனைக்கு சிகிச்சை பெறச் சென்றார். இவரை பரிசோதிக்க வைத்தியர்கள் புற்றுநோய் மோசமாக பரவி விட்டதாகவும் இன்னும் மூன்று மாத காலம் தான் உயிர் வாழ முடியும் என்றும் தெரிவித்தனர்.

தங்கள் வியாதிக்கு ஒரே ஒரு தீர்வு தான் உள்ளது. பகவான் ஸ்ரீ சத்திய சாயி மலர்ப் பாதங்களில் வணங்கி அவரின் ஆசி பெற்று நோயைக் குணப்படுத்துங்கள். வேறு வழியில்லை என்று அறிவுறுத்தினார்.

இருந்தும் தியாகராஜ் இவ்வறிவுரையை ஏற்றுக் கொள்ளவில்லை. நான் பிரதம மந்திரியின் செயலாளர். வேண்டுமானால் எங்கும் மருத்துவம் கைக்கொள்ள முடியும். எந்தப் பாபாவின் காலிலும் நான் விழவேண்டிய அவசியமில்லை என்று கூறி தன் மனதிற்கு இசைந்த மாதிரி வேறு பல இடங்களில் வைத்தியம் செய்தார். எதுவித பலனும் காணப்படவில்லை. மீண்டும் இரு மாதங்கள் கழித்து அதே மருத்துவ மனைக்கு வந்தார். மருத்துவர் முன்பு சொன்னது போல் அவரது ஆயுள் இன்னும் ஒருமாத காலமே நீடிக்கும் என்றார்.

தியாகராஜ் மிகுந்த கவலையுடனும் ஆர்வத்துடனும் பாபாவிடம் செல்ல முடிவு செய்தார். இவர் புட்டபத்தி சென்று பகவானின் தரிசனத்துக்காக காத்திருந்த போது பகவான் இவரின் அண்மையில் வந்து பான்சர் என்று கேட்டார். தியாகராஜ் உடனே பகவானின் பொற்பாதங்களில் வீழ்ந்து வணங்கினார். அப்போது பகவான் விபூதியை வரவழைத்து உண்ணும்படிகூறினார். மூன்று நாட்களின் பின் பகவான் சாயி (Cancer is Cancelled) கான்சர் நீக்கப்பட்டு விட்டது என்றார்.



யாதவன்

இதன் பின்பு நடைபெற்ற மருத்துவப் பரிசோதனையில் அவருக்கு கான்சரின் அறிகுறிகள் எதுவுமே தென்படவில்லை. இச்சம்பவம் 30 வருடங்களுக்கு முன் நிகழ்ந்தது. இன்று வரை தியாகராஜ் பகவானின் பிரசாந்தி நிலையத்தில் சனாதன சாரதி அலுவலகத்தில் பணி புரிந்து வருகின்றார். இந்நிகழ்ச்சி 30 வருடங்களுக்கு மேல் நீடித்து காலத்தைக் கடந்தவர் பகவான் பாபா என்பதை காட்டுகின்றது.

ஜெய் சாய்ராம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கிண்ண கிரிக்கெட்

திருவிழா 2011
பெப்ரவரி 19 – ஏப்ரல் 02
ICC Cricket World Cup 2011

## உலகக் கிண்ண தொடரில் சூதாட்டம்!

### ஐ.சி.சி. விசாரணை | வோர்னுக்கு சிக்கல்

(கராச்சி)

உலகக் கிண்ண தொடரில் அவுஸ்திரேலியா, சிம்பாவே அணிகளுக்கிடையிலான போட்டியில் சூதாட்டம் நடந்திருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஐ.சி.சி. விசாரணையில் ஈடுபட்டுள்ளது.

தவிர இந்திய, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான போட்டி சமனிலையாகும் என்று ஷேன் வோர்ன் எப்படிக் கணித்தார் என்றும் கேள்வி எழுந்துள்ளது.

கடந்த வருடம் வோட்ஸில் இங்கிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் 'ஸ்பொட் பிக்சிங்'கில் (ஆட்ட நிர்ணயசதி ஈடுபட்ட பாகிஸ்தான் அணி வீரர்கள் சல்மான் பட் (10ஆண்டுகள்), முகமெட் ஆசிப் (7 ஆண்டுகள்), முகமெட் அமீர் (5 ஆண்டுகள்) ஆகியோருக்கு சமீபத்தில் தான் ஐ.சி.சி தண்டனை வழங்கியது.

இதனால் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரை ஐ.சி.சி. தீவிரமாக கண்காணித்து வருகிறது.

இருப்பினும், கிரிக்கெட் உலகை சூதாட்டத்தின் நிழல் மீண்டும் படர்ந்துள்ளது.

கடந்த பெப்ரவரி 25 ஆம் திகதி அவுஸ்திரேலியா, சிம்பாவே அணிகளுக்கிடையான லீக் ஆட்டம் அகமதாபாத்தில் நடந்தது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணிக்கு வோட்ஷன்–ஹடின் இணைந்து மந்தமான ஆரம்பத்தை வழங்கினர்.

முதல் 11 ஓவர்களில் 28 ஓட்டங்கள்தான் எடுத்தனர். 15 ஓவர்களின் முடிவில் 53 ஓட்டங்களை எடுத்தனர்.

தவிர, 2 ஓவரில் 5 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது ஐ.சி.சிக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக ஐ.சி.சி ஊழல் தடுப்புக் கண்காணிப்புக் குழுவினர் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

ஆனால், ஐ.சி.சி.யின் இந்தக் குற்றச்சாட்டை அவுஸ்திரேலிய அணியின் பயிற்றுவிப்பாளர் டிம் நீல்சன் மறுத்துள்ளார்.

இது தொடர்பில் நீல்சன் தெரிவிக்கையில்,

எல்லோரும் வோட்சன், ஹடின் மெதுவாக விளையாடியது குறித்துத் தான் பேசுகின்றனர். என்னைப் பொறுத்தவரையில் அவர்கள் நன்றாகவே விளையாடினர்.

சிம்பாவே அணியினர் ஆரம்பத்தில் சுழல்பந்து வீச்சாளர்களை பயன்படுத்தியதால், விக்கெட்டுக்களைப் பாதுகாக்க வேண்டியிருந்தது.

எங்களைப் பொறுத்தவரையில் சரியாகத்தான் விளையாடினோம் என அவுஸ்திரேலிய அணியின் பயிற்றுவிப்பாளர் டிம் நீல்சன் கூறினார்.

**வோர்னுக்கு சிக்கல்**

இதேவேளை இந்திய–இங்கிலாந்து அணிகள் மோதும் போட்டி சமனிலையில் முடியும் என 7 மணி நேரம் முன்னதாகவே, அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் ஷேன்வோர்ன், கணித்ததும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

இதனை இங்கிலாந்து அணித் தலைவர் ஸ்ரொரஸ் பாராட்டினாலும் பல்வேறு தரப்பிலிருந்து சந்தேகம் எழுந்துள்ளது.

ஏனெனில் ஒருவர் கணிக்கும் போது, யாராவது ஒருவர் வெற்றி பெறுவார்கள் என்றுதான் கூறமுடியும்.

மாறாக அவுஸ்திரேலிய வீரர் ஷேன்வோர்ன் மட்டும் சமனிலையில் முடியும் என்று எப்படிச் சொன்னார் என்பது, பலத்த சந்தேகத்தைத் தோற்றுவித்துள்ளது.

## கருத்துக்களம்

### மனதளவில் உறுதியடைந்துள்ளோம்
### இலங்கை அணித்தலைவர் சங்கக்கார



தோல்வியிலிருந்து மீண்டு வந்தது மகிழ்ச்சி அளிக்கிறது. மனதளவில் மிகவும் உறுதியடைந்துள்ளோம். கென்யா அணியின் விக்கெட்டுக்களை விரைவாகவே வீழ்த்த வேண்டுமென நினைத்தோம்.

அதுபோலவே மலிங்கவும் அற்புதமாகச் செயற்பட்டார். அவருடைய 'ரிவர்ஸ் விங்' பந்து வீச்சுத்தான் எங்களுக்குக் கிடைத்துள்ள ஆயுதம். மலிங்க சம்பியன் பந்துவீச்சாளர் என்பதை நிரூபித்துள்ளார் என இலங்கை அணித் தலைவர் குமார் சங்கக்கார தெரிவித்தார்.

## 'ஹட்ரிக்' தோல்வியால் மூட்டை கட்டுது கென்யா

உலகக் கிண்ணத் தொடரில் கென்யா அணி தொடர்ச்சியாக 3 தோல்விகளைச் சந்தித்துள்ளது.

கென்யா அணிக்கு 3 ஆட்டங்கள் உள்ளது. இதில் அவுஸ்திரேலியா, கனடா, சிம்பாவே ஆகிய அணிகளை எதிர்கொள்கிறது.

கனடா, சிம்பாவே அணிகளை ஒருவேளை வீழ்த்தினாலும் அவுஸ்திரேலிய அணியை வீழ்த்துவதென்பது கென்யா அணிக்கு முடியாத காரியம்.

ஒருவேளை இந்த 3 ஆட்டங்களில் கென்யா அணி இமாலய வெற்றிகளைப் பெற்றால் மட்டுமே காலிறுதி வாய்ப்புக் கிட்டும். இது நடக்க வேண்டுமென்றால் முன்னணி அணிகளில் ஏதாவது ஒன்று தொடர் தோல்வியைச் சந்திக்க வேண்டும்.

இது நடப்பது அரிதுதான். எப்படியும் கென்யா அணி மூட்டை கட்ட இப்போதே தயாராகிவிட்டது.

## விதியை நன்றாக படியுங்கள் தோனி

### ஐ.சி.சி. கண்டனம்



"யு.டி.ஆர்.எஸ். (நான்காவது நடுவரிடம் மேன்முறையீடு செய்யும்) முறையைக் குற்றம் சுமத்த முன், அதைப்பற்றி நன்கு தெரிந்து கொண்டு தோனி பேச வேண்டும்" என ஐ.சி.சி. பொது முகாமையாளர் டேவ் ரிச்சர்ட்ஸன் தெரிவித்துள்ளார்.

உலகக் கிண்ணத் தொடரில் கடந்த 27ஆம் திகதி பெங்களூரில் நடந்த இந்திய – இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ஆட்டம் சமனிலையில் முடிபடைந்தது.

இதில் இரண்டு அணிகளும் 338 ஓட்டங்களைக் குவித்தன.

இப்போட்டியில் முக்கியமான கட்டத்தில் இங்கிலாந்து வீரர் பெல் 17 ஓட்டங்கள் எடுத்தபோது யுவராஜ் பந்தில் எல்.பி.டபிள்யூ., ஆட்டமிழப்பு கொடுக்க களநடுவர் பில்லி பவுடன் மறுத்தார்.

யுடிஆர்.எஸ். முறையில் அணித் தலைவர் தோனி முறையிட்டும் நீதி கிடைக்கவில்லை. வீடியோ மீள்பார்வையில் ஆட்டமிழப்பு தெளிவாகத் தெரிந்தும் நான்காவது நடுவர் 2.5 மீற்றர் இடைவெளியில் பந்து சென்றதைக் காரணம் காட்டி ஆட்டமிழப்பு கொடுக்க மறுத்துவிட்டார்.

இதுகுறித்து கருத்து தெரிவித்த தோனி, 'ஹாக் ஐ' தொழில் நுட்பத்தில் பந்து ஸ்டொம்புகளைத் தாக்குகிறது என்றால், அப்புறம் எதற்கு ஆட்டமிழப்புத் தரமறுக்கிறார்கள். ரிவ் யூ தொழில் நுட்பமும் தவறு செய்கிறது என்றார்.

இந்திய அணித்தலைவர் தோனியின் மேற்படி கருத்துக்கு ஐ.சி.சி. கண்டனம் தெரிவித்துள்ளது. இது குறித்து ஐ.சி.சி. பொதுமுகாமையாளர் டேவ் ரிச்சர்ட்ஸன் தெரிவிக்கையில்,

ரிவ் யூ முறையில் பல்வேறு விதிகள் அடங்கியுள்ளன. பெரும்பாலான நேரங்களில் இதிலுள்ள அனைத்து விதிகள் பற்றியும் வீரர்கள் அறியாமல் உள்ளனர்.

ரிவ்யூ முறையின் மீது இந்திய அணித்தலைவர் தோனி குற்றம் சுமத்தும் முன், இதைப்பற்றி நன்கு தெரிந்துகொள்ள வேண்டும்.

அப்படி தெரிந்து கொண்டிருந்தால், நடுவர்கள் எடுத்த முடிபு சரிதான் என்பதை ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன் என்றார் டேவ் ரிச்சர்ட்ஸன்.

## சூதாட்டப் புகாரில் இந்தியாவில் வழக்கு: அணியில் வாய்ப்பை மறுத்தார் சாமுவேல்ஸ்

(கிங்ஸ்டன்)

சில ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் வந்த மேற்கிந்தியத் தீவுகள் அணியில் இடம்பெற்ற சாமுவேல்ஸ், சூதாட்டப் புகாரில் மாட்டிக்கொண்டார்.

இதனால் உலகக் கிண்ணத் தொடரில் பங்கேற்பதற்காக இந்தியாவுக்குச் சென்றால் பொலிஸார் கைது செய்துவிடலாம் என்று மேற்கிந்தியத் தீவுகள் அணியில் இடம்பெற மறுத்துவிட்டார்.

உலகக் கிண்ணத் தொடருக்கான மேற்கிந்தியத் தீவுகள் அணியில் இடம்பெற்றிருந்த துணைத் தலைவர் டயான் பிரவோ, தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஆட்டத்தின் போது இடது கால்முட்டியில் காயமடைந்தார்.

காயம் குணமாவதற்கு 4 வாரங்கள் ஆகுமென மருத்துவர்கள் கூறியதால், உலகக் கிண்ணத் தொடரிலிருந்து டயான் பிரவோ விலகிவிட்டார்.

அணியில் ஆணிவேராகத் திகழ்ந்த டயான் பிரவோவுக்குப் பதிலாக தகுந்த வீரரைச் சேர்க்க மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபை தீவிர கவனம் செலுத்தியது. இதன்படி சகலதுறை வீரர் மார்லன் சாமுவேல்ஸை சேர்க்க முடிபு செய்தனர்.

ஆனால் சாமுவேல்ஸ், பிரவோவுக்குப் பதிலாக அணியில் இடம் பெற மறுத்துவிட்டார்.

**காரணம் என்ன?**

கடந்த 2007ஆம் ஆண்டு மார்ச் மாதம் இந்திய சுற்றுப்பயணத்தின் போது சூதாட்ட சர்ச்சையில் சாமுவேல்ஸ் சிக்கினார்.

நாக்பூரில் நடந்த இந்திய அணிக்கு எதிரான ஒருநாள் போட்டிக்கு முன்பாக, அணியின் தகவல்களை அவர் சூதாட்ட முகவர் முகேஷ் கொச்சாரியிடம் இரகசியமாகப் பரிமாறிக் கொண்டதை நாக்பூர் பொலிஸார் கண்டுபிடித்தனர்.

இது தொடர்பில் பொலிஸார் சாமுவேல்ஸிற்கு எதிராக வழக்குப் பதிவுசெய்தனர். அந்த வழக்கு இன்னும் நிலுவையிலுள்ளது.

இதற்கிடையே ஐ.சி.சியின் உத்தரவின்படி சாமுவேல்ஸ் மீது நடவடிக்கை எடுத்த மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபை, அவருக்கு இரண்டு ஆண்டுகாலம் விளையாடத் தடை விதித்தது. அந்தத் தடைக் காலம் கடந்த மே மாதத்துடன் முடிபடைந்துவிட்டது.

அதன்பின்னர் உள்ளூர் போட்டிகளுக்குத் திரும்பிய சாமுவேல்ஸ் தற்போது அனல் பறக்கத் துடுப்பெடுத்தாடி வருகிறார். ஜமேக்கா அணிக்காக விளையாடி வரும் அவர், கயானா அணிக்கு எதிராக 250 ஓட்டங்களும் பார்படோஸ் அணிக்கு எதிராகச் சதமும் அடித்துள்ளார்.



துடுப்பாட்டத்தில் நல்ல நிலையிலுள்ள சாமுவேல்ஸிற்கு உலகக் கிண்ண அணியில் வாய்ப்பு வழங்க மேற்கிந்திய கிரிக்கெட் சபை முன் வந்தும் அவர் மறுப்பதற்குப் பொலிஸ் பீதிதான் காரணம்.

இந்தியாவுக்குச் சென்றால் சூதாட்டப் புகாரில் நாக்பூர் பொலிஸார் தன்னைக் கைது செய்யக்கூடும் என்று பயப்படுகிறாராம்.

இதன் காரணமாகத்தான் சாமுவேல்ஸ் வாய்ப்பைத் தட்டிக் கழித்து விட்டதாக மேற்கிந்தியத் தீவுகள் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

**புதுமுக வீரருக்கு வாய்ப்பு**

இதனையடுத்து பிரவோவுக்குப் பதிலாக புதுமுக சுழற்பந்து வீச்சாளர் தேவேந்திர பிஷூ சேர்க்கப்பட்டுள்ளார். 25 வயதான பிஷூ இதுவரை சர்வதேச கிரிக்கெட்டில் விளையாடியதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கிண்ண கிரிக்கெட் திருவிழா 2011

பெப்ரவரி 19 - ஏப்ரல் 02

ICC Cricket World Cup 2011

## பெங்களூரில் ரன் மழை

# கெவின் ஓ பிரைன் ஜெற் வேக சதம்

# அயர்லாந்து அணி சாதனை வெற்றி

## இங்கிலாந்து அதிர்ச்சி




(பெங்களூர்)

கெவின் ஓ பிரைனின் அதிவேக சாதனைச் சதத்தின் மூலம் அயர்லாந்து அணி மிகப்பெரிய இலக்கை அடைந்து இங்கிலாந்து அணியை 3 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

பத்தாவது உலகக்கிண்ணத் தொடர் பங்களாதேஷ், இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளில் நடைபெற்று வருகிறது.

இதில் பெங்களூரில் பகலிரவு ஆட்டமாக நடைபெற்ற 15ஆவது லீக் போட்டியில் பி பிரிவைச் சேர்ந்த இங்கிலாந்து -அயர்லாந்து அணிகள் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணிக்கு தலைவர் ஸ்ரொரஸ்-பீற்றர்ஸன் ஜோடி அதிரடி ஆரம்பத்தை வழங்கினர்.

இந்தஜோடி முதலாவது விக் கெட்டுக்காக 13.3 ஓவர்களில் 91 ஓட்டங்களை பகிர்ந்தபோது அணித் தலைவர் ஸ்ரொரஸ் 37 பந்துகளில் (2 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட)34 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த திரோட் சிறப்பாக ஆட மறுமுனையில் கெவின் பீற்றர்சன் 40 பந்துகளில் அரைச் சதம் கடந்தார். எனினும்கெவின் பீற்றர்சன் 50 பந்துகளில் (07 பவுண்டரிகள்,02 சிக்ஸர்கள் அடங்கலாக) 59 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த திரோட் -பெல் ஜோடி பொறுப்பான ஆட்டத்தை வழங்கி நம்பிக்கை அளித்தனர்.

இந்த ஜோடி ஆரம்பத்தில் நிதானமாக ஆடி பின் அதிரடி காட்ட இங்கிலாந்து அணியின் ஓட்ட எண்ணிக்கை வேகமாக அதிகரித்தது.

இதில் திரோட் 55 பந்துகளில் அரைச்சதம் பெற இங்கிலாந்து அணி 33.3 ஓவர்களில் 200 ஓட்டங்களைத் தாண்டியது.

மறுமுனையில் இயன் பெல் 61 பந்துகளில் அரைச்சதம் கடந்தார்.

இந்த ஜோடி மூன்றாவது விக்கெட்டுக்காக 26 ஓவர்களில் 167 ஓட்டங்களை இணைப்பாட்டமாகச் சேர்த்தபோது இயன் பெல் 86 பந்துகளில் (06 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 81 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து கொலின்வூட் களமிறங்க மறுமுனையில் திரோட் 92 பந்துகளில் (09 பவுண்டரிகள் உட்பட) 92ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

பின் வரிசையில் பிரிர் 06, கொலின்வூட் 16, பிரேஸ்மன் 04, யார்டி 03 ஓட்டங்களுடன் வெளியேற இங்கிலாந்து அணி 50 ஓவர்கள் நிறைவில் 08 விக்கெட்டுக்களையிழந்து 327 ஓட்டங்களை எடுத்தது.

பந்துவீச்சில் மோனி 04 விக்கெட்டுக்களையும், ஜோன்ஸ்ரன் 02 விக்கெட்டுக்களையும், டொக்ரெல், ஸ்ரிர்லிங் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 328 ஓட்டங்கள் என்ற கடின இலக்குடன் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி அளித்தது. ஆட்டத்தின் முதலாவது பந்திலேயே அணித்தலைவர் போர்டர் பீல்ட் பூச்சியத்துடன் ஆட்டமிழந்தார்.

எனினும் இரண்டாவது விக்கெட்டுக்காக இணைந்த ஸ்ரிர்லிங்-ஜொய்சி ஜோடி பொறுப்பான ஆட்டத்தை வழங்கி அணியை சரிவிலிருந்து மீட்டனர்.

இந்த ஜோடி இரண்டாவது விக்கெட்டுக்காக 58 பந்துகளில் 62 ஓட்டங்களைச் சேர்த்தபோது ஸ்ரிர்லிங் 28 பந்துகளில் (05 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 32 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்துவந்த நெய்ல் ஓ பிரைன் 29 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்து நீண்டநேரம் நிலைக்கவில்லை.

தொடர்ந்து ஜொய்சி 61 பந்துகளில் (03 பவுண்டரிகள் உட்பட) 32 ஓட்டங்களுடனும் வில்ஸன் 03 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க அயர்லாந்து அணி 24.2 ஓவர்களில் 111 ஓட்டங்களை எடுத்து 05 விக்கெட்டுக்களையிழந்து தடுமாறியது.

இந்நிலையில் இணைந்த கெவின் ஓ பிரைன்- குசாக் ஜோடி அற்புதமான இணைப்பாட்டத்தை வழங்கினர்.

இதில் கெவின் ஓ பிரைன் வான வேடிக்கை காட்ட அயர்லாந்து அணியின் ஓட்ட எண்ணிக்கை வேகமாக உயர்ந்தது.

இங்கிலாந்து அணியின் பந்து வீச்சாளர்களை நிலைகுலைய வைத்த கெவின் ஓ பிரைன் 30 பந்துகளில் அரைச்சதம் பெற அயர்லாந்து அணி 34 ஓவர்களில் 200 ஓட்டங்களை எட்டியது.

தொடர்ந்து அதிரடி காட்டிய கெவின்ஓபிரைன்50பந்துகளில்அதிவேக சதமடித்து சாதனை படைத்தார். இது ஒருநாள் போட்டியில் அவரின் இரண்டாவது சதம் என்பதுடன் உலகக்கிண்ணத் தொடரில் முதலாவது சதமாகும்.

மறுமுனையில்சிறப்பான இணைப்பை வழங்கிய குசாக் 58 பந்துகளில் (03 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 47 ஓட்டங்களை எடுத்து ரன்-அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.

இந்த ஜோடி 06வது விக்கெட்டுக்காக 103 பந்துகளில் 162 ஓட்டங்களைக் குவித்தது.

அடுத்துவந்த மோனியும் அதிரடிகாட்ட இங்கிலாந்து அணியினர் நிலைகுலைந்தனர்.

இதில் கெவின் ஓ பிரைன் 63 பந்துகளில் (13 பவுண்டரிகள், 06 சிக்ஸர்கள் அடங்கலாக) 113 ஓட்டங்களை குவித்து ரன்- அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.

இறுதியில் அயர்லாந்து அணி 49.1 ஓவர்களில் 07 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 329 ஓட்டங்களைப் குவித்து உலகக் கிண்ணத் தொடரில் சாதனை வெற்றிபெற்றது.

இதன்மூலம் தொடரில் இரண்டாவது போட்டியில் விளையாடிய அயர்லாந்து அணி முதலாவது வெற்றியைப் பெற்று 02 புள்ளிகளைப் பதிவு செய்தது.

இதில் மோனி 30 பந்துகளில் (06 பவுண்டரிகள் உட்பட) 33 ஓட்டங்களையும்ஜோன்ஸ்ரன்07ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் சுவான் 03 விக்கெட்டுக்களையும் அன்டர்சன், ட்ரேஸ்னன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப் போட்டியில் அயர்லாந்து அணியின் வெற்றி நாயகன் கெவின் ஓ பிரைன் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

### பதிலடி சாதனை

இப் போட்டியில் அபாரமாக ஆடிய அயர்லாந்து அணி உலகக் கிண்ண அரங்கில் அதிக ஓட்டங்களை 329/7 விக்கெட் பதிலெடுத்தாடி வெற்றிபெற்று சாதனை படைத்தது.

இதற்கு முன் 1992ஆம் ஆண்டு இலங்கை அணி 313 ஓட்டங்களை (எதிர் சிம்பாவே) பதிலெடுத்து ஆடி வெற்றிபெற்று சாதனை படைத்திருந்தது.

### அதிவேக சதமடித்து சாதனை

இப் போட்டியில் 50 பந்துகளில் 100 ஓட்டங்களை அடித்த அயர்லாந்து வீரர் கெவின் ஓ பிரைன் உலகக் கிண்ண அரங்கில் அதிவேக சதமடித்து சாதனை படைத்தார்.

இவர் அவுஸ்திரேலிய அணி வீரர் மத்யூ ஹைடனின் 66 பந்துகளில் சதமடித்த (தென்னாபிரிக்க அணிக்கு எதிராக- 2007) சாதனையை தகர்த்தார்.

தவிர, சர்வதேச அளவில் அதிவேக சதமடித்தவர்களின் வரிசையில் ஆறாவது இடத்தைப் பிடித்தார்.

இப் பட்டியலில் பாகிஸ்தான் வீரர் சகிட் அப்ரிடி 37 பந்துகளில் சதமடித்து (இலங்கை அணிக்கு எதிராக- 1996) முதலிடத்திலுள்ளார்.

### மறக்காதீர்கள்

இலங்கை எதிர் அவுஸ்திரேலியா

நாளை மறுதினம் பி.ப 2.30

கொழும்பு

### நாளைய ஆட்டங்கள்

world Cup 2011

நியூசிலாந்து எதிர் சிம்பாவே

காலை 9.30

அகமதாபாத்

பங்களாதேஷ் எதிர் மேற்கிந்தியத்தீவுகள்

மாலை 2.30

மிர்பூர்

### இன்றைய கேள்வி ?

இலங்கை அணி 1996 இல் உலகக் கிண்ணத்தை கைப்பற்றியபோது, இறுதிப் போட்டியில் ஆட்ட நாயகன் யார்?

..............................................................

சரியான விடையை எழுதி கீழுள்ள கூப்பனை பூரணப்படுத்தி 06.03.2011 இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர் ஒருவருக்கு நவகலா வழங்கும் பெறுமதியான பரிசு காத்திருக்கிறது.

பெயர்:- ..................................

முகவரி:- ..................................

..................................

தொ.பே:- ..................................

தே.அ.அ.இல:- ..................................

அனுப்ப வேண்டிய முகவரி

'உலகக் கிண்ணம்'
வலம்புரி
இல.3,2 -ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.

### புள்ளிப் பட்டியல்

ICC Cricket World Cup 2011

#### பிரிவு A

| அணிகள் | போட்டி | வெற்றி | தோல்வி | சமனிலை | முடிவில்லை | புள்ளிகள் | நிகர ஓட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| இலங்கை | 3 | 2 | 1 | 0 | 0 | 4 | +2.863 |
| பாகிஸ்தான் | 2 | 2 | 0 | 0 | 0 | 4. | +2.160 |
| அவுஸ்திரேலியா | 2 | 2 | 0 | 0 | 0 | 4 | +1.813 |
| நியூசிலாந்து | 2 | 1 | 1 | 0 | 0 | 2 | +1.507 |
| சிம்பாவே | 2 | 1 | 1 | 0 | 0 | 2 | +0.840 |
| கனடா | 2 | 0 | 2 | 0 | 0 | 0 | -3.850 |
| கென்யா | 3 | 0 | 3 | 0 | 0 | 0 | -4.825 |

#### பிரிவு B

| அணிகள் | போட்டி | வெற்றி | தோல்வி | சமனிலை | முடிவில்லை | புள்ளிகள் | நிகர ஓட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| இந்தியா | 2 | 1 | 0 | 1 | 0 | 3 | +0.870 |
| இங்கிலாந்து | 3 | 1 | 1 | 1 | 0 | 3 | +0.035 |
| மேற்கிந்தியத் தீவுகள் | 2 | 1 | 1 | 0 | 0 | 2 | +1.879 |
| தென்னாபிரிக்கா | 1 | 1 | 0 | 0 | 0 | 2 | +0.768 |
| அயர்லாந்து | 2 | 1 | 1 | 0 | 0 | 2 | -0.207 |
| பங்களாதேஷ் | 2 | 1 | 1 | 0 | 0 | 2 | -0.600 |
| நெதர்லாந்து | 2 | 0 | 2 | 0 | 0 | 0 | -2.275 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிபீர் விமானங்களின் விபத்தால் விமானப்படைக்கு கோடிக்கணக்கில் இழப்பு

(கொழும்பு)

கிபீர் விமான விபத்துக்காரணமாக கோடிக் கணக்கிலான பெரும் நஷ்டம் ஏற்பட்டிருப்பதாக விமானப்படை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. விமானப்படை வட்டாரங்களின் தகவல்களின் பிரகாரம் விபத்துக்குள்ளான விமானங்களின் இன்றைய பெறுமதி 15 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும் என்று தெரியவருகிறது. இலங்கைப் பொறுமதியில் பல கோடி ரூபாய் ஆகும்.

விடுதலைப் புலிகளுடன் யுத்தம் செய்வதற்காக இஸ்ரேலினால் விமானங்கள் விற்பனை செய்யப்பட்டிருந்தன. அமெரிக்க தொழில்நுட்பத்தை பயன்படுத்தி தயாரிக்கப்படும் கிபீர் விமானங்களை வெளிநாடுகள் கொள்வனவு செய்வதாயின் அதற்கு அமெரிக்க ராஜாங்க செயலகத்தின் அனுமதி பெறப்படுவது முக்கியமானதாகும்.

அந்தவகையில் இஸ்ரேலிடமிருந்து இலங்கை, ஈக்குவடோர், கொலம்பிய ஆகிய நாடுகள் மட்டுமே தற்போதைக்கு கிபீர் விமானங்களை கொள்வனவு செய்துள்ளன.

கடந்த காலங்களில் விடுதலைப்புலிகளின் முக்கிய இலக்குகள் மற்றும் தலைவர்களை தேடியழிக்கும் முயற்சியில் இலங்கை விமானப்படைக்கு கிபீர் விமானங்கள் பெரும் பங்காற்றியிருந்தன.

**விமான விபத்தை ஆராய ஐந்து பேர் கொண்ட குழு**

இதேவேளை கம்பகா மாவட்டத்திலுள்ள யக்கல பிரதேசத்தில் 2 கிபீர் வானூர்திகள் மோதி விபத்துக்குள்ளான சம்பவம் தொடர்பில் ஆராய்வதற்காக வான் படை தளபதியினால் 5 பேர் கொண்ட விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

ஏயர் வைஸ் மார்ஷல் கபில ஜெயதிலக தலைமையிலான பிரஸ்தாப குழுவினர் தற்போது விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் விசாரணைக்குழு அறிக்கை சமர்பிக்க இரண்டு வார காலங்கள் செல்லும் எனவும் வான் படை பேச்சாளர் குழுத்தளபதி அண்டி விஜேசூரிய தெரிவித்துள்ளார். (ச-5)




இலங்கை விமானப்படையின் கண்காட்சியை பார்வையிடும் ஜனாதிபதி

# இந்தோனேசியப் போர்க்கப்பல் கொழும்புக்கு வருகை

(சென்னை)

இலங்கைக் கடற்படையுடன் இணைந்து போர்ப்பயிற்சி நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு இந்தோனேசியப் போர்க்கப்பல் ஒன்று நேற்று முன்தினம் கொழும்புத் துறைமுகத்திற்கு வந்துள்ளது.

கொழும்பு துறைமுகத்தில் இன்றுவரை தங்கிநிற்கவுள்ள இப் போர்க்கப்பல் 90.71மீற்றர் நீளமும் 2103 தொன் எடையும் கொண்டதுடன் இக் கப்பலில் 28 அதிகாரிகளும் 70 மாலுமிகளும் பணியாற்றுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப் போர்க்கப்பல் எதிர்வரும் 17ஆம் திகதி மீண்டும் கொழும்புத்துறைமுகம் திரும்பி சிறிலங்கா கடற்படையுடன் இணைந்து போர்ப் பயிற்சி நடவடிக்கையில் ஈடுபட்டபின்னர் 19 ஆம் திகதி புறப்பட்டு இந்தோனேசியா செல்லும்.

இலங்கையில் போர் இடம்பெற்ற காலங்களில் விடுதலைப் புலிகளின் ஆயுதக்கப்பல்களின் போக்குவரத்துக்களை தடுக்கும் நடவடிக்கையில் இந்தோனேசியக் கடற்படையுடன் இணைந்து இலங்கை கடற்படை பணியாற்றியிருந்தது.

அத்துடன் இலங்கையிலிருந்து தற்போது படகுகள் மூலம் அகதிகள் அவுஸ்திரேலியா செல்வதை தடுக்கும்நடவடிக்கையில் இரு நாடுகளின் கடற்படைகளும் நெருக்கமாக இணைந்து பணியாற்றி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ச-5)

# விமானப்படையின் தாக்கு...

விமான படையினர் உட்பட படைத்தரப்பினரின் அர்ப்பணிப்புக்களின் மூலம் மனிதநேய நடவடிக்கையின் போது பெற்ற போர் வெற்றியினை தான் ஒருபோதும் காட்டிக் கொடுக்க மாட்டேன் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

விமானப்படை தனது 60ஆவது ஆண்டு நிறைவு விழாவை நேற்று இரத்மலானை விமானப்படை தலைமையகத்தில் ஆரம்பித்துள்ளது.

இந் நிகழ்வில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு விமானப்படையின் சிறப்பு அணிவகுப்பை பார்வையிட்டபின்னர் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இலங்கையில் போர் இடம்பெற்றகாலத்தில் படைத்தரப்பினரின் அர்ப்பணிப்புகளை மக்கள் ஒரு போதும் மறக்க மாட்டார்கள். அத்துடன் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் போது விமானப்படையினரின் பங்களிப்பு அளப்பெரியது.

தமிழீழ விடுதலைப் புலிகளினால் அழிக்கப்பட்ட நாட்டை கட்டியெழுப்பும் முயற்சியில் முப்படையினர் ஈடுபட்டுள்ளனர். நாட்டின் சரித்திரத்தில் விமானப்படையினர் பாரிய கடமையொன்றை ஆற்றியுள்ளனர். நான்கு விமானங்கள் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட விமானப்படை இன்று புதிய ரக ஆயுதங்களுடன் கூறமுடியாதளவு வளர்ச்சிக் கண்டுள்ளது.

நாட்டில் இடம்பெற்ற யுத்த முன்னகர்வின் போது விமானப்படையினரின் தாக்குதல்களில் அப்பாவி பொதுமக்கள் எவரும் உயிரிழக்கவில்லை. அவ்வாறு இடம்பெற்றிருந்தால் நாட்டின் வரலாறு வேறொரு விதமாக எழுதப்பட்டிருக்கும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

விமானப்படையின் 60ஆவது ஆண்டு நிறைவுவிழா எதிர்வரும் 8ஆம் திகதி வரை இரத்மலானை விமானப்படை தலைமையகத்தில் நடைபெறவுள்ளது. (ச-5)

# மூன்று பெண் போராளி...

தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா கலாசார மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இப் போராளிகள் விடுதலை செய்யப்படவுள்ளனர். இந்நிகழ்வுக்கு புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் சுதந்த ரணசிங்க பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

வவுனியா பூந்தோட்ட புனர்வாழ்வு நிலையத்தில் முன்பள்ளி ஆசிரியர் பயிற்சியை நிறைவுசெய்தவர்களுக்கான சான்றிதழ்களும் இந்நிகழ்வின்போது வழங்கப்படவுள்ளது.

அதேவேளை ஒற்றுமை, சமாதானம், புனர்வாழ்வு நிலைய அனுபவம் மற்றும் எதிர்காலம் போன்ற பல்வேறு தொனிப்பொருள்களில் புனர்வாழ்வுநிலையங்களில்தடுத்து வைக்கப்பட்டுள்ள போராளிகளுக்கு இடையில் ஓவியப் போட்டி இன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாக பிரிகேடியர் சுதந்த ரணசிங்க தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# கிழக்கில் மீண்டும் மழை...

கொள்ளளவை மிஞ்சியதால் நான்கு வான்கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளன.

இதனால் கந்தளாய்ப் பிரதேசத்தில் எஞ்சியுள்ள நெல்வயல்கள் அழிந்து போகும் நிலை உருவாகியுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் கடந்த இரு மாதங்களிலும் இரு தடவைகள் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு அம்மாகாணத்தின் வாழ்வாதாரத்தை பெரும்பாலும் அழித்துவிட்ட நிலையிலேயே மீண்டும் மழை பெய்யத் தொடங்கியுள்ளது.

இந்தியாவை நோக்கி நகரும் தாழ் அமுக்கம் ஒன்றின் விளைவாகவே கடும் மழை பெய்வதாக வளிமண்டல திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ச-5)

# லிபியாவில் அமைதியை...

விதித்துள்ளன.

ஆனால், கடாபி பதவி விலக மறுத்து வருகிறார். அவரது எதிர்ப்பாளர்கள் லிபியாவின் பல நகரங்களை கைப்பற்றிவிட்டனர். இந்நிலையில், அமெரிக்கா அதி நவீன ஏவுகணைகள் மற்றும் போர் விமானங்கள் அடங்கிய போர்க் கப்பலை லிபியாவுக்கு அனுப்பி வைத்துள்ளது.

இது செங்கடல் பகுதியில் இருந்தபடி நிலைவரத்தைக் கண்காணிக்கும் எனத் தெரிகின்றது. லிபிய தலைநகர் திரிபோலி மீது விமானங்கள் பறக்கத்தடை விதிக்கப்பட்டுள்ளது. லிபிய விமானங்கள் அப்பாவி மக்கள் மீது விமானத் தாக்குதல் நடத்தினால் அதைச் சுட்டுத்தள்ளவும் அமெரிக்கா உத்தரவிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

கடாபியை வெளியேற்ற இராணுவ நடவடிக்கையில் இறங்க ஐ.நா., நேட்டோவிடம் அமெரிக்கா அனுமதி பெற்றுள்ளதாகத் தெரிகிறது. எனினும், லிபியா மீது நேரடியாக ராணுவ தாக்குதல் நடத்தப்படாது. கடாபியை ஆட்சியிலிருந்து அகற்றும் போராட்டக்காரர்களை உற்சாகப்படுத்தவும் கடாபியை பதவி விலகச் செய்யவும் இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக அமெரிக்க உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

லிபியா மக்கள் அனைவரும் என் பக்கம். அவர்கள் என்னை நேசிக்கிறார்கள். என்னை பாதுகாக்க தங்கள் உயிரை விடவும் தயாராக இருக்கிறார்கள் என கடாபி நேற்று முன்தினம் அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார். (ச-5)

# அரசுடனான சந்திப்...

செய்தி வெளியிட்டிருந்தன.

இந்நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்பவருமான மாவை சேனாதிராஜா இச் செய்தியை முற்றாக மறுத்துள்ளார்.

அரசாங்கத்துக்கும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் கடந்த முதலாம் திகதி நடைபெறவிருந்த மூன்றாவது கட்டப் பேச்சுவார்த்தையை அரசாங்கம் பிற்போட்டிருந்தது.

அமைச்சர்கள் தேர்தல் பரப்புரைகளில் தீவிரமாக ஈடுபட்டிருப்பதால் இச்சந்திப்பு எதிர்வரும் முதலாம் திகதி நடைபெறாது என தமிழத் தேசியக் கூட்டமைப்புக்கு அரசாங்கத்தின் தரப்பில் அனுப்பப்பட்டிருந்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான அடுத்த சந்திப்பு உள்ளூராட்சித் தேர்தல் முடிந்த பின்னரே நடைபெறும் என்றும் அரசாங்கம் இக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தது.

இந்நிலையில் அரசாங்கத்திற்கும், கூட்டமைப்பின் பிரதிநிதிகளுக்கும் இடையில் இன்று முக்கிய சந்திப்பொன்று இடம்பெறவுள்ளதாக சில ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டிருந்தன. அத்துடன் வடக்குப்பிரதேசத்தில் பொதுமக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து இப் பேச்சுவார்த்தையில் முக்கிய கவனம் செலுத்தப்படும் என்று ஜனா தியின் செயலக வட்டாரங்களில் இருந்து தெரியவருவதாகவும் குறிப்பிட்டிருந்து.

இச்செய்தியை முற்றாக மறுத்துள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாம, மூன்றாவது கட்டப் பேச்சுவார்த்தையை அரசு பிற்போட்டமை குறித்து விசனம் தெரிவித்தார்.

அதேவேளை நாடாளுமன்றம் அடுத்த வாரம் கூடும்போது அமைச்சர்கள் நாடாளுமன்றத்திற்கு சமுகமளிப்பார்கள் என்பதால், எதிர்வரும் 8ஆம் அல்லது 9ஆம் திகதியில் பேச்சுவார்த்தை நடத்த நேரத்தை ஒதுக்கித் தருமாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்தை கேட்டிருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இக் கோரிக்கைக்கு அரசாங்கத்தின் தரப்பில் இருந்து இதுவரை பதில் கிடைக்கவில்லை என கூட்டமைப்பின்நாடாளுமன்றஉறுப்பினர்சுரேஷ் பிரேமச்சந்திரன் இரு தினங்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான அடிப்படைகள் குறித்து ஆராய்வதற்கு அரசாங்கமும், தமிழத் தேசியக் கூட்டமைப்பும் நியமித்த பிரதிநிதிகள் குழு இருதடவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# இலங்கை...

மற்றும் நீரியல்வள அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் அந்தமான் தீவில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள 11 மீனவர்கள் மற்றும் 6 படகுகளை விடுவிப்பதற்கான உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் இவ்வமைச்சு அறிவித்துள்ளது. (ச-5)

# வல்வெட்டித்துறையில்...

திருக்கும்நிலையில்வல்வெட்டித்துறையில் படைத்தரப்பினரால் இவ்வறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

24 மணித்தியாலங்களுக்குள் தம்மைப் பதிவுசெய்து கொள்ள வேண்டும் என பொது மக்களுக்கு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அறிவித்த படைத்தரப்பினர் இந்தப் பதிவுகளுக்கான படிவங்களையும் வல்வெட்டித்துறைப் பகுதியிலுள்ள கடைகளுக்கு கொடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. இதனையடுத்து படையினரும் கிராமசேவை அதிகாரிகளும் நேற்றுமுன்தினம் இரவிரவாக இது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொண்டதாக பிரதேச தகவல்கள் தெரிவித்தன. (ச-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.03.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org